
# பச்சிலை

## இதழ் – 06



### தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்

கண்டல் காடு – தம்பகாமம்

வெளியீடு:
பச்சிலை மலர்க்குழு,
புலோப்பளை பொதுநூலகம்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை – பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11059 PL (Arc)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலை

31 MAY 2022

## இதழ் - 06

## தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்

11059 CPL Arc

வெளியீடு:
பச்சிலை மலர்க்குழு
புலோப்பளை பொதுநூலகம்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை – பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | பச்சிலை |
| இதழ் | - | 6 |
| பக்கங்கள் | - | XIV + 85 |
| அச்சுப்பதிப்பு | - | சக்தி பதிப்பகம்<br>A9வீதி, மீசாலை. |
| மலராசிரியர் | - | திரு. வி. எஸ். புவனராசா |
| வெளியீடு | - | "பச்சிலை மலர்க்குழு"<br>புலோப்பளை பொதுநூலகம்,<br>பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,<br>பளை. |
| தொலைபேசி இல | - | 024 324 3544 |
| மின்னஞ்சல் | - | pallaips@gmail.com |
| கடதாசி | - | 70gsm |
| பக்க அளவு | - | B5 |
| விலை | - | 750/= |
| ISSN | - | 2806 - 5298 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 MAY 2022

## பச்சிலை மலர்க்குழு



நிற்பவர்கள் இடமிருந்து வலமாக: திருமதி சு.ரேவதி, திருமதி ப.சுபாஜினி, திருமதி.அ.தர்மகுலசிங்கம், திருமதி.கோ.இராஜபாஸ்கரன், திரு.செ.கஜானன், திரு.ந.நிரோசன், திரு.சி.புவனராசா, திரு.பொ.கந்தசாமி, திரு.ஆ.பாலசிங்கம், திருமதி.பி.உமாதேவி, திருமதி.இ.ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி.உ.கிருஷ்ணதீபா
இருப்பவர்கள் இடமிருந்து வலமாக: திரு.வே.தங்கராசா, திருமதி.த.தர்சினி, திரு.அ.கேதீஸ்வரன், திரு.சு.சுரேன், திரு.மு.கஜன்

## பிரதேச சபை உறுப்பினர்கள்



நிற்பவர்கள் இடமிருந்து வலம்: கௌரவ உறுப்பினர்களான த.ரமேஸ், வே.கோகுலராஜ், வ.டிசாந்தன், த.சுகந்தி, ஈ.டயாளினி, தி.பிறமிளா, கி.வீரவாகுதேவர், த.துர்சோதனன், வே.வசந்தரூபன்
இருப்பவர்கள் இடமிருந்து வலம்: கௌரவ உறுப்பினர் க.அருள்ச்செல்வி, கௌரவ உபதவிசாளர் மு.கஜன், கௌரவ தவிசாளர் சு.சுரேன், கௌரவ உறுப்பினர் நா.நகுலேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள்



## புலோப்பளை உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிப்பற்று உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



## முகமாலை உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலை மலர்க்குழு

தலைவர் - **திரு. அ. கேதீஸ்வரன்**
(பிரதி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி)

செயலாளர் - **திருமதி. பி. உமாதேவி**
(நூலகர், புலோப்பளை பொதுநூலகம்)

பொருளாளர் - **திரு. ஆ. பாலசிங்கம்**
(உபதலைவர், இத்தாவில் கமக்கார அமைப்பு)

மலராசிரியர் - **திரு. வி. எஸ். புவனராசா**
(ஓய்வுநிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்)

31 MAY 2022

## செயற்குழு உறுப்பினர்கள்

**கௌரவ சு. சுரேன்** (தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திருமதி. த. தர்சினி** (செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திருமதி. உ. கிருஷ்ணதீபா** (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உ.உ.ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி)

**திருமதி. கோ. இராஜபாஸ்கரன்** (நிதி உதவியாளர், நீர்ப்பாசனத்திணைக்களம், கிளிநொச்சி)

**திருமதி. சு. ரேவதி** (முகாமைத்துவ உதவியாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திரு. செ. கஜானன்** (நிறுவுனர், அகரம் கவின்கலை கலாமன்றம்)

**திருமதி. இ. சிறிஸ்கந்தராசா** (ஆசிரியர், கிளி/ தர்மக்கேணி அ.த.க.பாடசாலை)

**திருமதி. அ. தர்மகுலசிங்கம்** (ஓய்வுநிலை நூலகர்)

**திரு. ந. நிரோசன்** (வாசகர் வட்ட உறுப்பினர்)

**திரு. பொ. கந்தசாமி** (தலைவர் - தம்பகாமம் சனசமூக நிலையம்)

**திருமதி. சு. பத்மலகீந்திரன்** (அபிவிருத்தி உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திரு. வே. தங்கராசா** (பொருளாளர், வளர்மதி சனசமூக நிலையம், மாசார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள் விபரம்

| பெயர் | பதவி | தொலைபேசி இல. |
|---|---|---|
| 01. கௌரவ சுப்பிரமணியம் சுரேன் | தவிசாளர் | 0773932980 |
| 02. கௌரவ முத்துக்குமார் கஜன் | உபதவிசாளர் | 0774561879 |
| 03. கௌரவ கிருஸ்ணன் வீரவாகுதேவர் | உறுப்பினர் | 0776366771 |
| 04. கௌரவ கணபதிப்பிள்ளை துர்சோதனன் | உறுப்பினர் | 0775537696 |
| 05. கௌரவ வரதராசா டிசாந்தன் | உறுப்பினர் | 0766543582 |
| 06. கௌரவ வேல்முருகு கோகுலறாஜ் | உறுப்பினர் | 0775301865 |
| 07. கௌரவ அருட்செல்வி கனகராசா | உறுப்பினர் | 0774423703 |
| 08. கௌரவ தவராசா றமேஸ் | உறுப்பினர் | 0777722761 |
| 09. கௌரவ ஈஸ்வரன் டயாளினி | உறுப்பினர் | 0770599040 |
| 10. கௌரவ தயானந்தகுமார் சுகந்தி | உறுப்பினர் | 0776999101 |
| 11. கௌரவ தியோப்பிள்ளை பிரமிளா | உறுப்பினர் | 0773810260 |
| 12. கௌரவ வேலுப்பிள்ளை வசந்தரூபன் | உறுப்பினர் | 0772487618 |
| 13. கௌரவ நாகராசா நகுலேஸ்வரன் | உறுப்பினர் | 0770670456 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பச்சிலைப் பதிவுகள் | பக்கங்கள் |
|---|---|


| | |
|---|---|
| 1) வாழ்த்துச் செய்திகள் | VI - XIII |
| 2) இதழாசிரியரின் பகிர்வு | XIV |
| 3) பச்சிலைப்பள்ளியின் மனிதவளம் பற்றிய பகுப்பாய்வு | 01 - 04 |
| 4) நம்ம ஊருக்கு என்னதான் ஆச்சு? | 05 - 06 |
| 5) கொறோனாவால்.... | 07 - 08 |
| 6) பச்சிலைப்பள்ளியின் நீர்முகாமைத்துவமும் நிகழ்கால மாற்றங்களும் | 09 - 12 |
| 7) இயந்திர உலகு | 13 - 13 |
| 8) வாசிப்பெனும் வார்த்தை | 14 - 14 |
| 9) நேசமென்பது..... | 15 - 17 |
| 10. பச்சிலைப்பள்ளி பண்பாட்டின் நாட்டாரியலின் தனித்துவம் | 18 - 19 |
| 11. மண்ணின் பெருமை | 20 - 21 |
| 12. வாழ்க்கையில் கல்வி அறிவு | 22 - 24 |
| 13. பெண்மையின் ஆழம் | 25 - 27 |
| 14. திசைமாறிய கா(லம்)தல் | 28 - 29 |
| 15. சாதனைக் கிராமமான அரசன் குடியிருப்பு | 30 - 31 |
| 16. கடலாய்வுகளின் வழியே "டைட்டானிக்" ஒரு பார்வை | 32 - 34 |
| 17. தெளிவு | 35 - 37 |
| 18. ஏழைக்குடும்பம் | 38 - 38 |
| 19. அன்றும் இன்றும் | 39 - 39 |
| 20. மனிதமனம் | 40 - 40 |
| 21. விஞ்ஞானத்தின் விந்தை | 41 - 41 |
| 22. வாழ்வின் அர்த்தம் | 42 - 45 |
| 23. சத்தமில்லா வைரஸ் யுத்தம் | 46 - 46 |
| 24. நட்பு | 47 - 48 |
| 25. தேவதாசி மரபு | 49 - 52 |
| 25. தாயன்பு | 53 - 53 |
| 27. ஊடகமாக மரம் | 54 - 58 |
| 28. வேண்டாம் கொரோனா | 59 - 59 |
| 29. வளம் என்பதே வாழ்க்கை, பணம் என்பது பரிமாற்று ஊடகம் | 60 - 61 |
| 30. மனித உடலும் நீரும் | 62 - 67 |
| 31. கொவிட் - 19 இற்கு மத்தியில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தலும் பசுமை வீட்டுத்தோட்ட கருத்திட்டமும் | 68 - 73 |
| 32. பச்சிலைப்பள்ளியும் உள்ளூர் உற்பத்திகளும் | 74 - 76 |
| 33. நீரிழிவிற்கான சுதேச வைத்திய சிகிச்சை முறைகளும் அவற்றின் நன்மைகளும் | 77 - 79 |
| 34. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் - 2020 | 80 - 85 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

**"பச்சிலை" சஞ்சிகை வெளியீடு காலத்தின் தேவை கருதிய கனதியான பணி**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட புலோப்பளை பொதுநூலகம் தனது பணிகளின் தாக்கத்தை படைப்புக்களாக்கி அதற்கு நூலுருக் கொடுத்து ஆறாவது தடவையாக வெளியீடு செய்யும் 'பச்சிலை' சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கல்விப்பண்பாட்டில் தனக்கென தனியிடம் பிடித்து நிற்கும் புலோப்பளை பொதுநூலகம், தன்னால் உருவாக்கம் பெறும் கல்விச் சமூகத்தின் வளர்ச்சியையும், உயர்ச்சியையும் மனதிற் கொண்டு செயற்பட்டு வருவதன் ஓர் அங்கமாக தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களைத் தொகுத்து 'பச்சிலை' என்னும் மண்மணம் கமழும் சஞ்சிகை ஒன்றை வடிவமைத்து ஆண்டு தோறும் வெளியிட்டு வைப்பது வரவேற்கத்தக்கது.

அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்து, மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் வாசிப்பின் மீதான நாட்டத்தை ஏற்படுத்தும் நோக்கோடு பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தி அவர்களின் அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வெளிக்கொணர்ந்து அவர்களையும் இந்த சமூகத்திற்கு தரமான கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும், படைப்பிலக்கியவாதிகளாகவும் அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இச்சஞ்சிகை வெளியிடப்படுவது காலத்தின் பதிவேயாகும்.

எமது மாவட்டத்தின் படைப்பாளர்கள் இலைமறை காய்களாக தமக்குள் புதைந்திருக்கும் திறமைகளை இனங்காண்பதற்கு முடியாமலும், தமக்கு ஏற்ற களங்கள் எதுவுமற்ற சூழலிலும் வெறும் சாமான்ய மனிதர்களாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சூழலில் அத்தகையவர்களின் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஆரம்ப களமாகவும், அடுத்த கட்ட நகர்வுக்கான உந்துதலாகவுமே இச்சஞ்சிகை வெளியீட்டை என்னால் உணர முடிகின்றது.

காலத்தின் பதிவாய், கனதியான பதிப்பாய் பச்சிலைப்பள்ளி மண் பெற்றெடுத்த மைந்தர்களின் பல்துறைசார் ஆக்கங்களோடு தனது ஆறாவது குழந்தையை பிரசவிக்கும் 'பச்சிலை' சஞ்சிகையின் வெளியீடு சிறக்கவும், காலத்தின் தேவையுணர்ந்து செயலாற்றியுள்ள நூலகர்கள், பணியாளர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் உன்னதமான பணிக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்கிநிற்கும் அதே வேளை இச்சஞ்சிகை வருடாவருடம் தொடர் வெளியீடு காண இறையாசிகளை வேண்டிநிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

எமது சபையின் கீழ் இயங்கிவரும் புலோப்பளை பொதுநூலகத்தினால் ஆண்டுதோறும் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழாக வெளியிடப்பட்டு வருகின்ற "பச்சிலை" சஞ்சிகையின் ஆறாவது இதழிற்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நூல்களைப் படிப்பதை புலனறி வழக்கம் என்பர். வாசிக்கும் பழக்கம் மனதை இலகுவாக்கும், வாழ்வை வளமாக்கும். இந்த கணினி யுகத்தில் இணையத்தில் உலாவும் இளைய சமூகம் இழந்த சொர்க்கம் வாசிக்கும் பழக்கம். முன்பெல்லாம் கையில் புத்தகங்களுடன் செல்வதைப் பெருமையாகக் கருதுவார்கள். ஆனால் அந்த இடத்தை கைபேசியும், மடிக்கணனியும் பறித்துக் கொண்டு விட்டன.

ஒருவன் எவ்வளவு சிறந்தவன் என்பதை அவன் வாசிக்கும் புத்தகங்களை வைத்துச் சொல்லலாம் என்பார்கள். வீடுதோறும் சிறிய அளவிலான நூலகமாவது இருக்க வேண்டும் என்று அக்காலத்தில் வலியுறுத்தினார்கள். அதன்படியே இருந்தும் வந்தார்கள். ஆனால் இன்று அதெல்லாம் இல்லாமல் போய்விட்ட நிலையில் வாசிப்பைத் தூண்டுகின்ற செயற்பாடாக இச்சஞ்சிகை ஆண்டுதோறும் வெளிவருவதென்பது மிகவும் பாராட்டுதற்குரியது.

எமது பிரதேச இளைஞர்களின் வழிகாட்டுதலாகவும் அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் களமாகவும் காணப்படும் இவ்விதழ் சிறப்பாக வெளிவர எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சு. சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் வருடந் தோறும் வெளியிடப்பட்டு வருகின்ற "பச்சிலை" எனும் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்வடைகின்றேன்.

நவீன உலகில் ஒவ்வொரு இனமும் தமது கலைப் பொக்கிசங்களைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகின்றது. மனிதன் நாகரிகம் அடையாத காலங்களிற்கு முன்பும் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சிகள் ஏற்படுவதற்கு முன்பும் உலகில் உள்ள அத்தனை இனங்களும் தமக்கென்று ஒரு தனித்துவமான கலையினைக் கொண்டிருந்த நிலை காணப்பட்டது.

கலை இலக்கியங்கள் காலத்தின் தேவை கருதித் தோற்றம் பெறுகின்றன. ஆனால் கால வெள்ளோட்டத்தில் அவை அடித்துச் செல்லப்படுவதும் அவற்றில் உயிரோட்டம் மிக்கவை நிலைத்து நிற்பதும் இயல்பாகும். நவீன யுகத்தின் தேவைகளும் வசதிகளும் வேகமானவை. அவை காட்டாற்று வெள்ளம் போல் தடைகளை தகர்த்துச் செல்லக் கூடியன. இந்த நிலையில் மரபுகளையும் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் கால வெள்ளத்தில் அடியுண்டு போகாமல் பாதுகாப்பது அனைவரினதும் கட்டாய கடமையாகும்.

பசுமையும் செழிப்பும் கொண்ட பச்சிலைப்பள்ளியின் வரலாற்றுத் தடயங்களையும் வாழ்வியல் சிறப்புக்களையும், பண்பாட்டு மரபுகளையும் பாரம்பரிய நினைவுகளையும் எழில் கொஞ்சும் எச்சங்களையும் எம்மோடு முடிந்து விடாமல் அடுத்து வரும் சந்ததிக்கு ஆவணப்படுத்தும் நோக்கில் வெளிவருகின்ற 'பச்சிலை'க்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இம்மலர் உருவாக்கத்திற்கு உழைத்த அனைவருக்கும் என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. பரமோதயன் ஜெயராணி**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**பச்சிலைப்பள்ளி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

பச்சிலை தொடர்ந்து வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கின்றேன். வருடாவருடம் தேசிய வாசிப்பு மாதத்தின் ஒரு செயற்பாடாகவும் நல்லதொரு முயற்சியாகவும் இவ்விதழ் வெளிவருவதென்பது பாராட்டப்பட வேண்டியதே. நூலகம் கல்விக்கான நூல்களை மட்டும் வழங்கிக் கொண்டிருப்பதல்ல. வெளியீடுகள் மூலம் சமூகத்தைக் கட்டியெழுப்பவும் வேண்டும் என்ற கொள்கையின் பிடிப்பாக இதனைக் கொள்ள முடியும்.

நல்ல நல்ல நண்பர்கள் உறையும் நூலகம் ஒரு கோயிலுக்கு ஒப்பானது. தன்னை நாடி வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று இருக்கை தந்து அறிவு புகட்டும் அற்புதமான இடமாகும். அந்தவகையிலே பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகம் கொரோனா வைரஸ் பரவிய காலத்திலும் கூட பக்குவமாக மக்கள், மாணவர் கல்விக்கு உறுதுணையாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

நல்ல பல ஆக்கங்களைச் சுமந்து வெளிவரும் பசுமை நிறைந்த பச்சிலையானது நோய் தீர்க்கும் மருந்தாகவும், சிறந்ததொரு ஆவணமாகவும் சமூக வழிப்படுத்துகையின் ஊடகமாகவும் செயற்பட்டு தொடர்ந்து பசுமை வழங்கி நிற்க இறையருளை வேண்டுவதோடு இம் முயற்சிக்கு தொடர்ந்தும் பாடுபடும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வழங்கி நிற்கின்றேன்.

என் கடன் பணிசெய்து கிடப்பதே.

**ந.பிரபாகரன்**
**முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**கிளிநொச்சி.**

பொது நூலகம்
31 MAY 2022
மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொதுநூலகத்தினால் வருடந்தோறும் வெற்றிகரமாக வெளியிடப்பட்டு வரும் "பச்சிலை" சஞ்சிகையின் இதழ் - 06 இவ்வாண்டும் வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நூலகமும், நூலகச் செயற்பாடுகளும் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளிலே தனித்துவமானதொரு இடத்தை வகித்து வருவதனை யாவரும் அறிவர். அந்த வகையிலே பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகமானது தனது பணியினை வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கொவிட் 19 கால கட்டத்திலும்கூடக் கருமமே கண்ணாக இருந்து வாசகர்களின் தேவைப்பாடுகளில் ஒன்றான வாசிப்புத் திறனுக்காக இச் சஞ்சிகை முகிழ்ந்திருப்பதானது நூலகக் குழுமத்தின் அயரா முயற்சியையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

நவீன உலகின் தேவையறிந்து நல்ல விடயங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தவும், வாசிப்புத் திறனைத் தூண்டுவதிலும் சஞ்சிகைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. மேலும் வாசிப்புத் தேடலுக்கான களத்தை அமைத்துக் கொடுக்கின்றன. பொது மக்கள், மாணவர்கள், சிறுவர்கள், முதியவர்கள் என பலதரப்பட்ட வாசகர்களையும் உள்வாங்கியதாக இச் சஞ்சிகை அமையவும், மலர்ந்து மணம் வீசவும், தொடர்ந்து வெளிவரவும் எல்லாம் வல்ல இறைவன் அருளை வேண்டி வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

**நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்.**

**ப. சத்தியராகவன்**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

எமது சபையின் கீழ் இயங்கும் புலோப்பளை பொதுநூலகத்தினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டுவரும் "பச்சிலை" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலகமானது நூல்களைச் சேகரித்தல், அவற்றை இரவல் வழங்குதல் போன்ற செயற்பாடுகளுடன் நின்றுவிடாது பல்வேறு சேவைகளையும் ஆற்றி வருகின்றது. அந்தவகையில் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின், மாணவர்களின் ஆக்க இலக்கியச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் இலைமறை காயாக இருக்கின்ற எழுத்தாளர்களை வெளிக்கொணரும் நோக்கிலும் அவர்களின் ஆக்கங்களை வெளியுலகிற்கு சான்றுப்படுத்தும் வகையிலும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் பாரம்பரிய வரலாற்று மரபுகள், வரலாற்றுச் சிறப்புகள், பண்பாட்டு நடைமுறைகள், கலை கலாசார இலக்கிய வடிவங்கள் என்பவற்றைப் பின்புலமாகக் கொண்டதும் மற்றும் மாணவர்களின் ஆக்கங்களையும் கட்டுரைகளாக, கவிதைகளாக, கதைகளாக...... தொகுத்து அச்சிட்டு மலராக வெளியிட்டு வருவது பாராட்டத்தக்கது.

இன்றைய இலத்திரனியல் ஊடக கலாசார காலகட்டத்தில் வாசகர் எண்ணிக்கை குறைவடையும் நிலையை மாற்ற நல்ல சஞ்சிகைகள், நூல்கள் வெளிவரவேண்டியதும் அவசியமாகின்றது. அந்தவகையில் பச்சிலை இதழ் - 6 மலர் சிறப்புற வெளிவர அயராது உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இம்மலரானது தொடர்ந்தும் வருடந்தோறும் வெளிவந்து காலத்தின் பதிவுகளில் ஒன்றாக நிலைத்து நிற்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திருமதி. த. தர்சினி**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலர்க்குழு தலைவரின் வாழ்த்துச்செய்தி

பச்சிலை என்ற வருடாந்த மலரின் ஆறாவது இதழை வெளியிடும் இன்றையநாளில் எமது மலர்க்குழுவினர் மகிழ்ச்சியின் உச்சத்தில் உள்ளனர். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப அலுவலகம் ஒன்றிலிருந்து தொடர்ச்சியாக எந்த ஆண்டும் தவறாது இம்மலர் வெளிவருவதும், உள்ளூரில் உள்ள படைப்பாளிகளின் களமாக இது செயற்படுவதும், மலர் வெளியீடு என்பது மிக வறுமையாகவுள்ள பச்சிலைப்பள்ளியிலிருந்து ஒரு கனதியான இதழாக இது தொடர்ந்து ஆறாவது தடவையாக வெளிவருவதும் இம் மகிழ்ச்சிக்கான காரணங்களாக அமைந்துள்ளன.

இந்த வெற்றியின் பின்னால் பலரின் உழைப்பு இருந்து வருகிறது. குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவஞானம் சிறீதரன் அவர்களின் பன்முக நிதி மூலமான நிதியளிப்பும், எதனைச் செய்ய நாம் பிரேரிக்கின்றோமோ அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு ஆதரவு தரும் கௌரவ தவிசாளர் சு.சுரேன் அவர்களது செயற்பாடும் என்றும் நன்றிக்குரியவை. என்றும் எனக்கு பக்கபலமாக இருக்கும் பச்சிலை மலர்க் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் என் நன்றியுடன் பச்சிலை தொடரும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டு நிறைவு செய்கின்றேன்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**தலைவர்,**
**பச்சிலை மலர்க்குழு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலர்க்குழு செயலாளரின் வாழ்த்துச்செய்தி

"பச்சிலை" மிக அழகான கருத்தாழமிக்க எல்லோராலும் உச்சரிக்கப்படுகின்ற பெயர். பலரால் உயர்த்தி விடப்பட்ட, பலரை உயர்த்திய மலர். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொதுநூலகம் தேசிய மட்டத்தில் பரிசில்களை வெற்றிகொள்வதற்கு வித்திட்ட மலர். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையை தேசிய மட்டத்தில் அடையாளப்படுத்துவதற்கு காரணகர்த்தாவாகிய மலர். தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என விரும்பும் மலர் "பச்சிலை".

2013ஆம் ஆண்டு முதலாவது மலர் பல நோக்கங்களை உள்வாங்கி பல சவால்களை வெற்றிகரமாக சந்தித்து சாதித்துக் காட்டி இன்று ஆறாவது மலர் வெளிவருவதனையிட்டு மட்டற்ற மகிழ்வுறுகின்றேன். இதன் வெற்றிக்காக உழைத்த பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இலக்கியகர்த்தாக்கள், வர்த்தக சமூகத்தினர், மலர்க்குழு உறுப்பினர்கள் மற்றும் நூலக அங்கத்தவர்கள் அனைவருக்கும் அன்புடன் நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*இந்த உலகம் வாழும்வரை "பச்சிலை" வாழ்ந்துகொண்டே இருக்கும்.*

**திருமதி. பிரதீபன் உமாதேவி**
**செயலாளர்,**
**பச்சிலை மலர்க்குழு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலராசிரியரின் மனவோட்டத்திலிருந்து......

பசுமை நிறைந்த பச்சிலைப்பள்ளியின் துளிர்த்து துளிர்விட்டு எழுத்தாற்றல் மிக்கோரின் எண்ண ஓட்டத்திற்கு எழுத்துருவாக்கம் பெற அதை அலங்கரித்து ஒருங்கிணைத்து ஒன்றாக்கி பச்சிலைப்பள்ளியின் "பச்சிலை" ஆக்கம் பெற்று பச்சிலைப்பள்ளி பிரதேச மலர் மலர மலர்க்குழுவின் மலராசிரியராக இருப்பதையிட்டு மனநிறைவுடன் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாசிப்பை வளப்படுத்தி பழக்கப்படுத்தி ஊக்குவித்து உத்வேகப்படுத்தும் இவ் வாசிப்பு மாத சஞ்சிகையாக பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் பொதுநூலக வாசகவட்டத்தாரின் அறிவுசார் ஆற்றல் மேம்பாடு கல்வி மேம்பாடு வாசிப்பு வளர்ச்சியுற எதிர்காலம் எழுச்சியுற இச்சஞ்சிகை இப்பகுதி மக்களின் மன ஓட்டங்களை இட்டுச் செல்வதாகட்டும்.

எதிர்கால சந்ததிக்கு கடந்தகால, நிகழ்கால நிஜங்களை இச்சஞ்சிகை இப்பிரதேச ஆக்கவாளர்களின் ஆக்கங்களூடாக அவர்களின் மனங்களில் பதியும் வண்ணம் நிலை நிறுத்தி எதிர்காலத்திலும் தொடர்ந்து தொடர்வதற்கு உந்துதலாக இருக்கட்டும்.

"பச்சிலை" பச்சிலைப்பள்ளியில் மலர ஆக்கங்கள் ஊக்கங்கள் உதவிகள் ஒத்தாசைகள் வழங்கியோருக்கும் வாழ்த்தியோருக்கும் நூலுருக் கொடுத்தோருக்கும் இம்மலர்க்குழு அங்கத்தவர்களுக்கும் இக் குழு சார்பாக என் இனிய வாழ்த்துக்கள்.... இக்குழுவின் பணி மென்மேலும் முன்னோக்கி நகரட்டும்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்பது வள்ளுவர் வாக்கு.

**வி.எஸ்.புவனராசா**
**மலராசிரியர்,**
**பச்சிலை மலர்க்குழு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியின் மனிதவளம் பற்றிய பகுப்பாய்வு

## பச்சிலைப் பள்ளியின் மனிதவளமும் அதன் எதிர்காலமும்

ஒரு பிரதேசத்தின் பாரம்பரியத்தைப் பேணுவதிலும் காப்பதிலும் மனிதவள முகாமைத்துவம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதிலும் பிரதேச வளங்களை முறைப்படியான பயன்பாட்டுக்குக் கொண்டுவந்து பிரதேச பண்பாட்டின் தொடர்ச்சியை உத்தரவாதம் செய்வதற்கும் பிரதேச மட்டத்தில் மாற்றுக் கலாசார நுழைவுகள் உள்நுழைவதனைத் தடுப்பதற்கும் பிரதேசத்துக்கே உரித்தான பாரம்பரியங்களைப் பேணிக் காப்பதற்கும் பிரதேச மனிதவளம் மிகமிக முக்கியமான செயற்பாட்டுக் களமாக இருந்து வருகிறது. இந்த வகையில் பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் அபிவிருத்தியில் மனிதவளத்தின் பங்கும் அதன் போக்கும் பற்றிய ஆரம்ப உரையாடலாக இக் கட்டுரை வடிவமைக்கப்படுகிறது.



**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
BA (Hons) M.Phil (Ecn) PHD (Reading)
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

## பிரதேச சனத்தொகையும் அதன் போக்கும்

பச்சிலைப்பள்ளியின் சனத்தொகை அளவானது 1981ம் ஆண்டில் 9991ஆக இருந்திருக்கிறது. அது 1997 காலப்பகுதியில் 6313 ஆகவும் 2000ல் 6957 ஆகவும் 2005ல் 10433 ஆகவும் 2010ல் 8195 ஆகவும் 2015ல் 12071 ஆகவும் 2020ல் 14244 ஆகவும் காணப்படுகிறது. இவ்வகையில் இப்பிரதேசத்தின் சனத்தொகையானது பாரிய ஏற்ற இறக்கங்களுடன் காணப்படுவதற்கு பின்வரும் பிரதான காரணங்களைக் குறிப்பிடமுடியும்.

1. உள்நாட்டுப் போர் காரணமாக பெருமளவு மக்கள் குடியிருக்க முடியாது முழுமையாக வெளியேறி உள்நாட்டின் வேறு பகுதிகளுக்குள் குடியமர்ந்திருத்தல்.

2. வெளிநாடுகளை நோக்கி கணிசமான மக்கள் புலம்பெயர்ந்து சென்றதுடன் தொடர்ந்தும் இப்பகுதியிலிருந்து உறவுத்தொடர்பு காரணமாக பலர் வெளிநாடுகளை நோக்கி புலம்பெயர்தல்.

3. போரின் முன்னரங்கப் பிரதேசம் காரணமாக மிதிவெடிகள், கண்ணிவெடிகள் என்பன அகற்றப்படாமையினால் மீளத்திரும்பமுடியாத மக்கள் வேறு பகுதிகளில் தங்கியிருத்தல்.

4. சனத்தொகை அதிகரிப்பில் ஏற்பட்ட சடுதியான குறைவும், சிறிய குடும்பங்களை நேசிக்கும் மனப்பாங்கு உருவாக்கமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவளத்தின் இப்பாரிய சரிவானது இப்பிரதேச வளர்ச்சியில் ஒரு தேக்க நிலையை உருவாக்கியுள்ளதுடன் பிரதேச வாசிகளினால் இப்பிரதேச பரப்புக்களை தமது ஆளுகைக்குள் வைத்திருக்க முடியாத சூழல் ஏற்படுத்தியுள்ளது. இவ்வகையில் இப்பிரதேசத்தின் குடும்ப அளவை நாம் ஆய்வுசெய்யும்போது 01 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் 14.48 வீதமாகவும் 02 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் 21.22 வீதமாகவும் காணப்படுகிறது. அதாவது 35 சதவீதமான குடும்பங்கள் கருவளத்துடன் தொடர்புபடாத குடும்பங்களாகவே உள்ளன. வருடமொன்றுக்கு 136 பிறப்புக்கள் மட்டுமே அண்ணளவாக இடம்பெறுகின்றன. 111 திருமணங்கள் தான் வருடம் ஒன்றில் இடம்பெறுவதுடன் சராசரி 42 பேர் வருடாந்தம் இறப்புக்குள்ளாகின்றனர். இவ்வகையில் 16.3% பிறப்பு வீதமும் 2.4% இறப்பு வீதமும் காணப்படும் பிரதேசமாக இது இருப்பதனால் இயற்கை வளர்ச்சி வீதத்தின் அதிகரிப்பினால் இப்பிரதேச சனத்தொகை அளவை எதிர்பார்த்த அளவில் உயர்த்துவதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அதிலும் இரண்டு பிள்ளைகளை மட்டும் விரும்பும் குடும்பங்களின் மனநிலையில் பிரதேச சனத்தொகை இயற்கை வளர்ச்சியால் அதிகரிக்கும் அளவு மிகக் குறைவாகவே அமையப்போகிறது. மறுநிலையில் போரினால் இடம்பெயர்ந்து உள்ளூரில் வசிக்கும் குடும்பங்களில் மீள்குடியமர்வதற்கென 136 குடும்பங்களைச் சேர்ந்த 544 பேர் மட்டுமே தமது விருப்பங்களை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களையும் முழுமையாக கண்ணிவெடி அகற்றலின் பின் மீளக் குடியமர்த்துவதற்கான ஏது நிலைகளும் குறைவாகவே உள்ளன. செறிவான நிலக் கண்ணிவெடிப் பிரதேசங்களாக உள்ள உச்ச ஆபத்து வலயங்களிலேயே இவர்களின் நிலங்கள் காணப்படுவதனால் இந்த குடிப்பெருக்கமும் சாத்தியமாவது நீண்ட தாமதங்களின் பின்னராகவே இருக்கும்.

புலம்பெயர்ந்து சென்றவர்கள் பலரும் மீளத் திரும்ப சாத்தியமில்லை என்பதுடன் திருமண இணைப்பு மூலம் மேலும் பலரை வெளியேற்றி விடுவதற்கான ஏது நிலைகளே அதிகம் காணப்படுவதனால் உள்நாட்டின் சனத்தொகை வளர்ச்சியில் இதுவும் ஒரு தடையாகவே காணப்படுகிறது. உள்நாட்டில் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களுக்குச் சென்றவர்களில் பலர் அப்பிரதேசங்களில் சொந்தமாக நிலங்கள் வாங்கி வதிவிடம் ஏற்படுத்தியதால் அவர்களும் திரும்பி வரக்கூடிய சூழ்நிலை காணப்படவில்லை. இவ்வகையில் தற்போது குடியிருக்கும் சனத்தொகையிலிருந்து மட்டுமே சன அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு காணப்படுகிறது.

**பிரதேச மனிதவளமும் வருமானமும்**

பச்சிலைப்பள்ளியில் தற்போது வசிக்கும் மனிதவளமானது வருமான அடிப்படையில் மிகக் குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களே அதிகளவில் காணப்படுகின்றது. ரூபா 3000.00க்கு குறைந்த மாத வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் 22.3 சதவீதமாகவும் ரூபா 3000.00 - 5000.00க்கு இடைப்பட்ட வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் 31.9 சதவீதமாகவும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் இப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் சதவீதம் 54.2 ஆக காணப்படுகிறது. ரூபா 5000.00 - 10,000.00ற்கு இடைப்பட்ட வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் 29.5 சதவீதமாகவும் ரூபா 10,000.00 - 25,000.00 வரையிலான வருமானம் பெறும் குடும்பங்கள் 16.0 சதவீதமாகவும் அமைந்துள்ளது. இவ்வகையில் வருமான மட்டத்தில் வறிய குடும்பங்கள் பெருந்தொகையாகக் காணப்படுவதனால் இவர்கள் மூலம் சனத்தொகைப் பெருக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. மாறாக நடுத்தர வருவாயுடைய குடும்பங்கள் தான் தங்கள் மனநிலையை மாற்றி ஆகக் குறைந்தது மூன்று பிள்ளைகளையாவது பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அவ்வாறான மாற்றம் ஒன்று ஏற்படுமாயின் இப்பிரதேசத்தின் சனத்தொகையை அடுத்த பத்து ஆண்டுகளில் இப்பிரதேசத்துக்குப் பொருத்தமான சனத்தொகை மட்டத்துக்கு கொண்டுவர முடியும். வருமானம் பெறும் மூலங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கென சென்ற மனிதவளமானது ஐரோப்பாவில் 77 பேரும், மத்திய கிழக்கு நாடுகளில் 74 பேரும், ஆசிய நாடுகளில் 16 பேருமாக மொத்தம் 167பேர் நாட்டுக்கு வெளியில் சென்றிருப்பதால் இவர்களின் மூலம் வருமானம் மட்டுமே பெறப்படுகின்றது.

### வயது வாரியான சனத்தொகைப் பகுப்பாய்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச மனிதவளத்தில் ஆண்களின் சனத்தொகையானது பெண்களின் சனத்தொகையை விட குறைவாகவே உள்ளது. இறுதிக் கணக்கெடுப்பின் படி 2019ல் 6658 ஆண்களும், 6951 பெண்களும் காணப்படுகின்றனர். சனத்தொகையில் வயது வாரியாகப் பார்க்கும்போது தங்கிவாழும் சனத்தொகையானது அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது மொத்த சனத்தொகையில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் தங்கிவாழும் வயதுப் பிரிவினராகக் காணப்படுகின்றனர். அதாவது 24 வயதுக்குட்பட்ட 5335 பேரும் 60 வயதுக்கு மேற்பட்ட 1479 பேருமாக மொத்தம் 6814 பேர் உழைப்புப் படையணிக்கு வெளியில் உள்ளவர்களாக காணப்படுகின்றனர்.

### தொழில் ரீதியான சனத்தொகைப் பரம்பல்

ஒரு பிரதேசத்தின் மனித வளத்தில் உற்பத்தித்திறன் வாய்ந்த மனித வளம் என்பது தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களைக் குறிக்கும். வயது வாரியாக 25 - 60 வயதுப் பிரிவினுள் உள்ளடங்கும் அனைவரும் தொழிற்படையினைச் சார்ந்தவர்களாக இருப்பர். இவ்வகையில் பச்சிலைப்பள்ளியின் வேலைப்படையில் 6795பேர் காணப்படுகின்றபோது தொழில்ரீதியான வகைப்பாட்டில் ஏதாவது ஒரு முயற்சியில் ஈடுபடும் சனத்தொகையானது 5032பேர் மட்டுமே காணப்படுகின்றனர். அதிலும் விவசாய நடவடிக்கைகளில் 1073 பேரும், முழுநேர கூலித் தொழிலாளர்களாக 520 பேரும், மீன்பிடித் துறையில் 170 முழுநேர மீன்பிடியாளர்களும், பனம் தொழில் வல்லுனர்களாக 130 பேரும், மேசன் தொழிலில் 230 பேரும், தச்சுத்தொழிலில் 45பேரும், சலவைத்தொழிலில் 05பேரும், அரசாங்க சேவை அலுவலர்களாக 443பேரும், ஏனைய தொழில்களில் 2516 பேருமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுள்ளனர். இந்தவகையில் பார்க்கும்போது வேலையில் உள்ள சனத்தொகையில் அரைப்பங்கினர் பருவகாலத் தொழில்களில் ஈடுபட்டுள்ள நிலைமையே காணப்படுகின்றது என்பதால் இப்பிரதேச வருமான மூலத்தில் பாரிய தளர்வு உள்ளது வெளிப்படுத்தப்படுகின்றது. அதிலும் உத்தரவாதமுடைய வருமான மூலங்களிலிருந்து வருமானம் பெறுபவரின் எண்ணிக்கையானது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஓய்வூதியம் பெறும் முயற்சியாளர்களின் எண்ணிக்கையானது 210பேராகக் காணப்படுகிறது.

**கல்வி நிலையும் மனித வளமும்**

பச்சிலைப்பள்ளியில் வசிக்கும் தற்போதய சனத்தொகையை கல்வி மட்ட ரீதியாகப் பகுப்பாய்வு செய்யும்போது பாடசாலைக்கு செல்லாதோரின் தொகை 1222 பேராகவும் 1 - 5 வரையான வகுப்பில் மட்டும் கல்வி கற்றோர் 2636 பேராகவும் காணப்படுகிறது. இதன்படி பார்க்கும்போதும் 3858பேர் இப் பிரதேசத்தில் எழுத வாசிக்க தெரியாதவர்களாக, அதாவது 10 சதவீதமானவர்கள் இந்த நிலையிலேயே காணப்படுவதுடன் 6 - 11 வரை கல்வி கற்றவர்கள் 4282 பேரும் சாதாரணதரம் கற்றவர்கள் 3664 பேரும், க.பொ.த உயர்தரம் கற்றவர்கள் 1520 பேரும், காணப்படுவதுடன் பட்டத்தகைமை மற்றும் அதற்கு மேலும் தகைமை கொண்டவர்கள் 278 பேரும் வசித்து வருகின்றனர். இந் நிலையில் 40 சதவீதமான மக்கள் கல்வியறிவுடையவர்களாக இருந்து வருவது இப் பிரதேசத்துக்கு வலுச் சேர்க்கும் ஒரு அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவாக இதுவரையில் நாம் கவனத்தில் கொண்டிருந்த குடும்ப அளவு, வருமானம், கல்வியறிவு, தொழில்சார் வாய்ப்புக்கள் மற்றும் தகைமைசார் பண்பு விருத்தி என்பவற்றைப் பரிசீலிக்கும்போது பச்சிலைப்பள்ளியின் மனிதவளமானது திருப்தி தரும் மட்டத்தில் காணப்பட்டபோதும் அச் சனச் செறிவானது தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் எந்த வாய்ப்புக்களும் இல்லாதுள்ளதுடன் இது மேலும் குறைவடைந்து செல்லும் வாய்ப்புக்களே அதிகரித்து வருவதானது இப்பிரதேச மனிதவளம் நெருக்கடியாகவுள்ளது என்பதனை நிறுவிக் கொள்ளலாம். இது தொடர்பில் இது சமூகத்தில் பரவலாக உணர்ந்து கொள்ளக்கூடிய ஒரு நெருக்கடியாக இல்லாதுள்ளதனால் இதனை சற்றேனும் குறைப்பு செய்து தகைமை சார் மட்டத்தில் பேணுவதற்கு போதியதான விழிப்புணர்வை கற்றவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் அதுசார்ந்த வாய்ப்பான நிலையில் கருத்து ரீதியாக மனமாற்றத்தையும் கொண்டுவர வேண்டும் என்பதும் அவசியமாகியுள்ளது. அது சார்ந்த ஒரு ஆரம்ப கவன ஈர்ப்பை மையப்படுத்தியே இக் கட்டுரையாக்கம் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 நிகழ்வுகளின் பதிவுகள்





























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2021 நிகழ்வுகளின் பதிவுகள்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்ம ஊருக்கு என்னதான் ஆச்சு?

பளையூர் செ.கஜானனன்

பொதுசன நூலகம்
31 MAY 2022
யாழ்ப்பாணம்

பருவம் தப்பிய மழை
பசுமை அழிந்த நிலம்
தோணிப் பயணத்திற்கான தெருக்கள்
கோணிப் பையுடன் அலைகின்ற ஊர்மக்கள்
வெள்ளத்தில் உவராம்
வெள்ளைமண் கள்ளமாய் அகழ்வாம்
கொள்ளையும் கசிப்பும் வரமாம் - கொடுமை
கஞ்சாவும் இடைக்கிடை வருதாம்
மெல்லமாய் கதையுங்கோ
உதுவெல்லாம் உள்ளால நடக்குதென்ற புரளியில
கண்கண்டே நடக்குது தவறாம்.

கூத்துக்கள் ஆடிய தெருக்கள்ள
குழுமியிருந்து ரசித்த கூட்டங்கள் - இன்று
குடிகாரர் ஆட கொலைப்
பயத்தோட கடக்கின்ற நிலை பாருங்கோ - இந்த
இடிபாடுகள் கட்டடங்களிற்கு மட்டுமில்ல
மனங்களிற்கும் தான் என்கிறத
வெளிப்படையாகவே சொல்கிறேன் கேளுங்கோ

சரியான தூக்கமில்ல
சலித்துப் போகும்படியான வாழ்க்கை
நம்ம ஊருக்கு என்னதான் ஆச்சு!
ஒற்றுமைப்படும் இடங்களிலெல்லாம்
வேற்றுமைப்பட்டு கிடக்கிறோம்
ஒருவருக்கொருவர் ஒருமித்த கருத்தில்லாம - ஊர்
அபிவிருத்திகளை கூட குழப்பிறோம்
வெட்கித் தலைகவிழும் நிலையில் இருந்து கொண்டு
வீராப்பு பேசித் திரிகிறோம்

கத்து கடலிருக்கு
காயாத குளமிருக்கு
சுற்றும் வயலிருக்கு
சுயதொழில்கள் பலவுமிருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றும் வளம் நிறைந்த ஊரென்று எங்கள்
முதுசங்கள் மார்தட்டிய காலம்
மலையேறிற்றே தானிருக்கு
அகழ்வதும் சிதைப்பதும் - எங்கள்
அழிவுக்கே தான் என்பதை மறவாதிங்கோ

இயற்கை தந்த பரிசு எங்கள் பச்சிலைப்பள்ளி
இதமாய் அதை காத்திட முயல்வோம்
பிறப்பால் ஒன்றி இறப்பால் ஒன்றி
இடையிலேன் பிரிகிறோம்?
உறுப்பால் ஆண்பெண் பகுப்பன்றி - வர்க்க
வகுப்புகளையேன் வளர்க்கின்றோம்
ஒன்றுபடுவோம் எம்மூர் ஒன்றுபட
ஒன்றுபடுவோம்
வென்று வருவோம் மீள நம்கலை கல்வி
விளையாட்டுகளில் வென்று வருவோம்.



## படிப்பது எதற்காக?

நண்பர் ஒருவர் ஆபிரகாம் லிங்கனிடம், ''படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை. பின் ஏன் நீங்கள் எப்போதும் எதையாவது படித்துக் கொண்டே இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு லிங்கன், ''நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும் போது எப்படிப் பண்போடு வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவே படித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொறோனாவால்......

அவளுக்கு பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. இன்று கிடைக்கப்பெற்ற மருத்துவப் பரிசோதனையின் முடிவால் தான் அவளுக்கு இந்நிலை ஏற்பட்டிருந்தது. காலையில் எழுந்ததிலிருந்து வேண்டாத தெய்வம் இல்லை. ஆனால் கடவுள் அவளை மறந்துபோனார் போலுள்ளது. காவியா என்கிற அழகான அமைதியான பெண், அதுவும் 18 வயது நிரம்பிய பெண்ணை கடவுளுக்கு ஞாபகம் இல்லை என்றால் வேறுயாரை ஞாபகம் வைத்திருப்பார் என்று எரிச்சலாக இருந்தது.



திருமதி. உமா கணேசநாதன்
மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்,
பளை.

மறுபுறம் சிரிப்பாக இருந்தது தனது எண்ணத்தைப் பார்த்து. நான்கு வயதிலிருந்து தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்த அவள்தான் கடைக்குட்டி சிங்கம். மற்ற நால்வரும் திருமண பந்தத்தில் இணைந்து தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு சென்றுவிட்டனர். தந்தையுடன் தனிமையிலிருந்து வந்தவளுக்கு 17 வயதாகும்போதே தந்தை திருமணப் பேச்சை ஆரம்பித்து விட்டார். க.பொ.த.சாதாரண தரத்துடன் உயர்தரம் படிக்கத் தகுதியிருந்தும் கல்வி நிறுத்தப்பட்டு விட்டது. அவள் தனிய இருப்பது பாதுகாப்பு இல்லையாம். திருமணத்தை செய்து முடித்து விட்டால் பயமில்லை என்பது தந்தையின் வாதம், மறுப்புக் கூறமுடியாது.

அவளது தந்தை மோட்டார் சைக்கிள் மெக்கானிக்காக கடைஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். தனிய கடை போட பொருளாதாரம் இடம்தரவில்லை. அடிக்கடி இடப்பெயர்வு... இது அவர்களின் மூன்றாவது வீடு. போற இடமெல்லாம் வீடுகட்டி... வாழ்ந்து அனைத்தையும் இழந்து... இது மூன்றாவதாக இடம்பெயர்வில் கட்டிய நிரந்தர வீடு. அப்பாவின் கடையில் வேலைபார்த்த பெடியன்களில் ஒருவன் தான் கரன். அவனை அப்பாவுக்கு பிடித்துப் போய்விட்டது. பின்னர் அவனைப் பற்றி விசாரித்து அவனது குடும்பம்... குலம்... கோத்திரம்... எல்லாம் அறிந்து முடிய ஒரு வருடமாகிவிட்டது. அவளுக்கு 15 வயதாகும்போது கடைசியாக இருந்த சகோதரிக்கு எல்லாவற்றையும் வழித்து துடைத்து கொடுத்தது போக அவளுக்கென்று 1/4 ஏக்கர் காணியும், அதில் அரை வாசியில் கட்டிய இந்த வீடும், ஒருபவுண் சங்கிலியும், காதிலிருந்த தோடும் தான் இருந்தது. இந்த மூன்று வருடத்துள் 10பவுண் நகையும் 05இலட்சம் ரூபாவும் சேமித்து விட்டிருந்தார் அப்பா. இருக்கிற வீட்டின் பின்புறமுள்ள 2 பரப்பும் வெறுமையாக இருந்தது. வீடு திவ்யாவுக்கு எழுதப்பட்டுவிட்டது. பின்னால் உள்ள காணியில் சின்ன குடில் ஒன்று அமைத்து இருக்கப்போவதாக அப்பாவின் திட்டம். அந்தக் காணி தன்னுடைய சொந்தவீட்டுச் செலவுக்கு வேணும் என்று அடிக்கடி அப்பா கூறுவார். அதனுள் 10 தென்னை மரமும் காய்க்கிறது. இது நிற்க!

இப்போது அவளுக்குள்ள பிரச்சினை என்னவென்றால்... சலப் பரிசோதனையின் போது அவள் கர்ப்பமாக உள்ளாள் என்று உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டிருந்தது. நேற்று அவளும் கணவனும் தனியார் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்று இரத்தம், சலம் எல்லாம் கொடுத்துவிட்டு வந்திருந்தனர். முடிவை தபாலில் அறிவிப்பதாக கூறியிருந்தனர். இன்று காலைதான் தபால்காரன் அந்த அறிக்கை அடங்கிய கவரை கொடுத்துவிட்டுச் சென்றான். அதைப் படித்தவள் தான் இடிந்து போய் உட்கார்ந்து விட்டிருந்தாள். இரண்டு வருடங்களாவது கர்ப்பத்தை பிற்போடுவது என்று இருவரும் முடிவு செய்திருந்தனர். இந்த விடயம் தந்தைக்குத் தெரியாது. தெரிந்தால் கோபப்படுவார். இந்த பிரதேசத்துக்குரிய மருத்துவ உத்தியோகத்தர் கௌரிமிஸ்ஸின் உதவியுடன் கையில் ஒரு ஊசி மருந்தை வைத்துவிட்டால் மூன்று வருடங்களின் பின்னர் எடுக்கலாம் என்று திட்டமிட்டிருந்தனர். தேவை என்றால் இரண்டு வருடங்களின் பின்னரும் எடுக்கலாம் என்று மிஸ் கூறியிருந்தார். தைமாதம் திருமணம் நடைபெற்றது. இப்போது ஆறுமாதங்கள் கடந்து விட்டது.

இப்போ யோசித்து என்ன பயன். பங்குனிமாதம் வரை கல்யாண சந்தோசம்.. உல்லாசம்... சுற்றித்திரிதல்... என்று பறந்து விட்டிருந்தது. அதன் பின் மாதசுகவீனம் வரும்வரை பார்த்திருந்து போகலாம் என்றிருக்கும்போது வந்தது பேரிடி! அதுதான் கொறோனா... எல்லா இடமும் கொறோனா... தனிமைப்படுத்தல்... Log Down... என்று சிகிச்சை நிலையம் செல்ல முடியவில்லை. குடும்ப நல உத்தியோகத்தர் வந்தபோது ஆணுறைகள் சிலவற்றைக் கொடுத்துவிட்டு, அதுபற்றிய விளக்கத்தை இருவருக்கும் கூறியதுடன் பாதுகாப்பான காலம் பற்றியும் கூறிச் சென்றிருந்தார். அடிக்கடி கடைகள் பூட்டப்பட்டு தனிமைப்படுத்தல் பேணப்பட்டது. மனமே சோர்ந்து போனது. வேலை இல்லை... அதனால் வருமானம் இழப்பு... என்ன செய்யலாம் என்று சிந்தித்தவர்கள் கடைசியில் பின்னால் உள்ள காணித்துண்டை பதப்படுத்தி வீட்டுத் தோட்டம் செய்வது என்று முடிவெடுத்தனர். அப்பாவும் கரனும் சேர்ந்து கஷ்டப்பட்டதில் கத்தரி, வெண்டி எல்லாம் பிஞ்சு பிடித்துள்ளது. பயிற்றையில் இரண்டு முறை கறி சமைத்துவிட்டனர். இதில் அவளது பொழுதும் கரைந்து விட்டது.

சென்ற மாதம் மாத சுகயீனம் தடைப்பட்டவுடன்தான் அவள் விழித்துக் கொண்டாள். ஐயையோ.... தவறி விட்டதே...... இரண்டு முறைகளையும் பின்பற்றியும் தப்பாகிவிட்டதே...... எல்லாவற்றையும் மறந்துவிட்டேனோ தெரியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. ஆனந்தமா.? கவலையா..? அவளால் தீர்மானிக்க முடியவில்லை. மனம் மகிழ்ச்சியடைந்தாலும்..... நடக்கப்போகும் நிகழ்வுகளை எண்ணி கவலையடைந்தாள். இந்தக் "கொறோனா" எப்ப முடியுமோ தெரியாது. பெரிய யுத்தம் ஒன்று முடிவடைந்து உயிருடன் திரும்பி வந்ததே பெரியவிடயம். அவளின் மூத்த சகோதரனும் தாயும் சண்டையின்போது கொத்துக்குண்டு பாய்ந்து இறந்திருந்தார்கள். அதிலிருந்து இன்னமும் மீள முடியவில்லை. அதற்குள் இந்த கொறோனா வைரசின் ஆட்டம்... என்று பலவாறாக எண்ணி பெருமூச்செறிந்தாள்.

தெருவில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. எட்டிப்பார்த்தவள் கௌரிமிஸ் வருவது கண்டு மகிழ்வடைந்தாள். நல்ல வேளை மிஸ் வருகிறார்.. இல்லை என்றால் பிள்ளை வேண்டாம் என்று கரன் சொன்னாலும் மீறமுடியாது போயிருக்கும்... என்று எண்ணியபடி கரனையும் கூட்டிக் கொண்டு கௌரிமிஸ்ஸை சந்திக்கத் தயாரானாள் மகிழ்வுடன்.

**சுபம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியின் நீர் முகாமைத்துவமும் நிகழ்கால மாற்றங்களும்

ஆதிகாலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் நன்கு ஆராய்ந்து நீர் முகாமைத்துவம் மேற்கொண்டதை ஆரம்பகால மக்கள் நீரைத் தேக்குவதற்கு குளங்களையும், வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது அதை விரைவாக வெளியேற்றுவதற்கு வடிகால் அமைப்பையும், நீர் விரயத்தைக் குறைத்து இடையிடையே நீர் சேகரிக்க குளங்களையும் அமைத்துள்ளதிலிருந்து அறிய முடியும். இவை இயற்கையான நீரோட்டத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் இருந்துள்ளது.

இப்பிரதேசத்தின் ஆதிக்குடிகளாக வாழ்ந்ததாக நம்பப்படும் இயக்கர், நாகர் இன மக்களின் வாழ்வியல் காலத்தில் நாகர் இன மக்கள் நாகர் கோயில் பகுதியிலும், இயக்கர் இன மக்கள் எமது பகுதியாகிய இயக்கச்சியிலும் வாழ்ந்ததாக நம்பப்படும் நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இயக்கச்சி என்ற பெயர் வந்ததாகவும் இன்றும் அப்பெயர் நின்று நிலைத்திருக்கின்றது.



வி.எஸ்.புவனராசா
தம்பகாமம்,
பளை.

ஆதிக்குடிகள் இப்பிரதேசத்தில் தமது வாழ்க்கையைத் தொடங்குவதற்கு நீர் வளமே முக்கியத்துவம் பெற்றிருக்கலாம். இப்பிரதேசத்தில் காணப்படும் நன்நீர் வளமும் ஆழமற்ற தன்மையும் வற்றாத நீர்வளத்தையும் மையமாக வைத்தே இவ் ஆதிக்குடிகள் தமது வாழ்க்கை வாழ்விடமாக தேர்ந்து எடுத்திருக்க காரணமாகி இருக்கலாம். அக்காலத்திலேயே நீர் வளமே வாழ்விடத்தைத் தீர்மானிக்க காரணமாகி இருந்துள்ளது. இங்கு நீர் முகாமைத்துவமே வாழ்விடத்தைத் தீர்மானிக்கின்றது.

இதன் பின் இப்பிரதேசத்தில் அரசாட்சிக் காலத்தில் நீர் முகாமைத்துவம் நன்கு வடிவமைக்கப்பட்டு இப்பிரதேசத்தின் வட தென் பகுதிகளை நோக்கியே நீர் வழிந்தோடி குளங்களில் சேரவும், மீதி ஆற்றிலும் கடலிலும் கலக்கக் கூடியதாக வடிகாலமைப்பு முறை காணப்படுகின்றது. இன்றும் அந்நிலையே தொடர்கின்றது. எனினும் சிறந்த சிந்தனையின்றி, பராமரிப்பின்றி ஆதிகால வடிகாலமைப்பு முறை சிதைக்கப்பட்டு சீரழிக்கப்படுகின்றது. இதனால் இன்று இப்பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கும் அழிவுமே மிஞ்சியுள்ளது. மழைநீர் விரயமாகின்றது. நவீன விஞ்ஞான வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய காலத்தில் சிறந்த திட்டமிடல் முறையில் திட்டமிட்டு திட்டம் வரைந்து நீர்முகாமைத்துவத்தை மேம்படுத்தியிருக்க முடியும். ஆனால் அந் நடைமுறை இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தியை மேற்கொள்வதுடன் மேலதிகமான உற்பத்தியை சந்தைப்படுத்தி வருமானத்தையும் பெறமுடியும். இவற்றை சாத்தியப்படுத்துவதற்கு சிறந்த நீர் முகாமைத்துவம் அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசம் அரசாட்சிக் காலத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான போக்குவரத்துப் பாதையாக (பாலமாக) இருந்தது, இன்றும் இருக்கிறது. தரைவழிப் பாதையாக மட்டுமன்றி நீர்வழிப்பாதையும் அன்றும் இன்றும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதன்மூலம் விவசாய உற்பத்திகள் இடத்துக்கிடம் கொண்டு செல்லப்பட்டது மாத்திரமன்றி எல்லாள மன்னன், சங்கிலி மன்னன் காலங்கள், மற்றைய மன்னர்களின் காலங்கள், அதற்குப் பிந்திய அண்மைக் காலங்கள் என்பவற்றிலும் படைநகர்விற்கும் பாதுகாப்பானதாக இப் பிரதேசம் இருந்துள்ளதுடன் இருவழிப் பாதைகளும் பயன்பட்டுள்ளன. இப் பகுதிக்கும் வன்னி நிலப்பரப்பிற்கும் (பூநகரி) இடையில் நீர்வழிப்பாதை சுமார் 50 வருடங்களுக்கு முன்பே இருந்துள்ளது. பூநகரியில் இருந்து மக்கள் நீர் வழிப்பாதையைப் பயன்படுத்தி பளைப்பகுதியின் தென்கரையோரத்தில் பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ளதை அறிய முடிகின்றது. அவர்கள் காலை வந்து பயிர்ச்செய்கை முயற்சியை மேற்கொண்டு மாலை வீடு திரும்புவது வழக்கமாக இருந்துள்ளது. அத்துடன் கிழக்குக் கரையோரத் தொடர்பும் ஆரம்பகாலம் முதலே சுண்டிக்குளம், கண்டாவளை ஊடாக இருந்துள்ளது. இப்பாதைகளூடாக மக்கள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. தற்போது காணப்படும் ஆனையிறவுப்பாதை பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே உருவாக்கப்பட்டு வீதி அமைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன் முன்பு இப் பாதை பயன்பாட்டில் இருந்துள்ளது. இடையில் நீர்த் தடங்கல் இருந்துள்ளது. ஆரம்பகாலத்தில் வாழ்ந்த மக்கள் இப்பாதையூடாகவே ஆனையிறவில் இருந்து சந்தைக்கு வியாபார நடவடிக்கைக்காக சென்று வந்துள்ளதையும் முகமாலை, தம்பகாமம், முகாவில், இயக்கச்சி போன்ற இடங்களில் இயங்கிய சந்தைகளுக்கும் ஆனையிறவில் இயங்கிய சந்தைக்கும் தரைவழிப் போக்குவரத்து தடமாக இவ் ஆனையிறவுப் பாதை செயற்பாட்டில் இருந்துள்ளது. அன்னியர் ஆட்சிக் காலத்தில் ஆரம்ப கண்டிவீதி அமைப்பு முகாவில், கோயில்வயல், கொம்படி, கண்டாவளை, அம்பகாமம் ஊடாக இருந்துள்ளதையும், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் நடுப்பகுதியிலேயே ஆனையிறவு ஊடாக கண்டிவீதி செயற்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளதையும் காணமுடிகின்றது. இவ் வீதி அமைப்பு பச்சிலைப்பள்ளி பகுதியின் மையப்பகுதியூடாக அமைக்கப்பட்டுள்ளது. அதன்முன் பச்சிலைப் பள்ளியின் வட புறமாக முகமாலை, முகாவில், கோயில்சந்தை தெருவும் கச்சாய், ஆனையிறவுத் தெருவும் பயன்பாட்டில் இருந்துள்ளதை செவி வழிச் செய்தியாக அறியமுடிகின்றது.

பயிர்ச்செய்கையை நோக்குவோமானால், இப் பிரதேசத்தின் இயற்கை வளமான பனைவளம் இருந்துள்ளது. ஆரம்பகால மக்களின் பல்வகைப் பயன்பாட்டிற்கு இவ்வளம் பயன்பட்டுள்ளது. கிழங்கு உணவுத்தேவைக்கும், பனம் பழம் பனாட்டு செய்வதற்கும், பதனீர் கருப்பட்டி செய்வதற்கும் பருகுவதற்கும், ஓலை பன்னவேலைகளுக்கும் அன்று முதல் இன்று வரை பயன்பட்டு வருகின்றது. இன்று இவ்வளம் தடுப்பாரற்று சுயலாப நோக்கத்திற்காக அழிக்கப்படுகின்றது. இதைத் தடுக்கவேண்டிய துறையினர் கண்மூடி மௌனியாக கடமைப் பற்றின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றனர். இப்படித் தொடர்ந்தால் எமக்கு இயற்கை கொடுத்த கொடையான இவ்வளம் அழிவடையும் நிலையை அடையலாம். இதைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட துறையினர் பச்சிலைப்பள்ளியின் வட, தென் கரையோரப் பகுதிகளிலும் எதுவித பயன்பாட்டிற்கும் பிரயோசனமற்ற நிலப்பகுதிகளிலும் திட்டமிட்ட முறையில் இப்பயிரை நடுகை செய்து கண்காணித்து வந்தால் மண்ணரிப்பைத் தடுக்கும் அரணாகவும் மழைவீழ்ச்சியை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாகவும் பச்சிலைப்பள்ளியை பசுமையான பிரதேசமாக என்றும் தொடரவும் காரணியாக அமையும்.

தென்னைச் செய்கையைப் பொறுத்தமட்டில் ஆரம்பகாலத்தில் சுயதேவைக்காகக் காணப்பட்ட இப்பயிர்ச்செய்கை பிரிட்டனின் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டப்பயிராக வளர்க்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு பிரதேசத்தின் பெரும்பாலான இடங்கள் இப்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் மூலம் மக்களுக்கான வேலைவாய்ப்பும் உரிமையாளர்களுக்கு தெங்குப் பொருள் விற்பனை மூலம் நல்ல வருமானமும் கிடைத்தது. அத்துடன் மண் அரிப்பைத் தடுக்கும் செயற்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்கின்றது. இதன் விளைபொருட்கள் பல்வகைப் பயன்பாட்டிற்கு உதவுவதால் (கிடுகு, தேங்காய், கொப்பறா, தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு) மக்களின் தேவைகள் பூர்த்தியாவதுடன் உரிமையாளரின் வருமானமும் உயர்கின்றது. இச் செய்கை கடந்தகால யுத்தத்தால் பாரிய அழிவைச் சந்தித்தது. இன்னமும் பழைய நிலையை அடைய பல ஆண்டுகள் ஆகலாம். இதை பழைய நிலைக்குக் கொண்டுவர நன்கு திட்டமிட்ட முறையில் இதனுடன் தொடர்புடைய துறைகள் அயராது உழைக்க வேண்டும். காணி உரிமையாளர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும். யுத்தத்தால் அழிவடைந்த பல தென்னந்தோட்டங்கள் எந்தவித அபிவிருத்தியும் செய்யப்படாமல் பற்றைக் காடுகளாக உள்ளன. இது மாற்றியமைக்கப்பட வேண்டும். உரிமையாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு மீள்நடுகை துரிதப்படுத்தப்பட வேண்டும். இப் பிரதேச தென்னந்தோட்டங்களில் ஊடு பயிராக மரமுந்திரிகைச் செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டும். அத்துடன் பயன்பாடற்ற காணிகளில் இப் பயிர்களை நடுகை செய்வதற்கு மக்களுக்கான ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும்.

நீர்வள மேலாண்மைக்காக பிரிட்டிஸ் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காடு வளர்ப்புத்திட்டம் தம்பகாமம் Forest Department மீளவும் இயக்கப்பட்டு காடுவளர்ப்புத் திட்டம் நன்முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் வகை தொகையின்றி அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காடுகள் அழிப்பு அதனுடன் தொடர்புடைய துறையினரால் நிறுத்தப்பட வேண்டும். இரு கரையோரமும் பெருமரங்கள் நடுகை செய்யப்பட வேண்டும்.

இதர பயிர்களாகட்டும், பழப் பயிர்களாகட்டும், காய்கறிப் பயிர்களாகட்டும், பணப் பயிர்களாகட்டும் பிரதேசத்திற்கு ஏற்ற வகையில் சிபார்சு செய்யப்பட்டு ஆலோசனைகள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ள மக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் உற்பத்தியைக் கூட்டுவதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தையும் கூட்டமுடியும். கடந்தகால யுத்த சூழ்நிலையால் கடுமையாக அழிவடைந்த பெருமரங்கள் மீள்நடுகை செய்யப்பட்டு (பனை, தென்னை, மா, பலா, தேக்கு, சமண்டலை போன்றவை) காலநிலை சமநிலை செய்யப்பட்டு பழைய நிலைக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். எமது பிரதேசம் தென்பகுதி சிறுகடலையும் வடபகுதி தொண்டமன்னன் ஆற்றையும் உள்ளடக்கிய பிரதேசம் அகலாங்கையும், எழுதுமட்டுவாழ் பகுதியில் இருந்து கோயில்வயல் எல்லை, ஆனையிறவு எல்லைப் பகுதிகளையும் அடக்கிய நெட்டாங்கையும் கொண்ட ஒடுங்கிய பிரதேசமாக இருப்பதால் மழைகாலங்களில் முகில் கூட்டங்கள் விரைவாக இப் பிரதேசத்தைக் கடந்து சென்றுவிடக்கூடிய நிலை காணப்படுகின்றது. இதற்கு ஏற்றவாறு எமது பிரதேசத்தின் மேற்பரப்பு ஈரலிப்பு நிறைந்த காற்றோட்டப் பிரதேசமாக பேணப்படுவதால் முகில் கூட்டம் எமது பிரதேசத்தைக் கடக்கும் போது மழைவீழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதாக இருக்குமாறு பராமரிக்கும் போது மழைவீழ்ச்சியின் அளவைக் கூட்டமுடியும்.

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் ஆரம்பகாலத்தில் தம்பகாமம், அரசர்கேணி ஆகிய பகுதிகளில் நிலைபெற்றிருந்ததாக நம்பப்படும் அரசாட்சிக் காலத்தில் பயிர்ச்செய்கை நன்கு சிறப்புற்றிருந்ததை அதன் எச்சங்கள் மூலம் அறிய முடிகின்றது. இக்காலத்தில் குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நீர் முகாமைத்துவத்தைப் பேணுவதற்காக வாய்க்கால்கள் வெட்டப்பட்டு குளங்களுக்கிடையில் தொடர்பும் மீதி நீர் கடலுக்கும் ஆற்றுக்கும் செல்ல வடிகால் அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

ஆரம்பகால நீர் முகாமைத்துவம் பேணப்பட அக்கால வடிகால் அமைப்பு முறை ஆனைவிழுந்தான்குள, நெளியாய்க்குள வாய்க்கால்கள் உட்பட தடுக்கப்பட்ட பிரதேசங்களில் அத்தடைகள் அகற்றப்பட வேண்டும். பழையகால வட தென் கரையோரப் பாதைகள் மீண்டும் செயற்பட வடபகுதியில் களிக்கரை வீதி (கல்லடி சுட்டிபுரம் வீதி) உட்பட பல வீதித் தடைகள் அகற்றப்பட்டு சீர்செய்யப்பட வேண்டும். காடழிப்பு முறை மாற்றப்பட்டு காடு வளர்க்கும் திட்டம் ஊக்குவிக்கப்படுவதுடன் காடுகள், கண்டல்காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன் இரு கரையோரமும் பனை நடுகைத்திட்டம் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டும். பளையின் வடபகுதியில் முகமாலை முதல் கோயில் வயல் வரையும் தென்பகுதியில் கிளாலி முதல் ஊர்வணிகன்பற்று ஊடாக கோயில்வயல் வரை உவர்நீர் தடுப்பு அணையும் அமைக்கப்பட்டு நீர்ப்பாசனம் சீர்செய்யப்பட்டு, தேவையான இடங்களில் குளங்கள் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு, பழையவை சீர்செய்யப்பட்டு நீர் முகாமைத்துவம் மேம்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி அடையச் செய்து நீர் முகாமைத்துவத்தை சீர்செய்து போக்குவரத்தை மறுசீர்செய்து எமது பிரதேசத்தை அபிவிருத்தியடையச் செய்யமுடியும்.

**"நீரின்று அமையாது உலகு எனின் யார் யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்கு"**

என்பது வள்ளுவர் வாக்கு. இதற்கு அமைய செயற்படுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திர உலகு

கீத்தா
மாசார்.

இயந்திரங்களிடையே
வியாபாரம் வியாபிக்கிறது
வணிகம் பின்னிப் பிணைந்த
வலையொன்றினால்
உலகம் மூடப்பட்டிருக்கிறது
கண்ணாடிப் பெட்டியினுள் இயங்கும்
பொம்மையின் இயக்கம் போன்ற
உறக்கம், உணவு
சிரித்தல், நடத்தல் என
சலனமற்று சகலதும் நிகழ்கின்றது
பகலினைத் தின்கின்றது
வேலையின் பளு
இரவினையும் விழுங்குகிறது
மிகுதி வேலையும் உறக்கமும்
டொலர் ஒன்றின் மோகம்
ஒருவனின் நிகழ்கால வாழ்வினை
இறந்த காலமென
மென்று துப்புகிறது
கோபுரக் கடிகாரங்கள்
தங்களின் பணியினை
இடப்பட்ட உத்தரவின் படி
நிறைவேற்றுகின்றன.

31 MAY 2022

துன்பம் இல்லாமல் இன்பமாக
வாழ விரும்பினால்
மனதால் கூட பிறருக்கு தீங்கு
நினைப்பது கூடாது.
- வாரியார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பெனும் வார்த்தை

சண்முகராஜா நிரோஜனி
பளை நகரம்,
பளை.

குறியீடாய் குறுகி
எழுத்துக்களாய் எழுந்து
ஓலைச் சுவடியில் ஒளிர்ந்து
தட்டெழுத்தாக தளர்ந்து
ஏடுகளில் ஏறி
வட்டெழுத்தாய் வளைந்து
சங்கங்களில் சமைந்து
வேதங்களாய் வெந்து
புராணங்களினுள் புதிராகி
செய்யுட்களில் செறிந்து
உரைநடையினுள் உருகி
இலக்கியங்களாய் இருகி
இலக்கணத்தில் இதமாகி
நூற்றாண்டு கடந்து நூல்களாகி
புத்தகமாய் புத்தாக்கமடைந்தின்று - இவையனைத்தையும்
வாசிப்பெனும் வார்த்தைதான்
வாரியணைத்து வாழ வைக்கிறது
வாடிய வரலாறும் விளம்புகிறது
வாசிப்பின் வகிபாகத்தை
வாழ்வெனும் விருட்சத்தின்
வீறு கொண்ட விழுதுகளே
வாசிப்பு...

வாசிப்போம்... சுவாசிப்போம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசமென்பது......

மணிமேகலை
முல்லையடி.

உயர்ரக பஞ்சணை விரிப்பின் மீது ஒருக்களித்து படுத்திருந்தாள் நிலா. கண்கள் ஒரு புறத்தில் நிலைகுத்தி நின்று கொண்டிருந்தன. அழகான கூந்தல் கலைந்து அலங்கோலமாய் கிடந்தது. "நிலா.... நிலா... இந்த ஐஸ்கிறீமையாவது கொஞ்சம் சாப்பிடம்மா" எனக் கூறியவாறு அவளை மெதுவாக தட்டி எழுப்பிக் கொண்டிருந்தாள் வேலைக்காரி சுகுணா.

எத்தனையோ விதமாக சொல்லிப் பார்த்துவிட்டாள். நிலாவில் மாற்றமேதும் இல்லை. இரண்டு நாட்களாக ஹரிணியை எண்ணி ஏங்கிக் கொண்டே எதுவும் உண்ணாது இப்படியே படுத்துக்கிடக்கின்றாள். பாடசாலைக்கும் செல்வதில்லை. சுகுணாவிற்கோ நிலாவைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அவள் அருகிலேயே விலகாமல் இருந்து கொண்டாள். தன்னால் எதுவும் செய்ய முடியாத நிலையில் கொழும்பில் இருக்கும் நிலாவினுடைய பெற்றோர்களுக்கு அவள் தொலைபேசியினூடாக தகவல் சொல்லியதன் பிரகாரம் கொழும்பில் இருந்து தாம் ஊருக்கு வருவதாக சுந்தரேசனும் லீலாவும் கூறியிருந்தனர்.

நிலா ஏழுவயதே ஆன சிறுமலர். கிராமத்தில் உள்ள அவளது வீட்டில் தங்கியிருந்தாள். அவளுக்கு துணையாக தூரத்து உறவுமுறைகளில் ஒருத்தியான சுகுணா வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தாள். தாயும் தந்தையும் கொழும்பில் உள்ள தனியார் கம்பனி ஒன்றில் வேலை செய்வதனால் நேரம் கிடைக்கும் பொழுதுகளில் மட்டும் கிராமத்து வீட்டிற்கு வந்து நிலாவையும் வீட்டையும் பார்த்துச் செல்வதுண்டு. நிலாவைப் பார்த்துக்கொள்வதுடன் தோட்ட மற்றும் சமையல் வேலைகளும் இருந்தமையினால் அவளும் இங்கேயே தங்கிவிட்டாள் சுகுணா. வயது வேறுபாட்டின் காரணமாகவோ அல்லது வேறு ஏதும் காரணங்களினாலோ நிலா, சுகுணாவுடன் ஒட்டிக் கொண்டதை விட ஹரிணியுடன் ஒட்டிக் கொண்டதே அதிகம். பாடசாலை விட்டு வந்ததும், அவள் பொழுது கழிவது ஹரிணியுடன் தான். ஹரிணிக்கும் நிலாவை தவிர வேறு உலகமில்லை. காலையில் நிலாவை பாடசாலைக்கு அனுப்பி வைத்து விட்டு அவள் வரும் வரையிலும் காத்துக் கொண்டே இருப்பதிலும் அவள் வந்தவுடன் விளையாடி மகிழ்வதுமாக ஹரிணியின் பொழுதுகள் நிலாவுடனே சங்கமமாகி விடும்.

நிலாவின் தனிப்பெருந்துணை ஹரிணி தான். இரவில் தூங்கும் போது கூட தனக்கு அருகிலேயே அதனையும் படுக்க வைத்துக் கொள்வாள். ஹரிணியின் பிஞ்சுப் பாதங்களையும், மேனியையும் வருடிக் கொடுப்பது நிலாவுக்கு பிடித்தமான ஒன்று. ஹரிணியுடன் இணைந்தவாறு தோட்ட வெளி எங்கும் சுற்றித் திரிவதில் அளவிலா ஆனந்தம் நிலாவிற்கு. அன்றும் அப்படித்தான், பாடசாலை முடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வந்தவள் தனக்காக காத்திருக்கும் ஹரிணியை காணாது மாய்ந்து போனாள்.
"சுகுணாம்மா என்ட ஹரிணி எங்க போட்டாள் ஏன் காணேல்ல"

சின்னம்மா, கொஞ்சம் முதல் உதிலை தான் நிண்டது. இப்ப காணேல எங்கேயும் போயிருக்கும். நிலாவுக்கு தெரியும் தான் வரும் நேரத்தில் ஹரிணி வேறு எங்கும் போயிருக்கமாட்டாள் என்று. "ஹரிணி.... ஹரிணி....." என செல்லமாக அழைத்தவாறே எல்லா இடங்களிலும் தேடிவிட்டாள். அவர்கள் வழக்கமாக ஒளிந்து விளையாடும் இடத்தில் கூட காணவில்லை. அழுது அழுது கண்கள் எல்லாம் சிவந்து அன்றைக்கு படுத்தவள் தான் இரண்டு நாட்களாக எழும்பவே இல்லை.

*** *** ***

"சுகுணா உனக்கு எத்தினை தரம் சொன்னனான் ஹரிணியோட பிள்ளையை பழக விடாத எண்டு நீ கேக்கிறேல்லை" உயர்ந்த குரலில் கத்திக் கொண்டிருந்தாள் லீலா.

"சுகுணாவால் பதில் சொல்ல முடியவில்லை. நிலாவை வருடியபடியே நின்று கொண்டிருந்தாள் அச்சத்துடன். லீலா கொஞ்சம் பேசிறதை நிப்பாட்டிப் போட்டு பிள்ளையை பாரனப்பா, அங்க எல்லாம் போட்டது போட்டபடி கிடக்குது, போகவெல்லே வேணும்"

சுந்தரேசனின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு நிலாவின் அருகே சென்று பார்த்த லீலா அதிர்ந்து போனாள். வீட்டுக்கு வரும் போதெல்லாம் சிரித்தபடி ஓடிவந்து தன்னை கட்டிக் கொள்ளும் மகள் வெறித்தபடி படுத்திருந்தாள். தனது கடைவாயில் இருந்து எச்சில் வடிவதை கூட பொருட்படுத்தாது ஹரிணி வழக்கமாக தூங்கும் சிறிய படுக்கை விரிப்பை அணைத்த படியே படுத்திருந்தாள்.

"நிலாம்மா அம்மா வந்திருக்கன்டா எழும்படா பிள்ளைக்கு பிடிச்ச மைலோ, அப்பிள் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறம் எழும்பம்மா." லீலா, நிலாவை வருடிப் பார்த்தாள், தட்டிப்பார்த்தாள், ஏன் அதட்டிக் கூட பார்த்து விட்டாள். எதற்கும் அசைந்து கொடுத்தாளில்லை.

"எனக்கு முதலே தெரியும் இப்படி நடக்குமெண்டு, முதல் அதை பிடுங்கி எறிய வேண்டும் என்று கத்திக் கொண்டே மகள் கையில் இருந்த படுக்கை விரிப்பு துண்டை பறித்து தூர எறிந்தார் சுந்தரேசன். எறிந்தது தான் தாமதம் நிலா பெரிய சத்தமாக அழத் தொடங்கியிருந்தாள். அவள் அழுவதையும் பொருட்படுத்தாது வீட்டுக்குள்ளிருந்த ஹரிணியின் பிற பொருட்களும் வெளியேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாவின் அழுகுரல் கேட்டு அக்கம்பக்கத்து வீட்டில் இருந்து வந்தவர்கள் எல்லோரும் ஏதேதோ கூறி அவளை தேற்ற முயன்றார்கள். லீலா, மகளை மகிழ்விப்பதற்காக பாடினாள். ஆடினாள் ஏதேதோ சைகை எல்லாம் செய்து பார்த்தாள். அழுகைக்கிடையில் ஹரிணி என்ற வார்த்தைகளை கேட்க முடிந்ததே தவிர அழுகை குறையவில்லை.

"உது உவளுக்கு ஏதோ பேய்க்குறைபாடு போல"

"பேய்க்குறைபாடு ஒண்டுமில்லை. பெட்டை தாய் தகப்பனை பாத்துத் தான் வெருண்டு அழுது போல"

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக பேசிக் கொண்டார்கள்.

அழுதழுது களைத்தவள் அரற்றத் தொடங்கினாள். ஹரிணி ஹரிணி என்று அவள் வாயிலிருந்து வார்த்தைகள் குழறியபடி வெளிவந்தன. அச்சமடைந்த நிலாவின் பெற்றோர்கள் வைத்தியருக்கு அழைப்பெடுத்து வருமாறு வேண்டியிருந்தனர்.

இதற்கிடையில் எங்கிருந்தோ நிலா.... நிலா என்று ஒரு மெல்லிய குரலோசையும், அதற்கு பின்னணியில் அவள் தேடிய ஹரிணியும் ஓடி வந்து கொண்டிருந்தது. வேகமாக ஓடி வந்து நிலாவின் மெத்தை மேல் குதித்தேறிய ஹரிணி நிலாவின் பட்டு வண்ண ஆடையை பற்றி இழுத்தும், தன் பிஞ்சுக் கால்களினால் அவளை தட்டியும் எழுப்ப முயன்று கொண்டிருந்தது.

"இந்த சனியனை பாட்ஸ் பாட்ஸா உடைச்சு போட்டாதான் சரி, பொழுது போக்குக்கு நிக்கட்டும் எண்டு வாங்கிக் குடுத்தால் உது இப்ப பிள்ளையை சாக்கொல்ல பாக்குது" என்றவாறே கோபத்துடன் கத்தினாள் லீலா.

ஹரிணியின் ஸ்பரிசங்களால் மெல்ல மெல்ல தன்னிலை பெற்ற நிலா அதனை இறுக அணைத்து முத்தமிட்டுக் கொண்டாள். கட்டியணைத்து கண்ணீர் உகுத்தாள். ஹரிணியும் தன் வாலையும் பிட்டப்பகுதியையும் அழகுற ஆட்டி அவளை சிரிக்க வைத்தது. அவள் கன்னத்தோடு தன் கன்னத்தை இணைத்தவாறே "நிலாக்குட்டி அழாத" என்றது. நிலா உணவருந்தினாள். ஹரிணியும் பின் உணவை ஏற்றிக் கொண்டது.

***

பல வருடங்களின் பின் இது நடக்கலாம். நடக்காமலும் இருக்கலாம். ஆனால் நேசமென்பது இப்படித்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. இப்படியும் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பண்பாட்டின் நாட்டாரியலின் தனித்துவம்

பச்சிலைப்பள்ளி பிரதேசம் தமிழ் பேசும் மக்களின் இருப்பையும், தமிழர்களின் சிறப்பையும் எடுத்தியம்பும் பிரதேசமாகும். தமிழரின் பாரம்பரிய பெருமைகளைச் சொல்லுகின்ற ஆலயங்களும், பல இடங்களும் அமைந்திருப்பது மக்களின் சிறப்பின் மகுடமாகும்.



மு.கீர்த்திகா
மாசார்,
பளை.

பல பிரதேசங்கள் இன்று தம்மை அடையாளப்படுத்த முடியாத இக்கால சூழலில் இதற்கெல்லாம் எதிர்மறையாக பச்சிலைப்பள்ளி பிரதேசம் அமைந்திருக்கின்றது. இப்பிரதேசத்திற்கே உரித்தான நாட்டாரியல் பழக்க வழக்கங்களையும் வரலாற்றுச் சிறப்புக்களையும் காலமாற்றத்தின் காரணமாக எத்தனையோ பண்பாட்டுச் சிறப்புக்கள் அழிந்து போகின்ற இச்சூழ்நிலையில் தன்னால் முடிந்தவற்றை இப்பிரதேசம் பாதுகாக்கின்றது.

ஒரு தேசிய இனத்தின் அடையாளம் அதன் நாட்டாரியல் பண்புகளோடும் பண்பாட்டு நுண் அலகுகளோடும் தொடர்புடையது. பன்மைத்துவத்தின் இயல்புகளோடு இணைந்த தொகுப்பு இங்கே வலியுறுத்தப்படுகின்றது. அடையாளங்களைத் தேடுதல், அவற்றைப் பாதுகாத்தல் என்பன இங்கு எழும் ஒரு சமூகத் தோற்றப்பாடு ஆகும். பச்சிலைப்பள்ளி இலங்கையின் கலைவளம் மின்னும் தமிழ்க் கிராமங்களைக் கொண்டுள்ளது. தொன்மையான மரபுகளும், சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கும் தனித்துவத்தைக் கொண்டதாக இப்பிரதேசம் மிளிர்கிறது. இலங்கையின் பல பிரதேசங்களில் மதமாற்றம் வேகமாக நிகழ்ந்து வந்த காலணித்துவ காலப்பகுதியிலும் தமக்குரிய இன, மொழி, மத அடையாளங்களை முறையாகப் பாதுகாத்து வந்த தொடர்ச்சியையும் நீட்சியையும் இங்கே காண முடியும்.

பச்சிலைப்பள்ளியின் நாட்டாரியற் பதிவுகளை சடங்குகள், வழிபாடுகள், வாய்மொழிப் பாடல்கள், கூத்துக்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்கின்றனர். அவற்றைத் தொடர்ச்சியாகவும் சந்ததி சந்ததியாகவும் பின்பற்றி வருகின்ற தனித்துவமான சமூகப்பொறி இங்கு காணப்படுகிறது. தொழில் முறைகளுக்கும் சிறுதெய்வ வழிபாடுகளுக்குமுரிய தொடர்புகள் பச்சிலைப்பள்ளியின் தனித்துவத்தின் பிறிதொரு பரிணாமம். சமூக இருப்பு வீரம் செறிந்த வாழ்க்கைக் கோலங்களை வடிவமைக்கிறது.

வைரவர், காளியம்மன் வழிபாட்டின் வீரச் செறிவுடன் இணைந்த பண்பாட்டின் துலக்கம் காணப்படுகிறது. மிக நுணுக்கமாக பண்பாட்டின் ஒவ்வோர் அடிநிலை நுண் அலகுகளையும் தன்னகத்தே பச்சிலைப்பள்ளி பிரதேசம் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மானிடவியல் மற்றும் அவற்றிற்குரிய பயனுள்ள தகவல்களை இப்பிரதேசம் திரட்டித் தந்திருத்தல் தகவல் நோக்கிலும் ஆய்வு நோக்கிலும் பாராட்டுக்குரியவை.

இப்பிரதேசத்தில் தமிழ் மக்கள் சிறப்பாக வாழ்ந்தமைக்கு இங்குள்ள தமிழ்க் கிராமங்களே சாட்சி பகிர்கின்றன. இக்கிராமங்கள் ஏதோ பின்புலக் காரணங்களினால் ஊர்மாறு பேர்மாறு உருக்குலைந்து போனாலும் இதற்கெல்லாம் தாக்குப்பிடித்து தனது தனித்துவத்தை அதன் செல்நெறிகளை பாதுகாத்துப் போராடிவரும் இப் பச்சிலைப்பள்ளி பிரதேசம் தம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த பண்பாட்டுக் கோலங்கள், நாட்டாரியல் பண்புகள், சமய வழிபாட்டு முறைகள் என்பவற்றைப் பேணி வருகின்றது. இம்மக்களுக்கு தனித்துவமான வாழ்வியல் பண்பு உள்ளது. வாழ்வோடு ஒன்றி நாட்டாரியல் வழக்காறுகளை தமது கிராமிய சூழலில் போற்றிக் கடைப்பிடித்து முதன்மைப்படுத்தி வாழ்கின்றனர். இந்நிகழ்வுகள் மங்கி மறைந்து போகாமல் தமது வாழ்வியல் கோலத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

இம்மக்கள் கடைப்பிடித்து வரும் பழக்கவழக்கங்கள், அவர்களின் திருமண முறைமைகள், மரண வீட்டு நிகழ்வுகள், கிராமிய உறவு சம்பவங்கள் யாவும் தனியான தெம்மாங்கு மரபைக் கொண்டது.

எண்ணங்கள் மனித சமுதாய நாட்டாரியல் வளர்ச்சியின் பண்பாட்டின் படிக்கற்களாக இருக்கின்றன. அவை புரையோடிப் போய் காணப்படுகின்றன. எந்தளவுக்கு நாகரீக வளர்ச்சி ஏற்பட்டாலும் நம்பிக்கையின் ஆணிவேராக முன்னோர்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் நாட்டுப் புறவியலில் பேணப்படுகின்றன.

தெய்வ நம்பிக்கையை கலை இலக்கிய நாடகங்களுடன் மூலாதாரமாகக் கொண்டவர்களான இவ்வூர் மக்கள் தமது நாடக அளிக்கை எவ்வித விக்கினமுமின்றி நடைபெறும் நோக்குடன் தமக்கே உரித்தான பாணியை பின்பற்றுவார்கள். அவர்களது கலையான கூத்தானது ஆரம்பத்திலிருந்து முடியும் வரையும் ஒரு சடங்கு முறையைப் போல பின்னப்பட்டுள்ளது.

கூத்து ஆரம்பிப்பதற்கு முன்னர் மேடைப் பூஜை, தெய்வங்கள் மீது காப்பு, தெய்வப்பாடல் என்பவற்றைப் பாடி கூத்தை ஆரம்பிப்பார்கள். கும்பம் வைத்து வழிபடுவார்கள். பச்சிலைப்பள்ளியின் நாட்டுப்புறவியல் சான்றுக்கு இது மகுடமாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் வாழ்க்கைத் தளங்கள் தான் சார்ந்த தட்பவெட்ப சூழலுக்கு ஏற்றதாகவும், ஐவகை நில அமைப்பின் அடிப்படையில் தமது தெய்வ வழிபாட்டையும் வகுத்துக் கொண்டார்கள் முன்னோர்கள். அந்தவகையில் நவீனத்துவம் ஒரு கூறாக இருந்தாலும் நாட்டுப்புறவியலும் ஒன்றாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்ணின் பெருமை (உரைநடைக் கவிதை)

நா.நகுலேஸ்வரன்
பிரதேச சபை உறுப்பினர்,
முல்லையடி,
பளை.

என்ன பொன்னையாண்ணை
புழுதி மண்ணை பார்த்து புன்சிரிப்போட நிக்கிறியள்

அட சின்னவட்டன், புழுதியில்லையடா பொடியா பொன் விளையும்
பூமியடா!

திங்களை வர்ணித்துப்பாட
திசை நாலு பக்கமும் திரண்டிருக்கும்
பூமியடா பச்சிலைப்பள்ளி

கவி பாட நீயும் கற்றுக்கொண்டாய்
பொன்னையாண்ணை
மணல் மண்ணில் நாம் நின்று
மனதைக் குழப்பாமல் களி மண்ணை
தேடிச் சென்று கன பயிர் தன்னை செய்திடுவோம்

எட பொடியா, சின்னவட்டா
களி மண்ணை தேடி நாங்கள் கன தூரம் போக வேண்டாம்
பளை மண் இருக்குதடா
பதம் பார்த்து பயிர் செய்ய

அதுமட்டும் இல்லையடா பொடியா
இருபக்க கடல் காற்றும், இரைந்து வீசும் உப்புக்காற்றும்
பளை மண் தாவரங்களுக்குள்
புகுந்து கொண்டு வீசுதடா இதனால்!
பயிர்கள் பல பயன் தரும், பயப்படாமல் பயிரை வை

ஓம். ஓம் பொன்னையாண்ணை
ஒரு போத்தல் கள்ளைத்தான் உறிஞ்சிக் குடித்து விட்டு
உவமைக் கதையல்லோ
உருட்டித் தான் விடுறியள்

சின்னவட்டா!
உனக்கொன்று எடுத்து ஒழித்து வைத்திருக்கிறேன்
உங்கால நின்று உறிஞ்சி விட்டு வா
உனக்கும் வரும் கற்பனைகள் ஒழுங்காய் பேசுவோம்

ஓம் அண்ணே!
பளை மண்ணில் ஊன்றி நின்று பல பயன்கள் தந்திடும்
உந்தப் பனையைத் தான் மறப்போமா நாமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டும் இல்லையடா பொடியா!
பனாட்டு, பனங்கட்டி என்றும். பனங்கிழங்கு ஒடியல் என்றும்
பல உணவுகளைக் காணலாம் பனையிலே!

உண்ணானை அண்ணை சொல்லுறன் கேளுங்கோ
உந்தக் கொரோனா எனும் கொடிய நோய் தாவாமல்
தனிமையில் இருந்த போது இவ்வுணவு இருந்திருந்தால்
பனாட்டும் தேங்காய் சொட்டும்
பசி ஆறி இருக்கலாம் கொஞ்சநாள்

ஓம் அடா தம்பி!
நீரிழிவு நோய் கூட நிப்பாட்டிப்போடும் ஒடியல்புட்டு

நேரந்தான் போகுதண்ணே
உந்தப் பொல்லாத என்ர மனிசி அல்லோ
போணும் எடுக்குதண்ணே!

பளைமண் போதுமடா பசியாற எங்களுக்கு
மழைகாலம் வந்துவிட்டால். குளமெல்லாம் நீர் நிறைந்து
வாய்க்கால் வழிதனிலே கடலுக்குச் செல்லும் வழி
பளை மண்ணில் பல இடத்தில் இருக்குதடா தம்பி!

ஓம் அண்ணை!
வழிந்தோடும் நீர்நிலைகள் கண்டு
வாய்க்கால்களை சீர் செய்தால். தேங்கிநிற்கும் நீரினால்
சேதம் வராது எமது பயிர்

புனரமைப்புத் தேவைகளைப் பூரணப்படுத்திவிட்டால்
பயமின்றி நாமும் பல பயிர்கள் செய்திடலாம்
தென்னை, பலா, மா, வாழை செழித்திடுமடா பளை மண்ணில்!

இயற்கை அழகைக்கூட இங்கு நாம் காணலாம்
குளக்கரையில் நின்று பார்த்தால்
செந்தாமரை வெண்தாமரை இடையே வெள்ளைக்கொக்கு நின்று
வேடிக்கை பாக்கும் அண்ணை
நத்தைகொத்தியும் நின்று நடனமாடும் காட்சியும்
நெற்கதிர் நிமிர்ந்து நின்று சலசலத்துக் கொள்ளும் அண்ணே!

பறந்து நாம் அலையாமல் பளை மண்ணில் நின்று கொண்டு
பல பயிர்கள் செய்திடலாம்

ஓம் அடா சின்னவா
இருக்கும் தேவையை பூர்த்திசெய்யவென்று
இடங்களை நாம் கண்டறிந்து
இனிதே நிறைவேற்றிக்கொண்டு
இன்பமுடன் வாழ்வோம் பச்சிலைப்பள்ளியில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் கல்வி அறிவு

பணத்திற்காக நாம் படிப்பது கல்வி அறிவு. ஆனால் சிறப்பான ஆளுமை, நல்ல ஆரோக்கியம், நல்லுறவு சார்ந்த விஷயங்களுக்காக நாம் அவசியம் படிக்க வேண்டியது என்னவெனில் வாழ்க்கை அறிவு.

கல்வி என்பது நமது பிள்ளைகளின் மூளைக்குள் புதிதாக எதையும் திணிப்பது அல்ல. மாறாக பிள்ளைகளின் உள்ளத்தில் திணிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கைகளை அகற்றி சுய சிந்தனை உடையவராக மாற்றுவதேயாகும். நமது சமூகக் கட்டமைப்பில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் முக்கோணக் கோட்பாட்டில் சமூகத்தின் இயல்பாக நிலைநிறுத்துவதே கல்விதான். தனி மனித பலவீனத்தை அகற்றி தனிமனிதர்களை சமூகக் கட்டுக்கோப்புக்கு உரியவராக மாற்றும் பணியை கல்வி மட்டுமே முன்னெடுக்கின்றது. வாழ்க்கையை மேம்படுத்துகின்ற நமது குணங்களை சீர்படுத்தி மனதை ஆற்றுப்படுத்துகின்றது. மனிதம் நிறைந்த சமூகக் கட்டமைப்பு உருவாகுவதற்கு சமூகத்துக்கான சமூக உணவாக இருப்பது புத்தகங்கள் மட்டுமேயாகும். வீட்டுக்கொரு நூலகத்தை நாம் முன்னிறுத்த வேண்டும். புத்தக வாசிப்பென்பது சமூக சுவாசமாக மாற்றப்பட வேண்டும். அப்பொழுது மட்டுமே கல்வியின் மீது கட்டப்பட்ட அறிவார்ந்த சமூகம் உருவாகும்.



ஜே. சர்மிலா
நிதி உதவியாளர்,
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.

கல்வி, சமூகம் என்ற இரு விடயங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட எண்ணக்கருக்களாகும். கல்வி என்பது பிள்ளையின் உள்ளே இருக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதால் கல்வி மூலமே அறிவு சார்ந்த சமூகம் உருவாக்கப்படுகிறது. பல்வேறு கல்விசார் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வினைப் பெற்றுத்தருவது கல்வியாகும். அறிவு, திறமை போன்றவற்றை வழங்கி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை போன்றவற்றை வழங்கி ஒரு முழுமையான ஆற்றல் படைத்தவனாக கல்வி மாற்றுகின்றது. ஒரு சமூகத்தின் முன்னேற்றம், சமூக நகர்வு, சமூக வளர்ச்சி, எழுச்சி, அபிவிருத்தி என்பன அச்சமூகத்தின் கல்வியைத் தீர்மானிக்கும் சக்திகளாகக் காணப்படுகின்றன.

திடகாத்திரத்தோடு பிறந்தும் நாம் ஏன் நம் தவறான செயல்களால் நம் உடல், மனம் மற்றும் உறவு நிலைகளில் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்கிறோம்? யோசித்துப் பாருங்கள். இதற்கு முக்கிய காரணம் அறியாமை, அகங்காரம், பலவகையான கெட்டபழக்கங்கள், மாஸ் மீடியாவுக்கு அடிமையாதல் போன்ற கர்மாக்களால் வாழ்க்கையையே அழித்துக்கொள்கிறோம்! எளிமையான உண்மை புரியாமல், கவர்ச்சியான பொய்யை நிஜம் என நம்பி ஏமாறுகிறோம்! தன்னையே சரியாகத் தெரியாமல், உலகமே தெரியும் என நினைக்கிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் முன் உள்ள நல்லவர்களைப் புரிந்துகொள்ளாமல், கடவுளையே புரிந்தது போல வாழ்கிறோம்! ஒருவர் தனது உணர்ச்சிகள், உணர்வுகள், செய்கைகள், செயல்கள் மற்றும் எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாதபோது வாழ்க்கை எப்படி கட்டுப்பாட்டில் இருக்கும்?

இன்றைய நவீன யுகத்தில் கல்விக்கான அனைத்து வாய்ப்பு, வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பன திறந்து விடப்பட்டுள்ளன. ஒருவர் ஒரு துறையில் அல்லது பல துறைகளில் ஆழமாக கால் பதிக்க இது வழிவகுத்துள்ளது. சமூக மாற்றத்தினை வழிநடத்துவதிலும் பிரதான பங்கு கல்விக்கு உண்டு. சமூகத்திற்கான விழுமியங்களை உருவாக்குவதிலும் சமூக மூலதனங்கள், ஒற்றுமை, சகிப்புத்தன்மை, ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்தல், நட்புணர்வு ஆகியவற்றை சமூகக் கட்டமைப்புக்குள் பலப்படுத்துவதிலும் கல்வியின் பங்களிப்பு முதன்மையானது.

இன்றைய மாணவர்கள் நவீன தொழில்நுட்பங்களில் அதிக நாட்டம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். தொழில்நுட்ப அறிவு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த விஷயங்களால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. எனவே வகுப்பறையைத் தாண்டிய கற்பித்தல் முறையில்தான் மாணவர்களின் கவனத்தை ஆசிரியர்கள் ஈர்க்க முடியும். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று அனைத்து தகவல்களையும் இணைய தரவுகளாக மாற்றவும், பாடங்கள் மற்றும் பயிற்சிமுறைகளை கணினி இணைய நுட்பத்திற்கு எளிதாக மாற்றவும் முடியும். மாணவர்களுக்கு தகவல்களைக் கடத்தவும், கருத்துக்களைப் பகிரவும் இது ஏற்றது.

நமக்கான சமூகத்தை நேர்மையாக்குவதிலும் நல்லொழுக்கத்திலும் ஆழமான நற்சிந்தனையையும் அகலமான அறிவையும் உறுதிப்படுத்த கல்வி மிக அவசியம் என்பதை மறுக்க முடியாது. முழுமையான கல்வி என்பது உடல், உள மற்றும் ஆன்மா ஆகியவற்றை ஒருங்கிணைத்து நற்சிந்தனையுடன் கூடிய செயலை வெளிக்கொணர்வது தான். நம் அனைவருக்கும் வாழ்வின் அணியாகவும் தாழ்வின் துணையாகவும் வளர்ச்சியின் அணிகலனாகவும் அமைவது கல்வியாகும். சமுதாயத்தில் காணப்படும் கல்லாமை, இல்லாமை, இயலாமை, அறியாமை, முயலாமை போன்ற ஆமைகளை விரட்டி சமூகத்தை நீதி, நேர்மை மிக்க சமுதாயமாக இயங்க வைப்பதற்கு கல்வி மட்டுமே அடித்தளமாக அமையும். கல்வி என்பது ஒருவரை நிர்வாணமான சிந்தனா சக்தி உடையவராக ஆக்குவது என்று தந்தை பெரியார் கூறினார்.

கல்விச் செல்வம் அள்ள அள்ளக் குறையாது. கொடுத்தாலும் குறையாது. எடுத்தாலும் குறையாது. “தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு” என்பதற்கிணங்க இறைக்க இறைக்கச் சுரக்கும் நீர் போல அறிவானது கொடுக்கக் கொடுக்க வளர்ந்துகொண்டே இருக்கும். “ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் கல்வி கற்றால் அது அவளது குடும்பத்துக்கே கற்பிப்பது போல்'' என்றார் பாரதிதாசன். அதுபோல, இந்த உலகில் உள்ள பொருள்களைச் சார்ந்ததுதான் வாழ்க்கை. சில பொருள்கள் நல்லன போலத் தோன்றும்! ஆயினும் தீமையே பயக்கும்! காட்சியில் வேறாகவும் அனுபவத்தில் வேறாகவும் காணப்படும் பொருள்களின் தன்மையை ஆராய்ந்து எடுத்துக் கொள்ளுதலே அறிவுடைமை. அறிவு பல்வகைப் பிரிவாக வளர்ந்து இந்த உலகின் துறைகள் அனைத்தையும் செழிக்கச் செய்கின்றது. இதற்கு பகுத்தறிவு என்பதே முதன்மையானது.

இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் இக்கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது என்பது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

கல்வி கற்றவரிடம் ஒழுக்கம், பண்பு, நேர்மை, நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. எந்தவொரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக்காலத்தைப் பொறுத்தவரை மிகவும் தாழ்வாகவும் இழிவாகவும் கருதப்படும்.

அறிவு ஒருபோதும் தீமை செய்யாது. அறிவுக்குக் கொடுக்கும் விலை சிறந்த மூலதனம். அறிவுடையார்கள் பலவீனர்களாக இருக்கமாட்டார்கள். அதனால் சூழ்நிலைகளால் பாதிக்கப்படமாட்டார்கள். சூழ்நிலைகளைக் கடந்தும் சூழ்நிலைகளை உண்டாக்கிக் கொண்டும் வளரும் தன்மை அறிவுடையவர்களுக்கு உண்டு. இயற்கை அறிவுக்கு ஆக்கம் சேர்ப்பது நூலறிவு. நூலறிவுக்கு ஆக்கம் சேர்ப்பது ஆய்வியல் சார்ந்த அறிவு. ஆராய்ந்து அறிந்த அறிவுக்குப் பெயர் நுண்ணறிவு. நுண்ணறிவுக்கு ஆக்கம் சேர்ப்பது பட்டறிவு. இங்ஙனம் வாழ்க்கையின் வாயில்கள்தோறும் வளர்ந்து செழுமைப்படுவது அறிவு.

உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை ஆகிய ஆன்மிக சிந்தனைகளை வளர்ப்பதில் கல்வி முதன்மையாக உள்ளது. ஒரு தனிமனிதனின் அறிவு, படைப்பாற்றல், மனவெழுச்சி, எதிர் உருவப்படம், பேச்சுவார்த்தை ஆகிய குணங்களை வழிகாட்டியாக இருந்து வளர்ப்பது தேவையாகிறது. வழிகாட்டியாக இருப்பதால்தான் தனிமனிதனின் வாழ்க்கைக்கும், குறிக்கோள்களை அமைக்கவும் பெற்றுக்கொள்ளவும் உதவிகளைப் புரிகிறது. வாழ்க்கையில் குறிக்கோள்களை அடைய அவர்களின் சக்தியையும், செயலையும் வழிப்படுத்தும் மனிதனின் அறிவு, படைப்பாற்றல், பிரதிபலிப்பு சக்தி போன்றவற்றைப் பெற கல்வி வழிகாட்டியாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையின் ஆழம்

கீர்த்தி
மாசார்.

சுகன்யா வாயிலுள்ள அத்தனை பற்களும் தெரிய என்னைப் பார்த்து சிரித்தாள். அது அவளுடைய வயதைச் சொல்லி என்னிடம் எதையோ கெஞ்சுவதாக எனக்குப்பட்டது. சில வேளை ஒன்றிரண்டு குட்டிப் பற்களும் இருக்கக்கூடும்.

ஆக அவளுக்கு வயது முப்பத்தைந்துக்கு முன்பின்னாக இருக்கலாம். ஐயோ சுகன்யாவை அவள் என்று சொல்லிவிட்டேன். ரீச்சரை அப்படி அழைப்பது மரியாதை இல்லை. இருந்தாலும் இந்த ரீச்சர் எனக்குச் செய்ததும் மரியாதை இல்லாத வேலைதான். கள் விகுதியும், அர் ஆர் விகுதிகளையும் மரியாதைக்காக சேர்த்துக் கொள்ளலாம் என்று தெரிந்தும் மொட்டையிலே விட்டு விட்டேன்.

நான் ஒரு சைக்கிள் கடை வைத்திருக்கிறேன். சைக்கிள் கடை என்றால் ஏதோ வியாபாரம் என்று நினைத்தால் ஏமாந்து விடுவீர்கள். நான் வெறும் சைக்கிள் மெக்கானிக் தான்.

அட பாவமே கொம்புத் தேனுக்கு முடவன் ஆசைப்படுவது பழைய உதாரணம். இப்போதைக்கு அவன் ஹீரோ கொண்டா ஓடுவதற்கு ஆசைப்பட்டதாக கொள்ளலாம். விசயம் கொஞ்சம் சீரியசானது. எனக்கும் ஒரு கால் லேசாக பிரண்டு இருக்கின்றது. அதைக் காட்டிக் கொள்ளாமல் கஸ்ரப்பட்டு ஸ்ரெடியாக நடப்பது போல நடித்து விடுவேன்.

காலிரண்டும் பின்னப் பின்ன கன்னிமகள் நடைபயின்று வந்தாள் என்று கவிஞர் பாடினார். எனது கால்களிரண்டும் பின்னிப் பின்னி நடப்பதால் ஆண்மகன் என்று கன்னியர்களின் அங்கீகாரம் கிடைத்தது கஷ்டமாகிவிட்டது. இந்த லட்சணத்தில் ஒரு அக்காவையும் தங்கச்சியையும் நான் வாழ வைப்பேன் என்று காத்திருந்தார்கள். அப்பாவின் உழைப்பு தவறணைக்காரனின் கல்லாப் பெட்டிக்குள் முடங்கிவிடும். அம்மாவின் கெட்டித்தனத்தாலும் சகோதரிகளின் சொந்தக் கெட்டித்தனத்தாலும் இரண்டு திருமணங்களையும் சைக்கிள் மெக்கானிக் கடையை வைத்துக் கொண்டு நடத்தி முடித்து விட்டேன். திருமணங்கள் முடிந்ததோடு என்னுடைய வாழ்க்கையின் வசந்த காலமும் முடியும் தறுவாய்க்கு வந்துவிட்டது.

புறோகிறாம் பண்ணி முடக்கி விடப்பட்ட இயந்திரம் போல என்னுடைய வாழ்க்கையில் நாட்களை சைக்கிளோடு கழுவித் துடைத்துப் பூட்டிக் கொண்டிருந்தேன். அப்படியான ஒரு நாளில்தான் சுகன்யா ரீச்சர் தன்னுடைய சைக்கிளை திருத்துவதற்காக கடைக்கு வந்தார். அவர் வேறு ஊரில் இருந்து மாற்றலாகி வந்திருக்கின்றார். அவரும் திருமணவயதை கடந்து விட்டவர் என்பதை ஓரளவு கட்டையாகிப் போன பின்னலில் ஊடும் பாவமாக வெள்ளிக் கம்பிகள் சொல்லிக் கொடுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள் ரிப்பயரோடு தொடங்கிய தொடர்புகள் காற்று அடிக்க, நட்டை இறுக்க, எண்ணெய் போட என்று எண்ணிக்கைகளை கூட்டிக் கொண்டு போனது. இந்த வேலைகளைச் செய்கின்றபொழுது பல விசயங்களைப் பரிமாறிக் கொண்டோம். ஒரு பெண்மையின் தேவைகள் அவளிடமும் முளாசி எரிய முடியாமல் புகைத்துக் கொண்டு கிடந்தது. எங்களது சளாப்பல்கள் ஊதிக்கொடுத்து நெருப்பை மூட்டி விட்டன.

வெறும் சைக்கிள் பாராக இருந்த எனது மனம் சில்லுகளைக் கொழுவி பெல்லையும் பூட்டி கிணுகிணுக்கத் தொடங்கி விட்டது. சும்மா கிடந்த சங்கை எடுத்து ஊதித் தள்ளினேன். ஐம்பதிலும் ஆசை வரும் என்று அறியாமலா சொல்லி வைத்தார்கள். சுகன்யாவும் அப்படி இப்படி கதையிலேயே காலத்தைக் கடத்தி வந்தாள். ஓயில் பண்ணின சைக்கிள் கொஞ்சக் காலத்திற்குத்தான் ஒழுங்காக ஓடும். இப்போது சைக்கிளின் ஓட்டத்தில் சில பல கோளாறுகள் தெரிந்தன. எங்களது சந்திப்புக்களின் இடைவெளிகள் நீண்டன. இளமை மீண்டும் பெயர்ந்து நின்ற என்னுடைய நிலைமை விசயத்தை மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் குழப்பமாகி விட்டது.

சைக்கிள் கடைக்கு பொழுது போக்கி வம்பளப்பதற்கு வயதில் மூத்த இரண்டொருவர் வந்து போவார்கள். பழமும் தின்று கொட்டையும் போட்டவர்கள் என்னுடைய இரகசிய காதலை அறியாமல் இருப்பார்களா? அவர்கள் எனக்கு வாழ்க்கையின் யதார்த்தத்தை அடிக்கடி கதைகளாகச் சொல்லுவார்கள். சுகன்யாவின் விசயம் நிஜத்துக்கு ஒத்துப் போவது கஷ்டம் என்றும் எச்சரித்து இருந்தார்கள்.

பழசுகள் எப்போதும் எல்லாவற்றிற்கும் தொணதொணத்துக் கொண்டுதான் இருப்பார்கள். இவர்கள் சொன்ன நியாயமான வார்த்தைகளின் வெம்மையை வேலையைப் பிராக்காகவே எடுத்துக் கொண்டேன். ஆனால் சூடு வாங்கிய பின்னர்தான் மூத்தோர் வாய்ச்சொல் அமிர்தம் என்று உணர்ந்து கொண்டேன். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்தா அவதிப்பட்டு ஆவது ஒன்றும் இல்லை. இருந்தாலும் சூடுவாங்கிய காட்சியை பிளாஷ்பாக்கில் இடைஇடையே போட்டுப் பார்த்திருக்கிறேன்.

இந்த உலகில் எல்லாமே காரண காரியத்தோடுதான் நடந்துகொண்டு இருக்கின்றது. கண்ணன் காட்டிய கார்யோகம் கலண்டர்களாக வீடுகளிலும் கடைகளிலும் கீதாசாரமாய் தொங்கிக் கொண்டு இருப்பதோடு சரியாகி விடுகிறது. சுகன்யாவிடம் நான் வாங்கிக் கொண்ட சூட்டினுடைய காரணகாரியம் ஒரு பக்கமாகப் பார்த்தால் நியாயமானதாக இருக்கும். இருந்தாலும் நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. ஆனால் இதிலும் ஒரு வேடிக்கை இருக்கின்றது. சமூகத்தினுடைய நியாயப்படுத்தல்கள் பெண்களுக்குச் சார்பாகவே பெரும்பாலும் இருக்கின்றது. அதனால் இங்கே நான் காட்டுகின்ற என்னுடைய நியாயங்கள் எடுபடாமல் அடிபட்டுப் போகின்றன. சிவப்புக் கண்ணாடிக்காரனுக்கு பார்ப்பது எல்லாம் சிவப்புத்தான். கண்ணாடியைக் கழற்றி வைத்து விட்டு ஒரு கணம் என்னைப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சுகன்யாவும் ஒரு சராசரிப் பெண்தான். பெண்மை உயரத்தில் இருந்தாலும் பள்ளத்தில் இருந்தாலும் திருமணம் குழந்தை என்ற இலக்கிலேயே பூரணமாகிறது. ஆனால் பெண்ணியம் கண்ணியம் என்று எத்தனையோ விஷயங்களைப் பேசியும் எழுதியும் விடுகிறார்கள். புதுமைப் பெண் என்பதை புரிந்துகொள்ளாமல் விக்கி வாந்தி எடுக்கிறார்கள். சொல்ல வந்ததைவிட்டு இன்னும் விலகிப் போய்விடவில்லை.

இருபத்தைந்து அல்லது முப்பதுக்குள் பெண்மையின் பூரணத்துவம் கிடைக்கப் பெற வேண்டும். பெண்ணியத்தின் அரிச்சுவடியே இதுதான். அதற்கு மேல் வயது ஏற ஏற இலக்கை அடைய வேறு வழிகளை பெண்மை தேடத் தொடங்குகின்றது.

சுகன்யாவின் தேடுதல் வேட்டையில் நானும் குறிவைக்கப்பட்டேன். என்னுடைய இளக்காரத்தை தேவைப்பட்டால் இறுதி முடிவு எடுக்கப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம். கடலின் ஆழத்தை அளந்தவனுக்கும் கயிறு கொடுக்கின்றது பெண்ணின் ஆழம் என்பதைக் காலம் கடந்து அறிந்து கொண்டேன். சுகன்யாவுக்கு ஒரு வாத்தியார் மாப்பிள்ளை அமைந்துவிட்டார். திருமண அழைப்பையும் அக்கறையோடு அனுப்பி இருந்தாள்.

எல்லாம் முடிந்து ஒரு வருடம் ஓடிவிட்டது. தனது வாத்தியார் கணவரோடு ஹீரோ கொண்டாவில் போகும்போது எனது கடைப்பக்கம் சிலவேளைகளில் திரும்பிப் பார்க்கிறார். அந்தப் பார்வையின் பொருள் என்ன என்பதை என்னால் அறிய முடியவில்லை. பெரும்பாலும் சைக்கிள் கடையோடுதான் எனது எஞ்சிய வாழ்நாள் கழிந்து விடக்கூடும். இன்றைய நடைமுறை வாழ்வின் அட்டகாசங்களுக்கு ஈடுகொடுக்க உடல் வலு அற்றவனுக்கு சிரமம்தான். மனப்பொருத்தம் என்பது பணப்பொருத்தம் என்றாகிவிட்டது.

ஆனால் தாங்கள் நாலுபேர் மெச்சும்படி வாழவேண்டும் என்றுதானே எல்லோரும் விரும்புவார்கள். தியாகம், காதல், அன்பு என்ற விசயங்கள் கடைச்சரக்காகி விட்டன. ஆனால் உணர்வுகள் செத்துப்போய் விட்டனவா? உடல் உறுப்புகளில் ஒன்று ஊனமாகிவிட்டால் உணர்வுகளும் ஊனமாக வேண்டுமென்ற அவசியம் இல்லை. என்னைப் போன்றவனுக்கும் உலக ஆசாபாசங்கள் இருக்கின்றது என்பதை சமூகம் ஏற்றுக்கொள்ள மறுப்பது வேதனைதான்.

படைச்சவன் படி அளப்பான் என்று சொல்கிறார்கள். திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்கிறார்கள். இதெல்லாம் நடைமுறையில் ஆணாதிக்கம் விட்டுப் போகாததைப் போலத்தான் உடல் வலுக்குறைந்தவர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்க வேண்டிய நிலமையும் மாறப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திசைமாறிய கா(லம்)தல்

சி.சக்திவேல்
வத்திராயன்.

முடியாது தான்
நெஞ்சில் பச்சை குத்திய
உந்தன் மஞ்சள் முகவழகை
என்றும் மறந்துவிட
என்னால் முடியாதுதான்

பள்ளிக்கூட வகுப்பறையில்
பாடம் நடக்கும் பொழுதிலெல்லாம்
ஓரக்கண்ணால் பார்த்துப் பார்த்து
தீராக்காதல் படித்த கதை

கோவில் திருவிழாவில்
தோகை மயிலென நீ
தோழிகளோடு வர
ஆனாலும் எனக்கென்ன
உனைக்காண வாய்த்ததொரு
அழகிய தருணமென்று
சென்றுவிடு என நீ
கண்ணால் கெஞ்சியதையும்
புன்னகையால் உதறிவிட்டு
உன் பின்னால் தொடர்ந்த கதை

அந்திமாலைப்பொழுதொன்றில்
ஆற்றங்கரை மரத்தடியில்
மஞ்சனமாய் உந்தன்
மடிமீது புதைந்த கதை
எத்தனை கதை எத்தனை வகை
அத்தனையும் மறந்துவிட
எப்படித்தான் முடியும்

போரின் போக்கினால் திசைமாறினோம்
நீ எங்கோ நான் எங்கோ
செய்வதேதறியாது சிந்திய கண்ணீர்
ஐந்து சமுத்திரத்திலும்
ஆறு துளிகள் குறைவாயிற்று
ஆனாலும் என்ன செய்ய
உடைந்து பின் உருவானேன்

அன்றொருநாள்
பேரூந்தில் அவளைக் கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே சென்றேன்
அமுதாய் அவள் பெயர் உரைத்தேன்
திரும்பிய அவள் முகம் கண்டேன்
கண்கள் குளமானேன்
கண்ணுக்குள்ளே கண்ணீரை மூழ்கடித்தேன்

அவள் கழுத்தைப் பார்த்தேன்
கழுத்திலே தாலி
நெற்றியிலே குங்குமம்
அவள் கண்ணைப் பார்த்தேன்
மாரிகாலத்து குளமென அவள் கண்கள்
கண்ணால் பேசும் கலை அறிந்தவனல்லவா
அவள் கண்ணீரின் மொழியை
எனக்குள்ளே மொழி பெயர்த்தேன்
பத்து நிமிடங்கள்
மொத்தமாய் உறைந்து நின்றேன்

அண்ணே கொஞ்சம் வழிவிடுங்கோ
குரல்கேட்டு விழித்துக் கொண்டேன்
அவள் காதோரம் சென்று
தயக்கமாய் கேட்டேன்
இப்படியே வந்துவிடு
உன்னை கூட்டிச் செல்கின்றேன்
அவளின் பதிலை
ஆவலாய் எதிர்பார்த்தேன்
மெல்லிய சிரிப்போடு
சன்னமாய் சொன்னாள்
உனக்கு உன் மனைவி உன் பிள்ளை
எனக்கு என் கணவர் என் பிள்ளை
எல்லோரையும் விட்டுவிட்டு
எப்படி முடியும்
நீ என் காதலன் தான் ஆனால்
அவர் என் கணவர்

புதுக்காடு இறக்கம் முன்னுக்கு வாங்கோ
நடத்துனரின் குரல் கேட்டு
மெதுவாக இறங்கி நடந்தேன்
உயிரற்ற உடலாக
திரும்பிப் பார்த்தேன்
யன்னல் வழியே அவள் கைகள்
பேரூந்து விரைந்து சென்று
மறைந்து கொண்டிருந்தது
காலத்தைப் போல
மனைவிக்கும் மகளுக்கும்
வடை வாங்கவென
கண்ணண்ணை கடை நோக்கி நடக்கலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக் கிராமமான அரசன் குடியிருப்பு

ஈழத்தின் வடபுலத்தில் உள்ள பிரதான நிர்வாக மாவட்டங்களில் வந்தாரை வாழவைக்கும் குணம் படைத்த மாமனிதர்கள் வாழும் மாவட்டம் கிளிநொச்சி ஆகும். இக் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதானமாக நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்றது. இதில் அதிகளவு பிரதேசங்களை உள்ளடக்கிய பிரிவாக பச்சிலைப்பள்ளி உள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் புலோப்பளை எனும் எழில் கொஞ்சும் கிராமத்தின் ஒரு கிளைக் கிராமமாக இவ் அரசன் குடியிருப்பு கிராமம் காணப்படுகின்றது. இவ் அரசன் குடியிருப்பு கிராமமானது புலோப்பளை கிழக்கு Kn/84 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட ஒரு நிர்வாக கிராமம் ஆகும்.



தங்கேஸ்வரன் அனோஜன்
புலோப்பளை கிழக்கு,
பளை.

இங்கு அண்ணளவாக 60 குடும்பங்கள் வரை வாழ்ந்துவரும் அதேவேளை இவற்றுள் இந்து மற்றும் கிறிஸ்தவம் போன்ற இரு வேறு மதங்களைப் பின்பற்றும் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். மேலும் இந்து மத வழிபாட்டுத் தலங்களும் இங்கு காணப்படுகின்றது.

அத்துடன் இவ் அரசன் குடியிருப்பு கிராம மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளுக்காக கிளி/பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மற்றும் கிளி/பளை மத்திய கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் இக் கிராம மக்கள் பிரதானமாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, பனைசார் தொழில், சுயதொழில் மற்றும் அரச, தனியார் நிறுவன வேலைவாய்ப்புக்கள் மூலம் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை கொண்டு செல்கின்றனர்.

அரசன் குடியிருப்பு கிராமத்தினை பிரதிபலிக்கும் வகையில் அதிசயம் விளையாட்டுக்கழகம் காணப்படுகின்றது. இவ் அதிசயம் விளையாட்டுக் கழகமானது ஆண் மற்றும் மகளீர் அணியினைக் கொண்டு பச்சிலைப்பள்ளியில் பதிவு செய்யப்பட்ட ஒரு விளையாட்டுக் கழகமாக உள்ளது. அத்துடன் இவ் விளையாட்டுக்கழகம் கடந்த 10 ஆண்டுகளாக அதாவது 2010 இல் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019வரை பச்சிலைப்பள்ளியின் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுச் சுற்றில் சம்பியன் மகுடம் வென்றுள்ளது என்பதும் குறிப்பிட வேண்டிய விடயமாகும். அத்துடன் அதிசயம் விளையாட்டுக் கழக மகளீர் அணியினர் வலைப்பந்தாட்ட ரீதியில் தேசிய மட்டம் வரை சென்று தமது சாதனைகளைப் பதிவுசெய்துள்ளனர். இதுவே கிளிநொச்சி மாவட்ட வரலாற்றில் முதலாவதாக ஒரு மகளீர் அணி தேசியம் வரை சென்றமை முதல் தடவை ஆகும்.

மேலும் அரசன் குடியிருப்பு பகுதியானது புலோப்பளையின் சிகரம் என வர்ணிக்கப்படும் அதேவேளை இக் கிராம அழகை மேலும் மெருகூட்டும் வகையில் புலோப்பளை றோ.க.த.க. பாடசாலையின் விளையாட்டு மைதானம் மற்றும் சிறுவர் பூங்கா என்பன இவ் அரசன் குடியிருப்பு கிராமத்தின் எல்லையில் அமைந்துள்ளது.



நல்ல புத்தகங்கள்
மனதை
விசாலமடையச்
செய்கின்றன.
வேறு ஒரு
வாழ்க்கையை,
வேறு ஒருவர்
அனுபவத்தை,
அவர் பல ஆண்டுகள்
வாழ்ந்து கற்றுக் கொண்டதை,
அவர் பல புத்தகங்கள் படித்து தெளிந்து
தேர்ந்ததை, ஒரு புத்தகமாக, ஒரு
வாக்கியமாக, ஒரு கவிதையாக
நம்மிடையே பரிமாறிக் கொள்கிறபோது
அவர் வயதும் அனுபவமும் நம்மிடையே
வந்து நிற்கின்றன..

- பாலகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலாய்வுகளின் வழியே "டைட்டானிக்" ஒரு பார்வை

"வாருங்கள் பெருந்தொற்று காலத்தை மறந்து விட்டு
கடலுக்குள் ஓர் பயணம் கொஞ்சமும் களைப்பின்றி"

டைட்டானிக் என்றதும் உங்கள் எல்லோருக்கும் டைட்டானிக் கப்பலை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட திரைப்படமும் அந்த காதல் கதையும் தானே ஞாபகம் வருகிறது. ஆனால் நான் சொல்ல வருவது அதையன்று. காதல் எல்லா இடங்களிலும் தான் இருக்கின்றது. ஆனால் வேறெங்குமே இல்லாதது டைட்டானிக்கில் இருக்கின்றது. கப்பல்களில் பயணம் செய்வதொன்றும் அவ்வளவு அதிசயமான விடயமல்ல. நாகரிகங்களின் தொடக்க காலத்தில் இருந்தே மக்கள் நீர் வழிப் பயணங்களுக்கு நாவாய்களையும் படகுகளையும் பயன்படுத்தி உள்ளதற்கு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. ஆனால் டைட்டானிக் கப்பலுக்கு வேறு எந்தக் கப்பலுக்குமே இருக்காத கதை ஒன்று உள்ளது.



பா.பாலாஜினி
சுற்றுலாத்துறை மாணவி,
யாழ் பல்கலைக்கழகம்.

இன்று "டைட்டானிக் கப்பல் இயற்கையை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கின்றது." ஆம் வலுவான கடல் நீரோட்டம், உப்பு அரிப்பு மற்றும் உலோகத்தை உண்ணும் பக்றீரியாக்களின் காரணமாக டைட்டானிக் கப்பல் சிதைவடைந்து வருவதாக அண்மைய ஆய்வுகளினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. டைட்டானிக் கப்பலை தெரியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. அந்த அளவிற்கு உலக அளவில் பிரசித்தம் வாய்ந்த ஒன்றாகவும் பேசப்படும் விடயமொன்றாகவும் இக்கப்பலும் அதன் அழிவும் காணப்படுகின்றது.

உலக அளவில் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தான் கடல்சார் அகழ்வாய்வுகளின் வளர்ச்சியானது வேகமடைந்தது எனக் குறிப்பிடலாம். இரண்டாம் உலகப்போரின்போது சிதைவடைந்து கடலிலே மூழ்கியிருந்த கப்பல்களையும் அவற்றினுள் மறைந்திருந்த பொருட்களையும் கண்டுபிடிக்க வேண்டும் என்ற முனைப்பே தொல்லியலாளர்களை கடல் நோக்கி இழுத்து வந்துள்ளது. இன்று வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ந்து வருகின்ற நாடுகள் என்ற வேறுபாடு ஏதுமின்றி அனைத்து நாடுகளுமே கடல்சார் தொல்லியலில் (Maritime archeology) ஆர்வம் காட்டி வருகின்றன.

அவ் ஆர்வத்திற்கு தூண்டுதலாகவும் அடையாளமாகவும் விளங்குவது டைட்டானிக் கப்பல் தான். கடற்போக்குவரத்தில் அமெரிக்கா பிரித்தானியா முதலிய நாடுகள் போட்டித்தன்மையுடன் ஈடுபட்ட வேளையில்தான் கூர்நாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமானது அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்ட நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டதுதான் டைட்டானிக். உலக அளவில் மிகப்பெரியதாக கட்டப்பட்ட இக்கப்பலானது "மூழ்கடிக்கப்படாத கப்பல்" என்ற விளம்பரத்துடனே தனது பயணத்தினை ஆரம்பித்தது. 882 அடி நீளம் 92.2 அடி அகலம் 59.5அடி உயரத்தினைக் கொண்ட இந்தக் கப்பலில் சுமார் 46329தொன் நிறையுள்ள பொருட்களை ஏற்றகூடியதாக இருந்தது. கப்பலில் 16அறைகள் இருந்ததுடன் நீர் புகாத வண்ணம் அவை அமைக்கப்பட்டிருந்தன. ஓர் அறைக்குள் நீர் புகுமாயின் அவ் அறையின் கதவு தானாகவே மூடிக்கொள்ளும் தொழிநுட்பத்துடன் அமைக்கப்பட்டது.

பல மாதங்கள் கப்பலில் தங்கியிருக்கக்கூடிய வகையிலான உணவு சேமிப்பு, சிற்றுண்டிச்சாலைகள், மைதானங்கள், நூலகங்கள், உணவு உண்ணும் வகையிலான உலகத் தரம் வாய்ந்த பீங்கான்கள் என அனைத்து உயர்தர வசதிகளையும் தன்னகத்தே கொண்டிருந்த இவ் டைட்டானிக் கப்பலானது இப்படியோர் அழிவினை எதிர்கொள்ளும் என யாருமே நினைத்திருக்க வாய்ப்பில்லைத் தான். 1909ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கப்பல் கட்டுமானமானது 1911இல் நிறைவடைந்தவிடத்து 1912 ஏப்ரல் 10ம் திகதி (புதன்கிழமை) இங்கிலாந்தின் சைதாம்டன் துறைமுகத்தில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தது. புறப்படும்போது கப்பலில் உந்திகளின் தாக்கம் காரணமாக அருகிலிருந்த நியூயோர்க் என்ற கப்பலை நகர்த்தி தன்னருகே கொண்டு வந்ததனால் ஒரு மணிநேரம் தாமதமாகியே புறப்பட்டுள்ளது. சைதாம்டன் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு பிரான்ஸில் பயணிகளை ஏற்றிக்கொண்டு குயின்ஸ்டன் துறைமுகத்தினூடாக 2240 பயணிகளுடன் பயணித்தது. ஏப்ரல் 14 மதியம் 1.45 மணியளவில் அமெரிக்கா எனும் கப்பலில் இருந்து டைட்டானிக் கப்பலுக்கு செல்லும் வழியில் பனிப்பாறைகள் உள்ளதாக செய்தி அனுப்பியும் தகவல் சென்றடையவில்லை. கப்பலில் இருந்து 20 உயிர்காப்பு படகுகளும் ஒன்றன் பின் ஒன்றாக தரையிறக்கப்பட்டன. ஏப்ரல் 15 மதியம் 02.20 மணியளவில் கப்பல் முற்றாக கடலில் மூழ்கியது. கடைசியாக கப்பலில் இருந்த 2233 பேரில் 706 பேர் காப்பாற்றப்பட்டனர்.

டைட்டானிக் மூழ்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு உலக அளவில் கடல்சார் சுற்றுலாவானது இன்னோர் பரிமாணத்தை எட்டியிருக்கக்கூடுமோ என எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவிற்கு மனித இனம் தவறவிட்ட ஒரு பொக்கிஷமாக இது உள்ளது. உண்மையிலேயே அன்றைக்கு அந்தக் கப்பல் மூழ்கியிருக்காவிட்டால் நான் கூட ஏன் நீங்கள் கூட உங்கள் விடுமுறையில் டைட்டானிக்கில் ஒரு பயணம் போய் வந்திருக்கலாமே.

மூழ்கிய இக்கப்பலைக் கண்டுபிடிக்க பல தடவைகள் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1985 செப்டெம்பர் மாதம் 1ம் திகதி மூழ்கிய கப்பலின் சில பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான ஆய்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடுக்கிவிடப்பட்டன. 1987அளவில் மூழ்கிய கப்பலில் இருந்து 1800 கலைப்பொருட்கள் சேகரிக்கப்பட்டன. 1995அளவில் ஜேம்ஸ் கமரூன் அவர்கள் கப்பலை பார்வையிடச் சென்றதுடன் அப்போது எடுத்த படங்களினை தனது டைட்டானிக் திரைப்படத்திலும் பயன்படுத்தி உள்ளார். 1998அளவில் முதலாவது சுற்றுலாவாசிகள் அங்கு பயணம் செய்தனர். 2012ல் யுனெஸ்கோவால் அது பாதுகாக்கப்பட்ட உலக மரபுரிமையாக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் உறைய வைக்கும் சூழ்நிலைகளில் கும்மிருட்டான நீரில் தீவிர அமுக்கத்திலும் கப்பலில் உயிரினங்கள் வாழ்கின்றன என்பது தான். அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கருத்துப்படி டைட்டானிக் கப்பல் சிறிது சிறிதாக அழிவடைந்து கொண்டு வருகின்றது என்கிறார்கள். கடல் ஆய்வு வரலாற்றை முழுமையாக ஆய்வு செய்வோமேயானால் அதில் டைட்டானிக் கப்பலுக்கும் முக்கிய பங்குண்டு. கடல் தன் மடியில் அதிக செல்வங்களை எல்லாம் ஒளித்து வைத்திருக்கின்றது என்ற அறிஞர் ஒருவரின் கருத்தினை நான் இதுவரையிலும் பெரிதாக எண்ணிக் கொண்டதில்லை. ஆனால் இவரது கூற்றுக்கு இக்கப்பலே சான்று. எழுதுவதற்காக எவ்வளவோ விடயங்கள் இருக்கும் பட்சத்தில் நான் இப்படியோர் விடயத்தை தெரிவு செய்தமைக்கு காரணம் இருக்கவே செய்கின்றது. அழிந்துவரும் மரபுரிமைகளைப் பாதுகாப்பதும் பேணுவதும் நம் ஒவ்வொருவரினதும் கடமையன்றோ. டைட்டானிக் ஒரு உலக மரபுரிமை. எங்கள் எதிர்கால சந்ததிகளுக்கு நம்மை விட்டுச் செல்லும் தடயங்களில் இதுவுமொன்று.

இனியொரு டைட்டானிக் மூழ்காமல் காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையன்றோ.

**நன்றி**

**"இனி உங்கள் கனவுகளில் டைட்டானிக்கும் வந்து போகட்டும். ஏனென்றால் அடுத்த டைட்டானிக்கை உருவாக்கப் போவது நீங்களாகக் கூட இருக்கலாம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

நீலவானம் மெல்ல மெல்ல சிவப்பை அள்ளி பூசத்தொடங்கிய நேரம் இருள் வெளிச்சத்தை விழுங்கிக்கொண்டிருந்தது. அந்த இருள் அருணாவின் உள்ளத்தையும் விட்டுவைக்கவில்லை. அவளது கருவண்டு கண்கள் இரண்டும் நீர்த்தொட்டிகளாய் நிரம்பி வழிந்தன. அவள் முகத்தில் ஒரு தேடல். அவள் தவறி விழுந்த துப்பட்டாவையும் சரிசெய்ய மனம் இன்றி ஓடிக்கொண்டு இருந்தாள். மெதுவாய் தன் கைபேசியை எடுத்து இலக்கங்களை தட்டினாள்.



வ.அபிலாசா
தம்பகாமம்,
பளை.

ரீங்.... ரீங்.....
அந்த கும்மிருட்டிலும் மின்மினிப் பூச்சிபோல ஒளியை காலியது சேகரின் கைபேசி.
ஹலோ......
.............
ஓ........ நோ.......
.............
சரி பயப்படவேண்டாம். நாங்கள் இப்போதே புறப்படுகின்றோம்.
........................
ஓகே

கைபேசியை வேகமாய் தனது காக்கிநிற பான்டில் இருந்த பொக்கற்றில் திணித்தார். கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டே ஜெனீபரை சைகையால் அழைத்தார் சேகர்.

கௌரிசேகர், ஐம்பது வயதை கடந்து விட்டதை அவர் தலையில் இருந்த வெள்ளைநிறம் அப்பட்டமாய் காட்டியது.

டிரைவர்.... சீக்கிரமா ஜீப்பை எடு..... கௌரிசேகரின் தொனியில் ஒரு பயம் கலந்த தேடல் இருந்ததை ஜெனீபர் உணர்ந்து கொண்டாள்.

ஜீப் வளைந்த பாதை வழியே திக்கித்திணறி ஓடிக்கொண்டு இருந்தது. கௌரிசேகர் ஜீப்பின் முன் ஆசனத்தில் டிரைவர் சின்னசாமி அருகே இருந்தார். அவரது நெற்றி சுருங்கி இருந்தது. அவர் ஏதோ ஒன்றை சிந்திப்பதை தெளிவாய் காட்டியது.

இந்த 30 வருட பொலீஸ் வாழ்க்கையில் எத்தனையோ பேர், எத்தனையோ பிரச்சினைகள். ஆனால் இந்த பிரச்சினை கொஞ்சம் கௌரிசேகரினை அதிகமாய் பாதித்தது என்பதை அவர் நடவடிக்கைகளை பார்த்து ஜெனீபர் அறிந்து கொண்டாள்.
என்ன சேர்.... யோசிக்கிறீங்க?
இந்த கேசை எப்பிடி முடிக்கிற எண்டு தெரியேல்ல. இன்னும் இரு நாட்களில் நான் ஓய்வுபெற போகிறேன். ஆனால்.... ஜெனீபர்.....
ஆனால் என்ன சேகர் சேர்...
“நான் பெரியவரிட்ட கேக்காம அவனை அங்க அனுப்பியிருக்கக் கூடாது” என்றபடி தன் தலையில் கையை வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கடைகள் நிறைந்திருந்த தெருவில் இருட்டிலும் பிரகாசமாய் தெரிந்தது அருணாவின் வீடு. வீட்டு முற்றத்தில் இருந்த மர கதிரையில் கைகளால் முகத்தை தாங்கியபடி இருந்தாள் அருணா. அவளது வீட்டுவாசலில் பொலீஸ் ஜீப் வந்து நின்றது. ஜெனீபர் வெளிகதவை தள்ளி திறந்தாள். கதவு கீறீச்... என்ற சத்தத்துடன் திறந்து கொண்டது. அவள் முதலில் உள்ளே நுழைந்தாள் பின்னால் சேகர் கைத்துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்தார்.

கதவு திறந்த சத்தம் கேட்டதும் நிமிர்ந்த அருணா அவர்களை நோக்கி வர ஆரம்பித்தாள். அவள் முகம் அழுதழுது வீங்கியிருந்தது.

ஜெ....னீ....பர் மெதுவாய் விம்மலுடன் கூப்பிட்டாள் அருணா.
டோன்ற்..... வொறி, சேர் வாறார்.
ம்....ம்.... தலையாட்டினாள் அருணா
அவர்களின் சம்பாசனையுள் குறுக்கிட்டார் கௌரிசேகர்.

கோபியுடன் எப்போது கடைசியா கதச்சனீங்க....?
மூன்று மணிக்கு...... மெதுவாய் சொன்னாள். வழமையாய்
வரப்பிந்தினால் சொல்லிவிடுவார். பயமாய் இருக்கு சேர்..
விம்மலுடன் அழ ஆரம்பித்தாள்.

திடீரென திறந்த கதவினூடு அந்த கறுப்பு நிற கார் அட்டைபோல் ஊர்ந்து கொண்டே உள் நுழைந்தது. உள்ளே 30 வயது மதிக்கத்தக்க இளைஞன், அவனது வெள்ளைச் சேட்டில் கீறல்களும் கிறுக்கல்களுமாய் கறை ஒட்டியிருந்தது. வயிற்றுப்பகுதியில் சில இடங்களில் சிவப்பு பொட்டுகளாய் இரத்தக்கறை. ஆனால் அவன் முகம் மலர்ந்து இருந்தது. காரைவிட்டு வெளியே இறங்கினான்.

கோபி.... அருணா சத்தமாய் கத்தினாள். அவளது முகம் தாமரையாய் மலர்ந்தது. அருணாவை பார்த்து ஒரு சினேகத்துடன் புன்னகைத்தான் காரில் இருந்து இறங்கிய கோபி. பின் சேகர் சேர்.... அழைத்தபடி சேகரை நோக்கிச் சென்றான். அதுவரை ஆச்சரியமாய் பார்த்துக்கொண்டு இருந்த சேகர் தன் மௌனம் கலைத்தார்.

கோபி, எங்க? ஏன் இவ்வளவு நேரம்?
சேர் ஸ்ரேசனுக்கு போன் பண்ணினன், அப்போது நீங்கள் இங்கு இருப்பதை கண்ணாயிரம் சொன்னான். அதுதான் நேர இங்க.... அது இருக்கட்டும் ஏன் லேற்...? கௌரிசேகர் குறுக்கிட்டார். உங்களால முடிக்கமுடியாத அந்த லக்ஷி கடத்தல் கேசை சோல்வ் பண்ணீட்டன். ஏதோ ஒன்றை கண்டறிந்த விஞ்ஞானிபோல உற்சாகமாய் சொன்னான் கோபி.
எப்படி? ஆர்வமாய் கேட்டார் கௌரிசேகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்க சொன்னதைப் போல அந்த பாழடைந்த வீட்டிற்குள் போய் மறைந்து இருந்தேன். கடத்தல்காரர்கள் லக்ஷியுடன் அந்த வீட்டிற்கு வந்தனர். நான் உடனே எங்க ரீமுக்கு கோல் பண்ணி இன்போர்ம் பண்ணீட்டன். அவர்கள் உடனே வந்தனர். எல்லோரும் சேர்ந்து அவர்களை கைது செய்து சிறுமி லக்ஷியை பெற்றோரிட்ட ஒப்படைச்சிட்டம். அடுக்கடுக்காய் மூச்சுவிடாது சொல்லி முடித்தான் கோபி.

எல்லோர் முகத்திலும் தெளிவும் மலர்ச்சியும் தென்பட்டது. அருணாவின் கைபேசியில் இருந்து டிங்... டொங்... டிங்.... அலாரம் ஒலித்தது. நேரம் பன்னிரண்டு மணி, அவளது கைபேசியின் திரை காட்டியது. அனைவரும் ஒன்றாய் ஹப்பி.... பேத்டே.. சேர்... என்று கத்தினர். கௌரிசேகர் முழுமதியாய் பூரணமாய் முகம் மலர்ந்து "நன்றி" என்றார்.

**இதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம் தான் நம்பிக்கை.**

**அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும் உலக பந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.**

**கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.**

**காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.**

**அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.**

**கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரியமுடையோர் ஒருபோதும் பாவம் செய்யார்.**

**- சுவாமி விவேகானந்தர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைக்குடும்பம்

மயிலாப்பூர் ஒரு விவசாய பூமி. அவ்வூரில் உள்ள குடும்பங்கள் மாடுகளை வாழ்வாதாரத்திற்காக வளர்த்து வந்தனர். அவ்வூரில் பல ஏழைக்குடும்பங்கள் கூலி வேலை செய்து வந்தனர். அதில் இராமநாதனின் குடும்பமும் ஒன்றாகும். இராமநாதன் ஊர்ப்பெரியவர் ஒருவரின் வயலில் கூலி வேலை பார்த்து வந்தான். அங்கு அவன் மாதாந்தம் ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கி வந்தான். அது அவனின் குடும்ப உணவுச் செலவிற்கே போதாது. அவனுக்குப் பெண்பிள்ளையொருத்தி இருந்தாள். அவன் மனைவி கல்யாணி, அவன் வேலை முடிந்து வீட்டுக்குச் சென்றால் "எனக்கு ஒரு புடவை வாங்கித் தாங்கோ, விதம் விதமா நகை நட்டு வாங்கித் தாங்கோ" என்று அவனை நச்சரித்துக் கொண்டிருப்பாள். அவளின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் இராமநாதன் குடிச்சிட்டு வந்து கூச்சல் போடுவான். அதற்கு கல்யாணியும் "எனக்கு ஒரு புடவை வாங்கிக் கொடுங்கோ என்றால் கையில் காசில்லை என்பியள். ஆனா கண்டதையும் வாங்கிக் குடிக்கத் தெரியும். ஏதோ பெத்ததை பொம்புளைப் பிள்ளையா பெத்திட்டன். எனக்கொண்டு வந்து வாச்சிருக்குது" என்று கத்துவாள்.



சுபானந்தன் பகீர்த்தனன்
மாணவன்,
தரம் - 8.

அப்பாவும் அம்மாவும் சண்டை பிடிப்பதைப் பார்த்து வள்ளி மனம் நொந்து அழுவாள். நான் ஏன் இன்னும் உயிர் வாழ வேணும், பேசாம செத்திடலாமா என்று நினைப்பாள். ஒரு நாள் காலை கிணற்றடியில் இருந்து பாத்திரங்களை மினுக்கிக் கொண்டு இருந்தாள் வள்ளி. அப்போது அவள் பார்வை அருகில் இருந்த கருங்கல் ஒன்றின்மீது பட்டது. அது அந்தக் கொளுத்தும் வெயிலில் பளபளத்துக் கொண்டிருந்தது. அப்போது வள்ளியின் மனதில் சிந்தனை ஒன்று தோன்றியது. "இந்தக்கல் எவ்வளவு தான் வெயில், மழை, புயல் வந்தாலும் அசையாமல் தலை நிமிர்ந்து நிற்கும்போது நான் மட்டும் ஏன் சாக வேண்டும்" என்று யோசித்தாள். அன்றிலிருந்து அம்மா அப்பாவின் சண்டைகளுக்கு காது கொடுக்காமல் தன் இலட்சியத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

இது இவ்வாறு இருக்கும்போது வள்ளியின் தந்தை இராமநாதன் திடீரென்று புற்றுநோயால் பீடிக்கப்பட்டு இறந்தான். கல்யாணியின் குடும்பம் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது. கல்யாணி கூலி வேலைக்குச் சென்று அயராது உழைத்தாள். என் கணவன் உயிரோடு இருக்கும்பொழுது அவருடன் சண்டைபிடிக்காமல் புரிந்து கொண்டு இருந்திருந்தால் அவரும் குடித்திருக்க மாட்டார் நானும் அவருடன் சந்தோசமாக வாழ்ந்திருக்கலாமே என்று மனம் நொந்து தன் தவறை உணர்ந்தாள். காலங்கள் கடந்தன. அவளின் மகள் வள்ளி க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தாள். இதை அறிந்த கல்யாணியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வள்ளியிற்கு பல்கலைக்கழகப் படிப்புக்கு வாய்ப்புக்கிட்டியது.

கல்யாணி தான் சேர்த்து வைத்திருந்த பணத்தை எடுத்து வள்ளியிடம் கொடுத்து அவளைப் பல்கலைக்கழகம் அனுப்பினாள் ஐந்து வருடங்கள் கழிந்தன. வள்ளியின் பல்கலைக்கழகப் படிப்பு முடிந்தது. டாக்டர் பட்டம் பெற்றாள். வள்ளி மத்திய வைத்தியசாலையில் தனது சேவையைத் தொடர்ந்தாள். தனது ஊர்மக்களுக்கு இலவசமாக சேவை செய்து வந்தாள்.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்றும் இன்றும்

திருமதி.டே.விஜயராணி
இத்தாவில்,
பளை.

பச்சிலைப்பள்ளி தன்னிலே
பனையோலை வீட்டினிலே
பண்புடன் பள்ளி சென்று
இன்பமுடன் படித்து வந்தோம்
கொடிய போர் மூண்டிடவே
கடல் கடந்தோம்
வன்னிக்குச் சென்றோம்
ஒருவேளைக் கஞ்சியுடன்
ஒருநாள் பசியை போக்கினோம்
பலமைல் தூரம் நடந்தோம்
கல்விதனைப் பயின்றோம்
அந்திசாயும் முன்னே வீடு
வந்து சேர்ந்தோம்
குப்பி விளக்கினிலே
விழித்திருந்து கற்றோம்
பரீட்சை எழுதினோம்
சித்தியும் பெற்றோம்
காலச்சக்கரம் உருண்டோடியது
முள்ளி வாய்க்காலை அடைந்தோம்
உறவுகளைப் பிரிந்து
முண்டங்களைக் கடந்தோம்
சேற்று நீரிலே தாகம் போக்கினோம்
முகாமிற்குச் சென்றோம்
வரிசையில் நின்றோம்
கையேந்தி வயிறு நிறைய உண்டோம்
காலம் கைகூட மீண்டும்
பச்சிலை மண்ணில் கால் தடம் பதித்தோம்
இனித்தான் "நிம்மதி" என்று
பெருமூச்சு விட்டோம்
கல்வீடுகள், பல மாடிப் பள்ளிகள், காப்பெற் வீதிகள்
எனப் பலதும் உருவாகின
சந்தோசமாக உலாவித் திரிந்தோம்

ஆனால்............
அன்றிருந்த
நிம்மதி இன்றில்லை
மண்ணைத் தோண்டுகின்றனர்
கஞ்சா கடத்துகின்றனர்
தாய் மண்ணை நாசமாக்குகின்றனர்
இதுவா நிம்மதி?
இறைவனின் சோதனையா?
இத்தனை கொடுமைகளால் தானோ
"கொரோனா" எம்மைச் சீரழிக்கின்றது
இனி எங்கே போவது..........
ஓடுகிறோம்.... ஓடுகிறோம்.........
ஓடிக்கொண்டே இருக்கின்றோம்
நிம்மதி தேடி........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மனம்

கமலநிதி
பளை.

முகத்துக்கு முன்னால் ஒன்று
முதுகுக்கு பின்னால் ஒன்று
முழங்கும் மானிடர் மத்தியில்
முழுமையாக வாழ்வது கடினம்

மனிதம் மறைந்த மனிதரிடம்
மனதினில் மதம் ஏறிவிட்டது
மறந்தது போல் ஒரு நடிப்பு
மகிழ்வது போல் ஒரு நடப்பு

சொல்வதையும் கேட்பார்கள்
சொந்தமாக கையும் தட்டுவார்கள் - அவர்
சொன்னபடி நடப்பதுமில்லை
சொந்த சிந்தனைக்கு இடமளிப்பதுமில்லை

சொத்துக்கள் பல சேர்ப்பார்
சொந்தங்களை வெறுத்திடுவார்
சோகம் போல் வாழ்ந்திடுவார்
சொர்க்கலோகம் நமக்கென்பார்

எல்லோரும் நல்லவர்கள்
எமைக் காக்கும் வல்லவர்கள்
எமனையும் வெல்பவர்கள்
என யாரும் எண்ண வேண்டாம்

இந்த உலகத்தில் குறைகளே இல்லாத குடும்பம் கிடையாது. வேதனையும் வலியும் இல்லாத மனிதன் கிடையாது. வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியை மட்டுமே அனுபவித்தவனும் கிடையாது. இதுவே உலகின் இயல்பு நிலை என்பதை அறிந்து வாழ பழகி கொள்ளுங்கள்.



**சாணக்கியர் நீதி**

*(3:1)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் விந்தை

விஞ்ஞானம் பல விந்தைகளைப் புரிந்துள்ளது. இது எமக்கு பல்வேறு துறைகளிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உதவி புரிகிறது. விஞ்ஞானம் சாதகமான விளைவுகளையும், பாதகமான விளைவுகளையும் புரிகிறது.

புராதன காலத்தில் விறகடுப்பில் வேதனைப்பட்டு சமைத்தார்கள். இப்போது மின் கேற்றல், மின்அடுப்பு போன்ற மின் சாதனங்களை பிளக்கில் பொருத்திவிட்டு ஆளியை ஒரு தடவை அமிழ்த்தும்போது மின் உற்பத்தியாகி தனது வேலைகளைச் செய்கிறது. இது விஞ்ஞானத்தின் விந்தை ஆகும்.



ப.ஹரிஷாந்
மாணவன்,
தரம் – 07.

முன்பெல்லாம் கால்கள் வலிக்க வலிக்க நடந்து சென்று படித்துவிட்டு வந்தார்கள். இப்போது மோட்டார் சைக்கிள்களில் ஏறி அமர்ந்து கொண்டு மோட்டார் சைக்கிளை இயக்கும்போது எமது உழைப்பின்றி தானே செல்கிறது. இதுவும் விஞ்ஞானத்தின் விந்தையாகும். முன்பு வானம் என்றாலே என்னவென்று தெரியாத நிலைமையே இருந்தது. ஆனால் தற்போது மின்கருவிகளைப் பயன்படுத்தி வானத்தில் பறந்து செல்கின்றார்கள். பறந்து செல்வது மட்டுமல்லாமல் சூரியக் குடும்பத்தையே சுற்றிப் பார்த்துவிட்டு வருகின்றார்கள். இவ்வாறு இன்று விஞ்ஞானம் பல விந்தைகளைப் புரிந்துள்ளது.

நாம் இப்பொழுது விவசாயத்துறையை எடுத்தோம் என்றால் முன்பு குனிந்து வளைந்து கால் வலிக்கவும் அதனைப் பொருட்படுத்தாமல் வேலைகளைச் செய்தார்கள். இப்பொழுது அரிவி வெட்டும் இயந்திரத்தால் வெட்டும் பொழுது நாம் வேடிக்கை பார்த்தால் போதும். அது மட்டுமல்ல முன்பு ஏர், கலப்பை பூட்டிய மாடுகளைக் கொண்டு சிரமப்பட்டு வயலை உழுவர். இப்பொழுது உழும் இயந்திரத்தால் வயலை உழுவர். இவ்வாறு பல வேலைகளை இலகுவாகச் செய்வதற்கு விஞ்ஞானத்தின் விந்தை உதவி புரிகிறது. அடுத்ததாக மருத்துவத்துறையை எடுத்தோம் என்றால் அங்கு எமது வெப்பத்தை அளவிடுவதற்கு வெப்பமானியைப் பயன்படுத்தினர். எமக்கு வரும் நோய்கள் என்னவென்று கண்டுபிடிப்பதற்கு வைத்தியர்கள் ரெலஸ்கோப் கருவியைப் பாவிக்கின்றனர். இதுவும் விஞ்ஞானத்தின் விந்தையாகும்.

நாம் கட்டடத்துறையில் சீமெந்தைக் கலப்பதற்கு மிகவும் கடினப்படுகின்றோம். இப்பொழுது தேவையான பொருட்கள் எம்மிடம் இருந்தாற் போதும், இயந்திரம் சீமெந்துக் கலவையாக கலந்து தரும். நாம் மாடிக் கட்டடத்தில் ஏற வேண்டுமென்றால் கால்கள் வலிக்க ஏற வேண்டும். இப்பொழுது மின் தூக்கி (லிவ்ட்) என்னும் மின்சாதனக் கருவியினுள் ஏறி நின்றால் போதும். எம்மை மேலே கொண்டு சென்று விடும்.

எனவே விஞ்ஞானிகளால் விஞ்ஞானம் அதீத வளர்ச்சி கண்டு பல விந்தைகளைப் புரிந்து மக்களை வியக்க வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் அர்த்தம்

நாம் ஒவ்வொருவரும் வாழ்கின்ற வாழ்க்கையானது அர்த்தம் உள்ளதாக இருக்க வேண்டும். ஏதோ பிறந்தோம் வாழ்கிறோம் என்ற நிலையில் வாழக் கூடாது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க நாம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதனை வைத்துக்கொண்டு வாழ்கிறோம் என்று சொல்லிவிட முடியாது.



**திருமதி. சி.ஜெயதர்ஜினி**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச சபை,**
**பச்சிலைப்பள்ளி.**

வாழ்க்கை எப்போதோ ஆரம்பமாகி விட்ட ஒன்று. எங்களை அறியாமலே எங்கள் வாழ்க்கை தொடங்கிவிட்டது. இனிமேல்தான் அதன் ஆரம்பம் என்று நாம் நினைக்கக் கூடாது. ஒவ்வொரு நிகழ்விலும் அந்த நிகழ்வு நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு கணத்திலும் பரிபூரணமாக வாழுவது தான் வாழ்க்கை ஆகும். வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் எமக்கு அனுபவமாகிறது. அந்த அனுபவம் ஏற்படுத்தும் தாக்கத்திற்கு ஏற்பவே நாம் நல்ல அனுபவம் என்றோ கசப்பான அனுபவம் என்றோ கூறுகின்றோம்.

நாம் எந்தச் செயலையும் செய்யாதிருந்தாலும் கூட மனம் எதையாவது சிந்தித்துக் கொண்டுதான் இருக்கும். 'சும்மா இருக்கும் சுகம்' என்று ஞானிகள் பாடுகிறார்கள். எண்ணங்கள் எழாத நிலையில், இறைநிலையில் இரண்டறக் கலந்திருத்தல்தான் சும்மா இருத்தலே அன்றி நாம் நினைப்பது போல செயலெதனையும் செய்யாமல் ஓய்வு இடத்தில் சும்மா இருத்தல் அல்ல.

நாம் செய்யும் சிறு செயல்களிலும், நிகழும் சம்பவங்களிலும் ஈடுபாட்டுடன் அனுபவித்து பழகினோம் என்றால் நாம் வாழத் தொடங்கிவிட்டோம் என்று பொருள். நாம் எப்போதும் இயற்கையுடன் விநோதமாகச் செயற்பட்டு பழக்கமாகிப் போனதால் அவற்றின் அருமை தெரியாது அனுபவிப்பதற்காக எதையோ தேடத் தொடங்கி வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு போதும் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு பணத்தை தேடக்கூடாது. அவசியமென்றால் பணத்தைத் தொலைத்தாவது வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். போட்டி நிறைந்த உலகத்தில் நாங்கள் ஓடித்தான் ஆக வேண்டும். குரோதம், பொறாமை போன்ற எண்ணங்கள் அற்றதான மனத்தினை ஆக்கிக் கொண்டு அந்த ஓட்டத்தையும் ஓர் அனுபவித்தலாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையை அனுபவிக்கும் மனஇயல்பு இல்லாதவர்கள் வாழ்க்கைச் சம்பவங்களை அனுபவிக்க இயலாது. இதனால் வாழும் கலையையும் இவர்களால் புரிந்துகொள்ள முடியாது. எப்போதும் பரபரப்போடும் படபடப்போடும் பறந்து கொண்டிருப்பதனால் வாழ்க்கை ஏட்டின் இன்பப் பக்கங்களைப் புரட்ட முடியாமலே வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறோம்.

அடுத்தவர் வழங்கும் இரவல் அறிவைப் பயன்படுத்தி வாழ்வை ஆராய்ந்து கொண்டிருக்கும் வரை ஒருபோதும் வாழ்விலுள்ள உண்மையை என்னவென்று உணர முடியாது போகின்றது.

வாழ்வின் அர்த்தம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக என்றைக்கும் இருப்பதில்லை. இனிமேலும் இருக்கப் போவதில்லை. அவரவரே வாழ்க்கைக்கான அர்த்தத்தை கண்டு கொள்வதுதான் நல்லது. எங்கள் வாழ்க்கையின் அர்த்தத்தை மற்றவர் மேல் திணிக்கும் போதுதான் பல பிரச்சினைகள் உருவாகின்றன. பெற்றவர் பிள்ளைகள் மேல் திணிக்கிறார்கள். தலைவர்கள் தொண்டர்கள் மேல் திணிக்கிறார்கள்.

எந்தச் செயலைச் செய்து கொண்டிருக்கிறோமோ அதனை மேலும் சிறப்பாகச் செய்வதற்கு உலக வாழ்வின் படிப்பினை மூலம் நாங்கள் பெற்றிருக்கும் சிந்தனைத் திறனை செலவிட வேண்டும். படித்த பெண்களால் அடுத்த தலைமுறையை மிக உன்னத நிலைக்குக் கொண்டு செல்ல முடியும்.

பிறர் எங்களுக்குத் தொந்தரவாய் இருந்தாலும் இடையூறு செய்தாலும் சகித்துக் கொள்ள வேண்டும். பொறுமையாய் இருக்க வேண்டும். இயற்கையின் விதி என்று ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். நாங்கள் அவர்களை எதிர்க்க ஆரம்பித்து விட்டால் வாழ்க்கையே போராட்டக் களமாகிவிடும். வாழ்வில் ஆனந்தத்தைப் பெறமுடியாமல் போய்விடும். எதிர்காலம் பற்றிய யோசனைகளில் நிழ்காலத்தை அனுபவிக்காமல் இழக்கக்கூடாது. நாம் அதிகமான எதிர்பார்ப்புகள் கொண்டிருப்பது தவறு. திட்டங்கள் போடலாம், செயற்படலாம். ஆனால் எதிர்பார்ப்பது, ஏங்கிக் கிடப்பது தவறு. துன்பம் வருவதும் இயற்கைதான். அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று திடமான மனமுடையவராக நாங்கள் மாற வேண்டும்.

அனைத்து இதயங்களின் வாழ்த்துக்களும் ஒன்று சேர்ந்தால் வாழ்க்கை எத்தனை இனியதாக இருக்கும். வாழ்த்துவது என்பது அன்பின் வெளிப்பாடு. நம்மைச் சுற்றி இருப்பவர்களின் உண்மையான வாழ்த்துக்கள் கிடைத்துவிட்டால் எவ்வளவு சந்தோசமாக இருப்போம். உலகத்திலுள்ள சகல பிரச்சினைகளும் சிக்கல்களும் மறந்து எங்கும் அமைதி நிலவும். உலகமே ஆனந்தப் பூங்காவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக ஒன்றை உணர்ந்துவிட்டால் மற்றைய உண்மைகள் தானாகப் புரியும். எனவே அறிவாளியாகக் காட்டிக்கொள்ள படிப்பதை நிறுத்தி அறிவாளியாக ஆவதற்குப் படிக்கலாம். "வாழத் தெரியாதவர்கள் வாழும் நாட்டில் ஆளத் தெரியாதவர்கள் ஆட்சிக்கு வருவார்கள்" என்று அருட்தந்தை வேதாந்திரி மகரிஷி மக்களின் உறக்கத்தை கலைக்கிறார். இக் கூற்றிற்கு ஏற்ப நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

எதிர்பார்ப்பற்ற அன்பு வலிமையானது. உயிரின் இணைப்புக் கருவியே இதுதான். எதிர்பார்ப்பின்றி நாங்கள் அன்பு காட்டினால் உலகம் எங்கள் மீது அன்பைப் பொழியும். அன்பு, இரக்கம் என்பன திட்டமிட்டு வருகின்ற விஷயங்கள் அல்ல. அன்பு தான் உலகப் பொதுமொழி. இதனை வைத்தே வாழ்வினை நாம் அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம். பிறருக்காக வாழும் போது தான் வாழ்க்கை அர்த்தமுடையதாகிறது.

அழகாய் இருக்க ஆசைப்படு. அழகை இழந்தாவது அடுத்தவருக்குப் பயன்படு. கடவுள் கருணையும் கூட இருந்தால் சரியான வாழ்க்கைப் பாதை அமையும். பயம் நம்மை இழுத்துப் பிடித்து பின்னடைய வைக்கிறது. அன்பு நம்மை முன்னேற வைத்து விசாலமாக்குகிறது. அன்பு இருக்கும் இடத்தில் பயம் இருப்பதில்லை.

இன்றைய படிப்பில் புத்தகங்கள் விழுங்கப்படுகின்றன. மனப்பாடங்கள் பட்டம் பெறுகின்றன. சொற்பொழிவாளர்கள் ஒலிக் குப்பைகளால் காதுகளையும் மனங்களையும் நிரப்புகிறார்கள். உயர்வு, தாழ்வு, விருப்பு, வெறுப்பு இவையெல்லாம் உலகத்தில் தோன்றுவதற்குக் காரணம் மனம் தான். இங்கு எடை போடுகிறவன் மனம், நிறுக்கப்படுகிறவன் மனம் இரண்டும் தான் மனிதகுல உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம். சுய விமர்சனம் விலங்கை மனிதனாக்கும். சுயதரிசனம் மனிதனை தெய்வமாக்கும். விலங்கிலிருந்து மனித நிலைக்கும் மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கும் உயர்த்தப்படுகின்றமையால் தான் நாம் உயர்திணை. மற்றையவை அஃறிணை ஆகின்றது.

பணத்தை விடக் குணம் முக்கியம். குணத்தைத் தரும் மனம் முக்கியம். பணத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற கருத்து உருவாகாதபடி வாழ்க்கையை அமைப்பது அவசியமாகும். பிறரைப் பார்த்து அவர்போல ஆகவேண்டும் என்று நினைப்போமானால் வாழ்க்கை அர்த்தமற்றதாகி நரகத்திற்கு இட்டுச் சென்றுவிடும். நாம் உண்மையில் பெரிய நரகத்தில் மாட்டிக்கொண்டாலும் அதனையும் ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும். எங்களுடைய மனநிலையைப் பொறுத்துத் தான் சொர்க்க நரகங்கள் அமைகின்றது.

எங்களால் சொர்க்கத்திலும் நரகத்தைக் காணமுடியும். நரகத்திலும் சொர்க்கத்தைத் தரிசிக்க முடியும். எங்கள் உள்ளம் திடமாயிருந்தால், எங்கள் எண்ணம் தெளிவாயிருந்தால் எங்கள் பாதையில் யாரும் குறுக்கே நிற்க முடியாது. எங்கள் வளர்ச்சியை யாரும் தடைசெய்து விடவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை விமர்சிப்பவர்கள் எல்லோரையும் விரோதிகள் என்று கருதினால் அதனால் எங்களுக்குத் தான் ஆபத்து. அந்தக் கருத்தில் உண்மை இருந்தால் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த விமர்சனம் பொய்யானதாக இருந்தால் அதனை அசட்டை செய்யாமல் மேற்கொண்டு இடைவிடாமல் எங்கள் இலட்சியப் பயணத்தை தொடரும் மனஉறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எங்கள் கனவு நனவாகிவிடும் என்ற உறுதியான அடிப்படையில் எதிர்காலத்தை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். அவை நாங்கள் எதிர்பார்த்த வடிவத்திலோ எதிர்பார்த்த நேரத்திலோ வராமல் போகலாம். இருப்பினும் அதை விட சிறந்த திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும்.

இந்த உலகமே ஆனந்தமயமாக எனக்கு இப்போது தெரிகிறது. என் தொழிலில் என் நடவடிக்கைகளில் எந்த மாறுதலும் இல்லை. ஆனால் என் உள்மனம் மாறிவிட்டது. இதனால் உலகமே எனக்கு மாறிவிட்டது. இவ்வாறாக வாழ்க்கையினை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் வகையில் நாம் வாழ்வினை அர்த்தமுள்ளதாக வாழ வேண்டும்.

31 MAY 2022

**பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க.**
***1.*புகழ், *2.*கல்வி,**
***3.*வலிமை, *4.* வெற்றி,**
***5.*நன் மக்கள், *6.*பொன்,**
***7.*நெல், *8.*நல் விதி,**
***9.*நுகர்ச்சி, *10.*அறிவு,**
***11.*அழகு, *12.*பெருமை,**
***13.*இனிமை, *14.*துணிபு,**
***15.*நோயின்மை,**
***16.*நீண்ட ஆயுள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தமில்லா வைரஸ் யுத்தம்

நிலவன்
முல்லையடி.

இன மத பாகுபாடு பார்த்ததில்லை....
இருமல் தும்மல் காய்ச்சலுடன்
சாதி பணம் உயர்வாய் இருப்பினும்
சளியும் வலியும் உயர்வானால்
சாவைக் கொடுக்கும் கொரோனாவே......!

சீனாவில் பிறந்தவனே.....!
சீர்கெட்ட கலாசாரத்தைக் குறைத்தவனே....
கட்டிப்பிடி கலாசாரம் கொண்டவனே
கைகூப்பி வணக்கம் செலுத்துகிறான்
காசுக்கும் மருந்தில்லையாம் உனை அழிக்க....!

வல்லரசு எல்லாம் வாய்மூடித் திரிய
வந்த வைரஸ் உலகெல்லாம் பரவி
நாடு முடங்கி நகரம் முடங்கி
ஊர் முடங்கி வீடுவரை வந்த
உன் வந்த வழி எதுவென்று தெரியாதே...!

சதைகள் கிழிந்து குருதி பெருகி
பிண்டங்களும் பிணக்குவியல்களும்
கந்தகக் குண்டில் கருகிய காலத்தில் - கூட
செத்தவனை தூக்க செஞ்சிலுவை வரும் பார்த்தேனே...!

வெடிச் சத்தமில்லை ஆனாலும் வெளிச்செல்ல அச்சம்
காயங்கள் இல்லாமல் கனசாவு உலகெல்லாம்
ஊர்த் தெருவில் நீ செத்து விழுந்தாலும்
பிணம் தூக்க யாருமில்லை - இன்று
கொரோனாவில் போயிருப்பானா....!

தொற்றித் தொற்றி வந்தவனே - நீ
தொலையும் காலம் தெரியாமல்
தனிமைப்படுத்தலும் தடுப்பு மருந்தும்
தொடர்ந்து கொண்டு இருக்கிறதே....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு

ப.ஸிரேஜா
மாணவி,
தரம் – 09.

பொது சன நூலகம்
31 MAY 2022
யாழ்ப்பாணம்

நண்பர்களுடன் எப்பொழுதும்
விவாதம் செய்யாதே......
அதில் தோற்றால் ஒரு நண்பனை
இழப்பாய்
ஜெயித்தால் ஒரு எதிரியைப்
பெறுவாய்

பூக்களாக இருக்காதே
உதிர்ந்து விடுவாய்.....
செடிகளாக இரு அப்போது தான்
பூத்துக் கொண்டே இருப்பாய்........!

"நட்பு என்பது ஒரு
கண்ணாடி போன்றது அதை
ஜாக்கிரதையாக கையாளா விட்டால்
உடைந்து போவது மட்டுமல்லாமல்
நம்மையே குத்தி காயப்படுத்தி விடும்"

ஆயிரம் சொந்தம் நம்மை
தேடி வரும் - ஆனால்
தேடினாலும் கிடைக்காத ஒரே
சொந்தம் நல்ல நட்பு.....

என்னை விட உனக்கு
ஒரு நல்ல நட்பு கிடைத்துவிட்டால்
என்னை விட்டு சென்று விடு
அந்த நட்பு உன்னை விட்டு சென்று விட்டால்
திரும்பிப்பார் அங்கே நானிருப்பேன்
என் நட்புக்காக.....!

முகத்தில் தெரியும் அழுகையையும்
சிரிப்பையும் காண்பது உறவு....
அழுகைக்கும், சிரிப்பிற்கும் பின்னிருக்கும்
காரணத்தை கண்டறிவது நட்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பதற்கு காரணம் இருந்தும்
பிடிக்காமல் போகிறது சிலரை
வெறுப்பதற்கு காரணம் இருந்தும்
வெறுக்க முடியவில்லை சிலரை

உன் நட்பு என்னும் சிறையில் சிக்கிக்
கொண்டேன், தவறு செய்தால்
தண்டித்து விடு - ஆனால்
விடுதலை மட்டும் செய்து விடாதே

உயிரின் சுவாசம் மூச்சு
கண்களின் சுவாசம் கனவு
இதயத்தின் சுவாசம் துடிப்பு
அன்பின் சுவாசம் நம் நட்பு

கஷ்டத்தில் விழுந்தவுடன்
நம்மைத் தட்டி மேலே தூக்குவது
நம்பிக்கை அல்ல......
நம் நண்பனின் கை.....

முள்ளில் வளரும் ரோஜாவை
யாரும் வெறுப்பதில்லை
அன்பில் வளரும் நட்பை
யாரும் மறப்பதில்லை

வாசனை என்பது சில நிமிடம்
வறுமை என்பது சில காலம்
வாழ்க்கை என்பது வயது உள்ளவரை
என் நட்பு என்பது என் உயிர் உள்ளவரை

நட்பு என்பது தோட்டத்தில்
பூக்கும் வாச மலர் அல்ல
இதயத்தில் பூத்த பாச மலர்

கை தவறினால் பொருள் உடையும்
என யோசிப்பவர்கள்
வாய் தவறினால் மனம் உடையும்
என யோசிப்பதில்லை

உலகே அழிந்தாலும்
என்றும்
அழியாத ஒரே உறவு நட்பு

கடற்கரை மணலில் நம் நட்பை
எழுதி வைத்தேன் அலை வந்து
அடித்து செல்லவில்லை
படித்துச் சென்றது உண்மையான
நட்பு ஒன்று

எத்தனை முறை காயப்பட்டாலும்
மனதுக்கு பிடித்தவரை மறக்காது
நல்ல நட்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதாசி மரபு

உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே கலைகளும் தோற்றம் பெற்றன. கலைகளின் பிறப்பிடம் இயற்கையின் அசைவுகளும் அதிர்வுகளுமே. இவ்வாறு தோற்றம் பெற்ற கலைகளை பிற்காலத்தில் நுண்கலைகள் என்ற பெயரில் அழைக்கலாயினர். இவற்றில் நடனக்கலையின் சிறப்பினை நாம் நோக்கும் போது மனதிற்கு இன்பம் தரக்கூடியதும் அனைவராலும் ரசிக்கக் கூடியதுமானது. இவ்வாறான இக்கலை தோன்றியமைக்கு பல சான்றாதாரங்களைக் கூறியுள்ளனர்.



திருமதி. பவித்திரா வசந்தரூபன்
(BFA, MA.)
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

நடனக்கலையானது தோற்றம் பெற்று நலிவடைந்து பின் மறுமலர்ச்சி யடைந்துள்ளது. இக்கலையானது இன்றுவரை நம்மிடம் உள்ளமைக்கு பல கலைஞர்கள் காரணமாக உள்ளனர். அவர்களில் தேவதாசிகள் என்பவர்களின் மூலம் நம் கலை எவ்வாறு வளர்ந்தது என நோக்கும்போது,

தேவரடியார் என்ற சொல்லில் இருந்தே தேவதாசி என்ற சமஸ்கிருதப் பெயர் வந்தது. தேவதாசி என்றால் தாசி (அடியான், அடியாள்) என்று அழைக்கப்படுகின்றது. தேவதாசி என்றால் இறைவனுக்கு அடிமையானவள் அதாவது சடங்கின் மூலம் இறைவனுக்கு மனைவியாக தன்னை அர்ப்பணிப்பவள் என்று பொருள்படுகின்றது. இவளை கைம்பெண் என அழைக்கின்றனர். ஏனெனில் கடவுளுக்கு இறப்பு இல்லை. இறப்பு இல்லாத கடவுளை திருமணம் செய்து கொள்வதால் இவளை இவ்வாறு அழைப்பதோடு நித்திய சுமங்கலி என்றும் போற்றுகின்றனர்.

தேவரடியார் என்பவர் கலைகளில் தனித் தேர்ச்சியும் கல்வியில் சிறப்பும் பெற்றவர்களுமே இந்த தகுதிக்குரியவர்களாவர்.

ஆரம்பத்தில் சில குடும்பத்தினர் ஒவ்வொரு தலைமுறைக்கு ஒவ்வொரு பெண்ணாக நேர்ந்து கோயிலுக்குத் தானமிட்டனர். கன்னிப்பெண்களை தெய்வத்திற்கு தானம் கொடுப்பதால் அந்தக் குடும்பம் உயர்வதாக கருதினர்.

ஆடற்கலையை தொழிலாகக் கொண்டவர்களைச் சங்க இலக்கியம் விறலியர், கூத்தியர் என கூறியுள்ளது. இவர்கள் ஊர் ஊராகச் சென்று ஆடியும், பாடியும் வந்தனர். காப்பிய நூல்களில் இவர்கள் கணிகையர், நாடகமகளிர், ஆடல்மகளிர் என்ற பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விழாக்காலங்களில் அரசருக்கு முன்பும், பொதுமக்களுக்கு முன்பும் ஆடி வந்தனர். கோயில்களில் ஆடும் வழக்கம் உருவான பிறகே இவர்கள் தேவரின் அடியவர்கள் என்ற பொருளில் தேவரடியார்கள் என அழைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரடியார்கள் நடனத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற பின் குறிப்பிட்ட வயதில் பொட்டுக் கட்டும் வழக்கம் நடைபெறும். பொட்டுக் கட்டும் வழக்கம் ஊருக்கு ஊர் வேறுபடுகின்றது. சில ஊர்களில் ஐந்திலிருந்து எட்டு வயதிற்குள் பொட்டுக் கட்டப்படுகிறது. சில ஊர்களில் பெண் வயதிற்கு வந்த பின் செய்ய வேண்டிய சடங்குகளை செய்துவிட்டு பொட்டுக் கட்டி விடுகின்றனர். பொட்டுக் கட்டுதல் என்றால் பொட்டு எனப்படும் தாலியை தன் கழுத்தில் கட்டிக் கொள்வதை பொட்டுக் கட்டும் முறை என்று கூறுவர். பொட்டுக் கட்டிக்கொண்ட பின் அவர்கள் இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஆகின்றனர்.

இந்த தேவரடியார்கள் கோயில்களில் நடனமாடுவது மட்டுமன்றி திருஅலகிடல், திருமெழுகிடல், திருவமுதுக்குரிய அரிசியை தூய்மை செய்தல், மலர் தொடுத்தல் போன்ற திருப்பணிகளைச் செய்து வந்தனர்.

முதுநூலார் தேவதாசியரை ஏழு வகையாகப் பிரிக்கின்றனர்.

1. தத்தை - இவள் தானே தன்னைத் தேவனுக்குக் கொடுத்தவள்.
2. விக்கிரீதை - இவள் தேவாலய ஊழியத்திற்கு விற்கப்பட்டவள்
3. பிருஹித்ய - தன் குல விருத்திக்காகத் தன்னை கோயில் ஊழியத்திற்கு தந்தவள்.
4. பக்தை - தன்னைப் பக்தியால் இறைவனுக்குக் கொடுத்தவள்.
5. ஹரிதா - கடவுளால் வசப்படுத்தப்பட்டவள்.
6. அலங்காரை - தன் தொழிலில் வல்லவளாய் அரசனால் கோயிலுக்கு அனுப்பப்பட்டவள்.
7. ருத்ரகணிகை - சம்பளம் பெற்று கோயில் வேலை செய்பவள்.

என அபிதான சிந்தாமணி ஏழு வகையாக குறிப்பிடுகிறது.

பல்லவர் காலப்பகுதியில் மகேந்திரவர்மன் காலத்திலேயே கோயில்கள் எல்லாம் கலைக்கூடங்களாக பொலிவுபெற்றன. இக்காலத்திலேயே ஆலயங்களில் இசையும் நடனமும் வளர்க்கப்பட்டது என காஞ்சிபுர கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டில் தேவரடியார்கள் நடனமாடியமைக்கு சான்றுகள் உள்ளன.

நந்திவர்ம பல்லவ மன்னன் காலத்தில் காஞ்சிபுரக் கோயிலில் பல நாட்டிய மகளிர் பணிபுரிந்துள்ளனர். இவர்களை கணிகைக் குலத்தார், அடிகள்மார், மாணிக்கத்தார் என அழைத்தனர். இவர்களில் கணிகையர், அடிகள்மார் என்போர் சைவக்கோயில்களின் தேவதாசிகளாகவும், மாணிக்கத்தார் வைணவக் கோயில்களின் தேவதாசிகளாகவும் பணியாற்றினர். முத்தீஸ்வரர் ஆலயத்தில் மட்டும் 42 அடிகள்மார் இருந்துள்ளனர்.

திருக்கோயில்களில் இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்த தேவதாசிகளை

1. மரபு வழிவந்த தேவரடியார்கள்
2. ஏழுவகை அடியார்கள்
3. அடிமைகள் (சடங்கு ரீதியான மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பஞ்சத்தின் காரணமாக தன்னை கோயிலுக்கு விற்றுக் கொண்டவள் என நான்கு வகையாக நோக்குகின்றனர்.

பல்லவர் காலத்தில் திருஞான சம்பந்தருடைய திருப்பாடல் அடிகளின் மூலம் அடிகள்மார் பெருங்கோயில்களில் இசையையும், நடனத்தையும் வளர்த்துள்ளனர் என்பதை அறியலாம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆடும் பெண்டிரைத் தம் பாக்களில் பாராட்டியுள்ளனர். சமயகுரவர்களுள் ஒருவரான சுந்தரர் திருவாரூர் கோயிலில் இருந்த பரவை நாச்சி என்னும் ருத்திர கணிகையை திருமணம் செய்து கொண்டார் என வரலாறு கூறுகின்றது.

கோயில்களில் தொண்டாற்றிய தேவரடியார்களின் நெறிமுறைகளை அரசு வகுத்திருந்தது. கோயில்கள் அரசனின் அதிகாரத்தின் கீழே காணப்பட்டதால் ஒவ்வொரு மன்னர்களின் ஆட்சியிலும் தாங்கள் கட்டிய கோயில்களிற்கு நாட்டிய மகளிரை அமர்த்தி அவர்களிற்கு தானங்கள் வழங்கியுள்ளனர் என பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஆலயங்களிலே வழிபாட்டு நேரங்களில் தேவார பதிகங்கள் பண்ணோடு பாடும் பொழுது இவர்கள் அபிநயம் பிடித்து ஆடுவதால் பரதக்கலைக்கு சமயச் சிறப்பினை மிகுதிப்படுத்தியுள்ளனர். கோயில் பணியின் காரணமாகவும் இறைபக்தியின் காரணமாகவும் நியமிக்கப்பட்ட இவர்களுக்கு கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க பயிற்சியளிக்கப்பட்டது. திருவிழாக்காலங்களில் சுவாமி திருவீதி உலாவரும் பொழுது கோயிலுக்கு வெளியிலும் தோன்றி தமது ஆடற் கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் கோயில் மடங்களில் நடைபெறும் ஆடல், பாடல், நாடகம், சாந்திக் கூத்து, ஆரியக்கூத்து, சாக்கைக் கூத்து, தமிழ் கூத்து போன்றவற்றிலும் பங்கு கொண்டனர்.

தேவரடியார்களின் பூர்வீகத்தை நோக்கும்போது இவர்கள் மரபு வழியில் தாய், மகள் என இறைவனுக்கு தொண்டாற்றி வந்துள்ளனர். தேவரடியார்களிற்கு அவர்கள் கோயில்களைச் சார்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாக "சூலம்" இலச்சினையை அவர்களின் உடலில் பொறிக்கும் வழக்கம் உள்ளது.

சோழர் காலம் ஒரு பொற்காலம் என அழைக்கப்பட்டது. இக்காலத்தின் செல்வமிகுதியை எண்ணற்ற கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தமிழ்நாட்டில் தேவரடியார் முறையானது முதலாம் இராஜராஜனால் நிலைநாட்டப்பட்டது. இக்காலத்தில் தேவரடியாருக்கு தனிச்சிறப்பு காணப்பட்டது. வரையறுக்கப்பட்ட கோயில் நடனக்காரர்களை "ரசபதிலியிலார், தேவரடியார், பட்டியிலார்" என்று அழைத்துள்ளனர். சோழர் ஆட்சிக்காலத்திற்கு முன் தேவதாசி என்ற பெயர் உபயோகப்படுத்தப்படவில்லை. தளிர்சேரிப் பெண்டுகள், நக்கன், பட்டியிலார், ருத்ரகனிகா, மாணிக்கம், தலைக்கோலி என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி யுள்ளனர். தஞ்சைப்பெருவுடையார் கோயில் திருத்தொண்டிற்காக கலைகளில் தேர்ச்சி பெற்ற 400 தேவரடியார்களை இவன் அழைத்து தஞ்சைப் பெருவுடையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் சுற்று வட்டாரத்தில் வடக்கு தெற்காக தான் அமைத்த இரு தெருக்களிலும் குடியமர்த்தினான். அத்தெருக்கள் "தளிர் சேரிகள்" என அழைக்கப்படலாயிற்று.

தேவதாசிகள் அரசனை நம்பியே இருந்தனர். ஏனெனில் அரசனே அவர்களிற்குரிய பொன், பொருள், நிலம் என்பவற்றை வழங்கி தனக்கு சமனான இடத்தில் இவர்களை வைத்துக் கொண்டான். இவ்வாறு வாழ்ந்து கொண்டிருந்த சமயம் ஆங்கிலேயரிடம் ஆட்சி கைமாறப்பட்டதால் தேவதாசிகளின் வாழ்க்கைத்தரம் வெகுவாக சரிந்தது.

சோழர்காலத்தில் வழங்கப்பட்ட எண்ணற்ற பொருளுதவிகள் கலைகள் வளர வித்திட்டது. இந்த வளர்ச்சியானது விஜயநகர ஆட்சியில் மேலும் வளர்க்கப்பட்டு தஞ்சை அவைக்காலத்தில் கோயில்களிலும் அவைகளிலும் நடனக்காரர்களையும் பரிமாற்றம் செய்யும் அளவிற்கு உச்சத்தை அடைந்திருந்தது. ஆனால் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக கொடுப்பதற்கு அரசர்கள் இல்லாத காரணத்தினால் கோயில்களில் நடைபெற்ற சடங்குகளிற்கு தேவதாசிகளின் பொருள்களே செலவை முடிப்பதற்கு ஏதுவாக இருந்தது.

இத்தனை உச்சத்தில் இருந்த இக்கலையை வளர்ப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தால் தமது தேவைகளுக்காகவும் அன்றாட வாழ்வாதாரத்திற்காகவும் இந்த தேவதாசிகள் ஆடல் பாடல்களில் ஈடுபட்டனர். வாழ்வாதாரத்திற்காக பல ஆடவருடன் தொடர்புகளை கொண்டிருந்தமையாலும் பல நோய்களுக்கு உள்ளாகி மரணத்தை எதிர் கொண்டனர். இவ்வாறான காரணங்களினால் காலப்போக்கில் இந்தக் கலைகள் நலிவடைந்து போகும் சந்தர்ப்பத்திலே பல கலைஞர்கள் தாமே முன்வந்து நடனக்கலையை பயின்று அதில் அரங்கேற்றங்களும் செய்தனர். 1947உடன் இந்த தேவதாசி மரபானது முற்றாக இல்லாமல் போனது. அதன் பின் வந்த கலைஞர்களில் ஈ.கிருஸ்ணையர் தாமே பெண்வேடம் பூண்டு நடனத்தினை ஆடி மக்கள் மத்தியில் ஒரு ஆர்வத்தை தூண்டினார். அவருடைய நடனத்தை கண்ணுற்ற கலைஞர்களில் பிராமண குலத்து பெண்ணான ருக்மினி தேவி அருண்டேலும் ஒருவராவார். அவர் பிராமண குலத்தில் பிறந்தாலும் நடனக்கலையை கற்பதில் ஆர்வங்கொண்டு அதில் தேர்ச்சியும் கண்டார். அவரின் மூலமே சதிர் என்று அழைக்கப்பட்ட நடனம் பரதநாட்டியம் என்று அழைக்கப் படலாயிற்று. இவர்களின் மூலம் நலிவடைந்திருந்த நடனக்கலை புத்துயிர் பெறத் தொடங்கியது.

ருக்மினி தேவி அருண்டேல் அவர்கள் கலாசேத்திரா எனும் நிறுவனத்தினை நிறுவி தமக்கென ஒரு பாணியினை வைத்திருந்து அதன் மூலம் மாணவர்களை பயிற்றுவித்து பட்டங்களும் வழங்கி கௌரவிக்கின்றனர். இவ்வாறு பரதநாட்டியக்கலை நம்முன் இன்னமும் உள்ளது என்றால் அதில் தேவதாசிகளின் பங்கே அளப்பரியது. அவர்கள் தம்மை கலைக்காகவே அர்ப்பணித்து வந்துள்ளனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயன்பு

ப.பதுசிகா
தரம் – 05

அன்பெனும் பந்தத்தை
ஆயுள் வரை கொடுப்பவளே
இவ்வுலகில் நாம் வாழ
ஈரைந்து மாதங்கள்
உவப்புடன் எம்மையே
ஊக்கமாய் வளர்த்திட
எம்மை சுமந்தவளே
ஏற்றமுடன் நாம்வாழ
ஐந்து கோடித் தியாகங்கள் புரிபவளே
ஒரு நோய் எமக்கு வந்தால்
ஓடி ஓடித் திரிந்து
ஔடதங்கள் தருபவளே
பண்புகளில் சிறந்தது அன்பு
அந்த அன்புகளில் சிறந்தது தாயன்பு

# சிந்தனைக்கு சில துளிகள்...

தோற்றாலும் புலம்பாதே
போராடு
கிண்டலடித்தால் கலங்காதே
மன்னித்துவிடு
தள்ளினால் தளராதே
துள்ளியெழு
நஷ்டப்பட்டால் நடுங்காதே
நிதானமாய் யோசி
ஏமாந்து விட்டால் ஏங்காதே
எதிர்த்து நில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகமாக மரம்

பூமியில் முதல் உருவாகிய உயிர்களில் முக்கியமானது தாவரங்களே ஆகும். அந்த வகையில் மரம் என்பது மனிதன் தோன்றியது முதல் ஊடகமாக வருகின்றது. அதாவது மனிதனின் கூர்ப்பு என்று பரிணாமம் பெற்றதோ அன்று மனிதன் மரத்தை தனது பாவனைப் பொருளாக மாற்றத் தொடங்கினான். அதாவது தனது வீடு, அவன் பாவித்த கருவிகள் இப்படி பல வகையான மரப் பாவனைப் பொருட்களை கையாளத் தொடங்கினான். தடியைக் கூராக்கி ஈட்டி செய்தான். அதில் அவன் ஒரு வடிவத்தை அவனை அறியாமலே செய்தான். மற்றும் வீட்டுக்கான தூண்களாக பயன்படுத்திக் கொண்டான். இப்படி ஆதி மனிதன் தொடக்கி வைத்தான்.



கௌரவ தேசமாணிய,
ஓவியர் வசந்தரூபன்
(BFA., MA., M.PHIL.)
முகாவில், இயக்கச்சி,
பளை.

இதனைத் தொடர்ந்து பின் வந்தவர்கள் அப்பாவனைப் பொருட்களை மேலும் மெருகூட்டினர். உதாரணமாக அவர்கள் பாவித்த உபகரணங்களையும் வீடுகளில் உள்ள மரப்பகுதிகளையும் அலங்காரப்படுத்தினர். இவை கோடுகளாகவே செதுக்கப்பட்டன. இவற்றை அவன் உராய்ந்தும், குத்தியும், கிழித்தும், தேய்த்தும் செய்து கொண்டான்.

இதனைத் தொடர்ந்து இன்று உள்ள நாம் மரத்தை முற்றாக மாற்றி புதிய புதிய ஊடகமாக கையாள்கின்றோம். சிறு ஈர்க்கு முதல் பெரும் மரங்கள் வரை பயன்படுத்துகின்றோம். இதற்கு மனித வளர்ச்சியும் இன்றைய தொழில்நுட்பமுமே காரணம் எனலாம். இதன் காரணமாக இன்று பிற ஊடகங்களைப் (கல், உலோகங்கள், சுதைகள்) போன்று பயன்படுத்தப்பட்டு வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### மரத் தெரிவும் சாஸ்திரங்களும்

உலகில் உள்ள படைப்புக்கள் அனைத்துக்குமே ஒவ்வொரு பண்புண்டு. அந்தவகையில் மரத்துக்கும் அடிப்படைப் பண்புகள் உண்டு. இது அடிப்படையில் ஒரு வித்திலை, இரு வித்திலை என இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றது. மரங்களிடம் இருந்து மனிதனுக்கான பயன்களோ ஏராளம். அதாவது மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதிலும் மரமே முக்கியம் பெறுகின்றது. இவற்றை விட மனிதன், விலங்குகளில் காணப்படும் ஆண், பெண், அலி போன்ற பிரிவுகளும் இம் மரங்களில் உண்டு என்றும், அவை ஒவ்வொன்றினையும் இவை காட்டும் உருவ அமைப்பினையும் அவற்றினை கையாளும் விதம் பற்றியும் மயமதம், சர்வாத்த சிற்பசிந்தாமணி, மனையடி சாஸ்திரம் போன்ற சாஸ்திர நூல்கள் குறிப்பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் பருவ நிலைகள் போன்று மரத்திலும் உள்ளது. அதாவது பாலை - குழந்தைப் பருவம், மத்தியை - இளமைப் பருவம், விருத்தை - முதுமைப் பருவம் என மரத்தில் காணப்படுகின்றது.

இவ்வாறு வகைப்பட்ட மரங்களானவை மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகவே காணப்படுகிறது. அதாவது ஆதிகாலத்தில் மரத்தின் பொந்துகளையும் (கோறை) அதன் தடிகள், இலைகள், கொடிகளைப் பயன்படுத்தி குடிசைகள் அமைத்தும் பின்னர் அதே மரங்களை தீராந்திகள், பலகைகள் என்பன அறுத்தெடுத்து வீடு அமைத்தும் மரத்தை தனது வாழ்வியல் ஆதாரங்களில் ஒன்றாக கருதி வாழ்ந்தான்.

இது இவ்வாறு இருக்க எல்லாவற்றையும் தாண்டி மரங்களை தெய்வமாக வழிபடுகின்ற பண்பினையும் மனிதன் கொண்டுள்ளான். அந்தவகையில் இந்துக்கள் மத்தியில் வேம்பு, வில்வம், துளசி, வெள்ளெருக்கு, ஆல், அரசு, வன்னி, நாவல், தேத்தா, பனை முதலான மரங்களை பெருமளவில் வணங்குவதைக் காணலாம். இது போலவே பௌத்தர்களிடையே வெள்ளரசு மரமானது புத்தத்தின் புனித சின்னமாகவும், அதனை புத்தருக்கு இணையாகவும் வணங்கப்படுவதைக் காணலாம். இதற்குச் சான்றாக ஆரம்ப பௌத்த கட்டிடங்களில் ஒன்றான சாஞ்சி தூபியின் தோரணத்தில் வெள்ளரசு மரத்தை வழிபடுவது போன்ற செதுக்கல்களும், இலங்கையில் உள்ள தூபிகளில் உள்ள செதுக்கல் ஓவியங்களும் சான்று பகர்கின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அதன் பயன்பாடான மரவேலை சான்று பார்ப்போமானால், மரத்தினது இழுபடு தன்மை என்பது தாக்கமடைந்தவிடத்தும், பாரமேத்தி வளைத்தவிடத்தும் வளைந்து திரும்பவும் பழைய நிலைக்கு வருவதாகும். மரத்தில் காணப்படும் இத்தகைய தன்மையினால் அனேகமான வேலைகளுக்கு மரம் பொருத்தமான ஒன்றாக விளங்குகின்றது. சில மரங்கள் அதிக குளிரையும் அதிக வெப்பத்தையும் தாங்கக் கூடியனவாகவும் காணப்படுகின்றன. அத்துடன் மரத்தினை நல்ல முறையில் பாவித்தால் அது காலவரையறை இன்றி நிலைத்திருக்கும். அதுவே பாவனையற்று வைக்கப்பட்டால் மஞ்சள் மண்ணாகிவிடும். எனது ஆய்வின் போது பார்த்த பல நூற்றாண்டுகள் பழமையான கதவுகள், சிலைகள், சின்னங்கள் மூலம் அறியமுடிகிறது.

மர வேலைக்குப் பயன்படுத்தப்படும் மரங்களில் ஏற்கனவே குறிப்பிட்ட மரத்தின் ஒருவித்திலை, இருவித்திலை என்பதில் வித்திலை மரங்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தையும் தொகுத்துநோக்கின் மரம் இல்லையேல் மனிதன் இல்லை எனும் அளவிற்கு மரமாயை மனிதனது வாழ்வுடன் நெருங்கியுள்ளது. அதற்கு மேலாக மனிதனை நல்வழிப்படுத்தி மத நம்பிக்கையில் தெய்வமாகவும் மனிதன் தோன்றியது முதல் அது மனிதனோடிணைந்து வாழ்கின்றது என்று நாம் கூறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரச் செதுக்கு வேலைகள்

அலங்காரம் எனும்போது எல்லா ஊடகங்களுக்கும் பொதுவான வையாகவும் அதேபோல் ஒவ்வொரு ஊடகத்துக்கும் தனித் தனியானவை எனவும் நாம் பிரித்துப் பார்க்கலாம். அந்தவகையில் மரத்துக்கான அலங்கார உருக்கள் பற்றிப் பார்த்தால், இவற்றை நாம் இலகுவாக அலங்காரங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் என வகைப்படுத்தலாம். மர அலங்காரம் என்று பார்த்தால் இவற்றில் அனேகமானவை செதுக்கப்பட்டு தளத்தின் மேற்பரப்பு மட்டத்திலேயே காணப்படும். அலங்காரங்களை பல வகையாகப் பிரிக்கலாம். அவை கொடி அலங்காரங்கள், காட்டுருக்கள், தனி அலங்காரங்கள், தொடர் அலங்காரங்கள் இப்படி பல வகைப்படும்.

இவற்றில் கொடி அலங்காரங்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இதற்குக் காரணம் மரங்களில் இவை இலகுவாகவும் மிக அழகுறவும் செய்ய முடிவதும் மரத்தின் மென்மைத் தன்மைக்கும் அதன் மிருதுவான போக்கிற்கும் ஏற்றால் போல் இவ் அலங்கார வேலைகளே சிறந்தவை என்றும் கருதலாம். இவற்றை விட இன்று தனி சிற்பங்களை அழகியல் ரசனையாளர்கள் அதிகம் விரும்புகின்றனர். இதற்குக் காரணம் மற்ற ஊடகங்களைப் போல் மரம் கடினமானது அல்ல. இதைத்தவிர அழகியல் ரசனை படைத்தவர்கள் சாஸ்திரம், சம்பிரதாயங்களையும் மதிக்கின்றவர்களாக இருப்பதால் அவர்கள் தமது நற்பலனுக்கு ஏற்றால் போல மரங்களைத் தெரிந்து எடுத்து அவற்றில் கைவண்ணப் பொருட்களை வடிவமைக்கின்றனர். இதற்கு வேம்பு, மா, பலா, தேக்கு, மகோகனி (மலை வேம்பு), முதிரை, மஞ்சளுணா, நாவல், மருது, மூங்கில், இலுப்பை முதலியவற்றை கூறிக் கொள்ளலாம்.

இம் மரவேலைகள் செய்யும்போது சிற்பிகள் சாஸ்திர சம்பிரதாயங்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு செய்கின்றனர். உதாரணமாக கதவு ஒன்றைச் செய்யும்போது அவர்கள் அதன் உயரம், வடிவம், கட்டுமானம், அதன் அலங்காரம், எந்த இடத்தில் எத்தகைய கதவுகள் வைக்க வேண்டும் என்பவற்றைக் கவனத்தில் கொள்கின்றனர். நாட்டுப்புற மக்களின் பண்பாடு, மரபு, பாரம்பரியம் வீடுகளுக்கு ஏற்ப எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும், அதன் பலன்கள் பற்றியும் சர்வாத்த சிற்ப சிந்தாமணி போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு கதவுகள் பற்றிப் பேசுகின்ற அதேவேளை அதனைத் தாங்குகின்ற நிலைக் கட்டுமானம் என்பதும் முக்கியம் பெறுகின்றது. இன்று உள்ள பெரும்பாலான ஆலயங்கள், பழமையான வீடுகள் அதாவது நாற்சார் வீடுகளில் கதவுகள் எவ்வாறு அலங்கார வெளிப்பாடுகளுடன் காணப்படுகின்றதோ அதே போல் அதனைத் தாங்கும் நிலைகளும் அதற்கு நிகராகவே காணப்படுகின்றன. உயர் குடிமக்களின் முகவரியாகக் காணப்படும் இக் கதவு நிலைகள் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் செழிப்பு, சிந்தனை, முக்கியமாக கலை ஆர்வம் என்பன எல்லாம் இணைந்ததொரு வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. இவற்றில் காணப்படும் மர அலங்காரங்கள் என்று பார்த்தால் செடி - கொடி அலங்காரம், பூ, பூ மொட்டு, மகரம், பலாப்பொத்தி, நாசித்தலை, குந்திரிக்கம், யாழி, சிங்கம், சில இடங்களில் தனி நிலைச் சிற்பங்கள் போன்ற அமைப்புக்களும் காணப்படுகின்றன. இவ்வாறாகக் காணப்படும் கலை அமைப்புக் கொண்ட கதவுகள், நிலைகள் அன்று முதல் இன்றுவரை தமிழர் தம் பண்பாட்டையும் மத நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

அடுத்து அலங்கார ரீதியாகப் பார்த்தால், வெறுமனே கதவு மற்றும் நிலைகளில் மட்டும் அலங்காரம் காணப்படுவதில்லை. அவற்றுடன் தனியாக செடிப்பலகை அல்லது சூரியப் பலகையில் அலங்காரம் காணப்படுகின்றது. அலங்காரங்கள் எனும்போது சமயம் சார்ந்தவை, சமயம் சாராதவை, பொதுவானவை என மூன்றாகப் பார்க்க முடியும். பெருமளவில் சமயம் சார்பானவையே அதிகம் உள்ளன. நாக பந்தம், குத்துசிங்கம், யாழி போன்றவற்றையும் அத்தோடிணைந்து சடங்குநிலை தோரணம், சூரியப்பலகை அல்லது செடிப்பலகை, நிலைப்பட்டி போன்ற பகுதிகள் அலங்கார செதுக்கல்களுக்கான பகுதிகளாக உள்ளன.

அந்தவகையில் நாக பந்தம் என்பது இந்து சமயத்திலும் பழக்க வழக்கங்களிலும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டது. மற்றும் கொடிப்பலகை என்பதை ஆராய்ந்தால் பொதுவில் கருக்கனி வேலைப்பாடுகளுடன் இலை, கொடி, பூ, திராட்சை, முத்து, பறவை, கலசம் போன்ற கூறுகளும் சமயம் சார்ந்த தெய்வ உருவங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. அவை நடராஜர், கஜலக்குமி, கிருஷ்ணன், லக்குமி போன்ற உருவங்கள் வந்துள்ளதனைக் காணக் கூடியதாக உள்ளது. இதேபோல் கிறிஸ்தவ சமயத்தவரும் மர வேலைகளைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறாக மர வேலைகள் பல வகைகளில் அதாவது வீட்டுத் தளபாடங்கள், பொது மண்டபங்கள், கட்டடங்கள் குறிப்பாக ஆலயங்களில் இவை செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை மக்களின் அந்தஸ்து வெளிப்பாடாகவும் அவர் தம் செல்வத்தின் கலையின் வெளிப்பாடாகவுமே விளங்குவதனை கண்ணூடு காணலாம்.

ஆலயங்கள் என்று பார்த்தால் அங்கு கதவுகள், நிலைகள், தூண்கள், பீடங்கள், வாகனங்கள், தேர் போன்ற பல வகையான இடங்களில் காணக்கூடியதாக உள்ளது. மிகப் பழைய காலத்தில் கோயில்கள் கட்டப்பட்ட போது மரத்தை தகுந்தபடி கட்டடத்துடன் அணைத்து அமைத்தனர். மலையாள நாட்டில் சில இடங்களில் இன்றும் கோயில்கள் மரத்தால் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். சிதம்பரத்தில் சபாநாயக்கர் மண்டபம் இப்போதும் மரத்திலேயே அமைக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். இம் மண்டபத்தின் மரக்கூரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதுபடாதபடி அவற்றில் செப்புத் தகடுகளை வேய்வது பண்டைய காலத்து வழக்கம். சிதம்பரம் முதலிய கோயில்களில் கூரைகள் விரைவில் பழுதாகாதபடி செப்புத் தகடுகளையும், பொன் தகடுகளையும் சில மன்னர்கள் பதித்துள்ளனர்.

இதேபோல் கட்டடக் கலைக்கு அடுத்தபடியாக உள்ளது சிற்பக்கலை. கட்டடக்கலையைவிட சிற்பக்கலை நுட்பமானது. மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, கொடி, மலை, தரைத்தோற்றம், கடல் போன்ற இயற்கை உருவங்களையும் அழகுபட அமைத்தனர். சிற்பக் கலைஞர்கள் தமது கற்பனை ஆற்றலினால் பலவகையான சிற்பங்களை அமைக்கின்றனர். நம் கோயில்களில் தரை, சுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் மற்றும் கட்டடங்களின் எல்லா இடங்களிலும் சிற்ப உருவங்கள் மற்றும் செதுக்கல்கள் அமைந்துள்ளன. சிற்ப செதுக்கல்களை முழு உருவங்கள், புடைப்புச்சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். முழு உருவச் சிற்பம் என்பது பொருள்களின் முன்புறம் பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது. புடைப்புச் சிற்பம் என்பது பொருள்களின் ஒரு புறம் மட்டும் தெரியும்படி சுவர்களிலும் பலகைகளிலும் அமைக்கப்படுவது. இவ் இரண்டு வித சிற்ப உருவங்களும் கோயில்களில் அமைக்கப்பட்டுள்ளன.

நம் நாட்டுச் சிற்ப செதுக்கல் கலையானது சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றிருக்கின்றது. ஆகவே தெய்வ உருவங்கள் மற்றும் அலங்கார காட்டுருக்கள் சிற்பக் கலையில் பெரிதும் முதன்மை பெற்றுள்ளன. தெய்வ உருவங்களை எல்லாம் "காமிக ஆகம சாஸ்திரம்" முதலிய நூல்கள் விளக்குகின்றன.

ஆதிகாலத்தில் சைவ, வைணவ சிற்பச் செதுக்கல்கள் மரத்தினாலும் சுதையினாலும் பஞ்ச உலோகத்தாலும் அமைக்கப்பட்டன. இப்பொழுதும் கூட மரத்தினாலும் சுதையினாலும் செய்யப்பட்ட தெய்வ உருவங்கள் சில கோயில்களில் உள்ளன. கல்லாலும், பஞ்ச உலோகத்தாலும் சிற்பங்கள் உருவாக்கப்பட்டமை ஏழாம் நூற்றாண்டில் ஆகும்.

மரம் என்று பார்க்கும்போது, வெறுமனே திண்மப்பொருளாக பார்க்கமுடியாது. அவற்றிலும் மனிதனைப் போன்று பால் வேறுபாடுகள் உள்ளன. மனித வாழ்வில் அன்று தொட்டு இன்றுவரை கலை, கலாசாரம் மற்றும் மனித வாழ்வுக் கூறுகள் ஒவ்வொன்றிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. இது மனிதனுடன் இணைந்து பயணிக்கும் கலை ஊடகமாகவும், வாழ்வியல் ஊடகமாகவும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




11GA, இராமநாதன் வீதி , கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம். 021 7200756

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவா பல்பொருள் வாணிபம்

உரிமையாளர் – தா.சிவானந்தன்

தொ.பே.இல : – 077 9748 826

A9 வீதி, பளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேண்டாம் கொரோனா

மொ.கோபிகா
தரம் – 08,
கிளி/பளை றோ.க.த.க.பாடசாலை.

விஞ்ஞான உலகின்று
விதிர் விதித்து நிற்கிறது
மருத்துவக் குழுமம்
மருந்தின்றி தவிக்கின்றது

கல்லெடுத்து எறிவதற்கு
கயவனைக் காணவில்லை
சொல்லெடுத்து போர் புரிய
வாய்க்கவசம் விடுவதில்லை

நாடு விட்டு நாடு வந்து
நடமாடும் கொரோனா
வீடு வீடாய் தாவாதிருக்க
வீட்டுக்குள்ளே இருந்திடு

உலகில் மனிதனைக் கொல்லுகின்ற
கொடிய கொரோனா
கொன்று உன்னை போடாதிருக்க
கொஞ்சம் தள்ளி இருந்திடு

மண்ணில் மனிதனை வதைக்கின்ற
கொடிய கொரோனா
மானிடனை கொல்லுவதில்
உனக்கு என்ன வாழ்க்கை

உன்னால் ஏற்படும் பாதிப்பை
உலகம் கூறுகையில்
உலை வைக்க மனமில்லை
உனக்கு என்ன வாழ்க்கை

உயிருக்கு உத்தரவாதம் இல்லை
உலகம் கூறுகையில்
உலை வைக்க மனமில்லை
உனக்கு ஏன் கொடிய வாழ்க்கை

மண்ணில் வதையப்போகும்
உன்னோட
போராடிடுவேன்
உனக்கு ஆபத்தான வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் என்பதே வாழ்க்கை
# பணம் என்பது பரிமாற்று ஊடகம்

கருவறையில் இருந்து கல்லறை வரை காசு தேவை இங்கு வாழ்வதற்கு. இது ஒரு விதத்தில் உண்மைதான். சாப்பாடு, துணிமணி, வீடு, பொழுதுபோக்கு என்று எல்லாவற்றுக்கும் பணம் தேவைதான். ஒரு வணிகத்துறை மாணவன் என்ற வகையில் பணம் என்பது அரசாங்கத்தால் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி அளவீட்டு பரிமாற்று ஊடகமாகவே நான் கருதுவேன். இன்றைய சூழ்நிலையில் பணம்தான் கடவுள் எனவும் பணமிருந்தால் எல்லாவற்றையும் வாங்கி மகிழ்ச்சியாக வாழ்ந்து விடலாம் எனவும் நினைத்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் ஒருவேளை பணத்தை வைத்து எந்தப் பொருளையும் வாங்கவோ விற்கவோ முடியாது என்ற நிலை வந்துவிட்டால் எல்லோரும் குழம்பிப்போய் விடுவார்கள். ஏனெனில் கோடி பணத்தை கோழிக்குப் போட்டாலும் கொத்தி உண்ணாது. யாது பயன்? அதில் காகிதத்தின் மதிப்பு அவ்வளவு தான். சட்டரீதியான அங்கீகாரம் உள்ளபோது மட்டும்தான் பணத்தின் நன்மதிப்பு. ஆயினும் பணத்தை விட வளமிருந்தால் மட்டும்தான் மனிதன் உயிர் வாழ முடியும் என்பதே உண்மைநிலை. பணமில்லாத உலகத்தில் மனிதன் வாழ்ந்தான். அன்றைய காலத்தில் தனக்குத் தேவையான பொருளை தாமே உற்பத்தி செய்து தானே பயன்படுத்திக் கொண்டான். பின் தன்னிடம் இல்லாத பண்டங்களை வாங்குவதற்கு தன்னிடமிருந்த பண்டங்களைக் கொடுத்து தனக்குத் தேவையான மற்றைய பண்டங்களை வாங்கினான். இது பண்டமாற்று முறை என அழைக்கப்பட்டது. அதன் பின்பு பண்டமாற்று முறையிலுள்ள குறைபாடுகளைத் தீர்க்கவே பணம் கண்டுபிடிக்கப்பட்டது. பண்டமாற்று முறையிலிருந்த குறைபாடுகளை நீக்கிய பணம் இன்று பல மனிதர்களின் வாழ்க்கையில் குறைபாடுகளை ஏற்படுத்த காரணமாகி விட்டது அல்லவா! வளங்கள் அழிக்கப்பட்ட இடங்களில் பணத்தின் பெறுமதியால் நிலத்திற்கு இந்த விலை நீருக்கு கொடுப்பதற்கு இவ்வளவு ரூபாய் என கடந்து போகும். காலப்போக்கில் காற்றும் காசு என விலை, தீர்மானிக்கப்படும். ஒரு குறைபாட்டை நிவர்த்தி செய்ய உருவான பணத்தின் தொழிற்பாடு இன்று எல்லாமே பணம் இருந்தால் மட்டுமே நிவர்த்தி செய்ய முடியும் என ஆகிவிட்டதே. ஆயினும் இந்தப் பணத்தால் வாங்க முடியாத விடயங்கள் நிறையவே உண்டு. இதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



நவரத்தினராசா நிரோசன்
முல்லையடி,
பளை.

புத்தகத்தை வாங்கலாம் புத்தியை வாங்க முடியாது
பதவியை வாங்கலாம் மரியாதையை வாங்க முடியாது
கடிகாரத்தை வாங்கலாம் நேரத்தை வாங்க முடியாது
கூட்டத்தை வாங்கலாம் நண்பர்களை வாங்க முடியாது
வேலைக்காரர்களை வாங்கலாம் விசுவாசத்தை வாங்க முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகையை வாங்கலாம் நற்குணத்தை வாங்க முடியாது
சாப்பாட்டை வாங்கலாம் பசியை வாங்க முடியாது
மெத்தையை வாங்கலாம் தூக்கத்தை வாங்க முடியாது
காமத்தை வாங்கலாம் காதலை வாங்க முடியாது
மருந்தை வாங்கலாம் ஆரோக்கியத்தை வாங்க முடியாது
ஆடம்பரத்தை வாங்கலாம் அன்பை வாங்க முடியாது
இரத்தம் கூட வாங்கலாம் உயிரை வாங்க முடியாது

உண்மையில் வாழ்வதற்கு பணம் தேவையில்லை. ஆனால் வாழ்க்கையை வழி நடத்த பணம் ஓர் பரிமாற்று ஊடகமாக மனிதனுக்கு தேவைதான். ஆயினும் பணமே வாழ்க்கையாகி விடக் கூடாது. இந்த உண்மையை உணரும் ஒருவர் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வார். பணத்தை வைத்திருப்பது தப்பில்லை. ஆனால் பணத்தின் மீது ஆசை வைத்திருப்பது தான் தப்பு. பணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் பண ஆசை எல்லாவிதமான தீமைக்கும் வேராக இருக்கிறது. சிலர் இந்த ஆசையை வளர்த்துக் கொண்டு திருடர்களாகவும், ஊழல்வாதியாகவும், லஞ்சம் பெறும் நபர்களாகவும், போதைப்பொருள் கடத்தல்காரராகவும், விபச்சாரம் செய்பவர்களாகவும், சட்ட விரோதமாக இயற்கை வளத்தை அழிப்பவர்களாகவும் அதிகரித்த பண ஆசையால் தமது வாழ்வையும் மற்றவர்களின் வாழ்வையும் தவறான பாதையில் வழி நடத்திச் செல்கிறார்கள். இதன் விளைவாக நல்ல பண்புகளையும் அழகான வாழ்வையும் தொலைத்து விடுகிறார்கள்.

“நாம் பணக்காரர்களாக இருக்க கடமைப்பட்டிருக்கவில்லை
ஆனால் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்”

இருப்பதை வைத்து திருப்தியோடு வாழ வேண்டும் என்று நினைக்கிறவர்களுக்கு பணக்கஷ்டமே இருக்காது என்று சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் பணத்தைப் பற்றிய கவலையிலேயே மூழ்கிவிடமாட்டார்கள். பணக்காரன் ஆக வேண்டுமா? அதற்குப் பணத்தைக் குவிக்க வேண்டியது இல்லை. தேவைகளைக் குறைத்துக் கொள் போதும். ஆடம்பரமாகவும் அடுத்தவர்கள் போலவும் வாழ வேண்டும் எனவும் நினைத்து உங்களுடைய வாழ்நாட்களை பணம் சம்பாதிப்பதில் செலவு செய்யாதீர். கடந்த காலத்தையும் முடிந்த வயதையும் பணத்தால் வாங்க முடியாது. இங்கே பண ஆசையை தவிர்க்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். பணத்தையும் சொத்து சுகத்தையும் பெரிதாக நினைக்கிற ஆட்களோடு பழகாதீர்கள். பணத்தை விட நல்ல குணங்களையும் இயற்கை வளங்களையும் பெரிதாக மதிக்கும் நபர்களோடு பழகுங்கள். பண ஆசை உங்களுக்குள் வேர்விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வளமில்லாத வறண்ட இடத்தில் பணம் எனும் காகிதத்தை சேமித்து வைப்பதில் எவ்வித பயனும் கிடையாது.

**“வளங்களை அழித்து வங்கிக் கணக்குகளை நிரப்பி வைத்தால்**
**உன் எதிர்காலச் சந்ததி பணங்களை உண்டு வாழ்திடுமா....!”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடலும் நீரும்

மனித உயிர்வாழ்விற்கு நீர் அத்தியாவசியமாகிறது. மனிதன் மட்டுமன்றி உலகிலுள்ள அனைத்து உயிர்களும் உயிர்வாழ நீர் அவசியமாகும்.

உடலின் 60%(அளவு) ஆனது நீரால் உருவாக்கப்பட்டுள்ளது. மனித மூளை, இதயம் என்பன 73% நீராலும், தோல் 64% நீராலும் தசைகள், சிறுநீரகங்கள் 79% நீராலும், எலும்புகள் 31% நீராலும் உருவாக்கப்பட்டுள்ளன.



Dr.ச.பானுமீரா
BUMS(SL)
ஆயுர்வேத வைத்தியசாலை,
பளை.

மனித உடலின் ஒவ்வொரு கலங்கள், திசுக்கள், உறுப்புகள் என்பன நீரைப் பயன்படுத்தி மனித உடலின் செயற்பாடுகளையும் வெப்பநிலையையும் சீராகப் பேணுகின்றன. எமது உடலானது வியர்வை, சிறுநீர் மூலம் நீரை வெளியேற்றுகிறது. ஒவ்வொருநாளும் நீர் அருந்துவதுடன், நீர் உள்ள உணவுகளை உண்பதன் மூலமும் இழந்த நீரைப் பெறவேண்டும். உடலை எப்போதும் குளிர்ச்சியாக (rehydrated) வைத்திருப்பதும் அவசியமாகும். ஒவ்வொருவரும் நீர் உள்ளெடுக்க வேண்டிய அளவு வயது, பால் என்பவற்றைப் பொறுத்து வேறுபடும்.

Adult male - 3 liter/day
Adult female - 2.2 liter/day எடுக்க வேண்டும். இந்த அளவு நாம் குடிக்கும் நீர் மூலம் மட்டுமல்ல அளவு ஏனைய நீராகாரம், உணவு மூலம் சேர்ந்து உள்ள அளவு ஆகும்.

நீர்க் கட்டமைப்பு - $H_2O$
அடர்த்தி - 997 kg/$m^3$
கொதிக்கும் வெப்பநிலை - $100^0C$
உருகும் வெப்பநிலை - $0^0C$

**நீரின் வகைகள்**

நீர் அதன் தோற்றம், உள்ளடக்கம் என்பவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

**1. குழாய் நீர் - Tap water**

இது குடிப்பதற்கு உகந்தது அல்ல. இது வீட்டுத்தேவைகளான சமைத்தல், வீட்டுத்தோட்டம், ஆடைகள் அலசுவதற்கு உகந்தது.

இது நகரசபை, மாநகரசபை மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மினரல் நீர் - Mineral water**

இது பல தாதுப்புகள்(mineral) செறிந்தது.

பொதுவாக கல்சியம் (Calcium) மக்னீசியம் (Mg) மங்கனீஸ் (Mn) என்பன அடங்கியுள்ளது. இதைவிட வேறு தாதுப்புகள் சேர்ப்பதில்லை. இது பல தரங்களில் சந்தைப்படுத்தப்படுகிறது. மேலுள்ள தாதுப்புகளின் அளவுகளின் வேறுபாட்டில் அவை வேறுபடுகிறது. தாதுப்புகள் அடங்கியுள்ளதால் இது சிறிய அளவு உப்புச் சுவையானதாக இருக்கும்.

**3. மழைநீர் - Spring water**

மழை நீரினை சேகரித்து வைப்பதன் மூலம் குடிப்பதற்கு பயன்படுத்தலாம். இது குடிப்பதற்கு உகந்தது.

**4. கிணற்று நீர் - well water**

**5. தூய்மையாக்கப்பட்ட நீர் - Purified water**

இந்த நீர் பல முறைகளினூடாகத் தூய்மையாக்கப்படுகிறது. இதன் மூலம் இதிலுள்ள பக்ரீறியாக்கள் வேறு தொற்றுக்கள் படியும் பொருட்கள் எல்லாம் நீக்கப்படுகிறது. இது குடிப்பதற்கு மிகவும் உகந்தது. இதனை கடைகளில் வாங்க முடியும்.

**6. தாதுப்புகள் நீக்கப்பட்ட நீர் - Distilled water or Dimineralised water**

இங்கு பல முறைகளினால் தாதுப்புகள் நீக்கப்படுகிறது. அதாவது ஊடுபரவல், வடித்தல் (Reverse osmosis and Distilation) மூலம் தாதுப்புகள் நீக்கப்படுகிறது. இது குடிப்பதற்கு பரிந்துரைக்கப் படவில்லை. இதை அருந்துவதால் தாதுப்புகள் குறைபாடு ஏற்படலாம். இதைத் தொடர்ந்து அருந்தும்போது விரைவாக Na, K, CL, Mg என்பன உடலில் குறைவடையும்.

**7. காபனேற்றம் செய்யப்பட்ட நீர் - Sparkling water**

இது காபனேற்றம் செய்யப்பட்டது. உதாரணமாக கடைகளில் உள்ள சோடாக்கள் காபனேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## மனித உடலில் நீரின் தொழிற்பாடுகள்

### நீர் எவ்வாறு உடலின் ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமாகின்றது?

1. கழிவுகளை வெளியேற்ற உதவுகிறது.
2. உடலின் வெப்பநிலையைச் சீராக்க உதவுகிறது.

   உடல் வெப்பநிலை சீராக இருப்பதற்கு சரியான நீர் அளவு உடலில் இருப்பது அவசியமாகிறது.

   வெப்பத்தைச் சீராக்குவதற்காக வெயில் காலங்களில் அதிக வியர்வை வெளியேறி வியர்வை எமது உடலை குளிர்ச்சியாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக உடற்பயிற்சியின் போதும் அதிக வியர்வை வெளியேறுகிறது. உடலில் இருந்து இழந்த நீரை எடுக்காதபோது உடல் வெப்பநிலை அதிகரிக்கிறது.

3. உமிழ்நீர் சுரக்க உதவுகிறது.
உமிழ்நீரின் பிரதான பொருள் நீராக உள்ளது. அதனுடன் சிறிய அளவில் மின்அயனிகள், நொதியங்கள் என்பன உண்டு. உணவை உடைப்பதற்கும் சமிபாட்டை ஆரம்பிக்கவும் உதவும். அத்துடன் வாய்ச்சுகாதாரத்திற்கும் அவசியமாகிறது.

4. மூளையின் செயற்பாட்டை வினைத்திறனுடன் செயலாற்ற உதவுகிறது. ஆராய்ச்சியில் நீர் இழப்பு (dehydration) மூளையின் ஞாபக சக்தியைக் குறைக்கிறது. 75% ஆன மூளை நீரால் உருவாக்கப்பட்டுள்ளது.

5. திசுக்கள் (tissues), தண்டுவடம் (Spinal cord), மூட்டுகள் (joints) என்பவற்றைப் பாதுகாக்க உதவுகிறது. எலும்பு மூட்டுக்களில் Lubricate, Cushion போன்று தொழிற்படுகிறது. உராய்வு நீக்கியாக இருப்பதனால் நாம் எமது அசைவுகளை இலகுவாக நோவின்றிச் செய்யக்கூடியதாக உள்ளது.

6. சமிபாடு நன்றாக நடைபெற உதவுகிறது. சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும், சாப்பிடும் போதும் நீர் அருந்துவது நல்லது என்று வல்லுனர்கள் கூறுகின்றனர்.

7. சத்துக்களை அகத்துறிஞ்சுவதற்கும் இது உதவுகிறது. விற்றமின்கள், தாதுப்புகள் போன்ற நீரில் கரையக் கூடிய சத்துக்கள் கரைந்து உள்ளெடுக்க உதவுகிறது.

8. உடல் எடையை குறைக்கவும் உதவுகிறது. அதிக பருமனாக உள்ளவர்கள் உடல் எடையைக் குறைப்பதற்கு உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சியில் உள்ளபோது வேண்டியளவு நீர் அருந்துவதும் உடல் எடையைக் குறைக்க உதவும்.

9. உடலில் இரத்தம் மூலம் ஒட்சிசன் கடத்துவதற்கும் இது உதவுகிறது.

10. இது எமது உடலின் அனுசேபத்திற்கு உதவுகிறது. உடல் உற்சாகமாக இருப்பதற்கு உதவுகிறது. போதியளவு நீர் அருந்தாவிடின் தசைகளில் வலி, சோர்வு, குழப்பம், மறதி, பயம், பதட்டம் போன்றனவும் ஏற்படும்.

11. எமது தோலின் ஈரலிப்பிற்கும் கொலாஜின் உருவாதலுக்கும் உதவுகிறது.

12. உடலின் கழிவுகளை வெளியேற்றவும் இது உதவுகிறது. இது வியர்வை, சிறுநீர், மலம் மூலம் கழிவுகளை வெளியேற்ற உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரால் பரவும் சில நோய்களும், நோயின் அறிகுறிகளும்

### 1. நெருப்புக் காய்ச்சல் - Typhoid fever

தொற்றுக்குள்ளான நீரை (Conteminated water) ஒருவர் அருந்துவதன் மூலம் அல்லது உணவிற்கு பயன்படுத்தி அதனை ஏதும் வகையில் உள்ளெடுக்கும் போது நெருப்புக் காய்ச்சல் ஏற்படுகிறது.

தொற்றுக்குள்ளான நீர், உணவு, தூய்மையற்ற பழக்கவழக்கங்கள் (Poor hygiene) போன்றவற்றின் மூலம் இது பரவுகிறது. அதாவது Samonella enterica serotype Typhi என்ற பக்ரீறியா மூலம் பரவுகிறது. இதன் தொற்று வீதம் அதிகமானது.

அறிகுறிகள் - காய்ச்சல் - இது படிப்படியாக அதிகரிக்கும்.
தலைவலி
உடல் சோர்வு, வியர்வை
வயிற்றோட்டம், மலச்சிக்கல்

தூய்மையற்ற இடங்களுக்குச் செல்வோர் முற்கூட்டியே பயணம் செய்யமுன் (Vaccine) தடுப்பு ஊசி ஏற்றிக் கொள்ள வேண்டும்.

### 2. கொலரா - Cholera

தூய்மையற்ற வறிய இடங்களில் இது அதிகமாகப் பரவுகிறது (சேரிப்புறங்கள்). வயிற்றோட்டம், வாந்திபேதி மூலம் அதிக நீரிழப்பு உண்டாகும். இறப்பு வீதம் அதிகமானது.

அறிகுறிகள் - வயிற்றுப் பிரட்டல், வாந்திபேதி, வயிற்றோட்டம், தசைகளில் வலி

### 3. வயிற்றுளைவுடன் வயிற்றுப்போக்கு - Dysentery

இது சிறுகுடலில் உண்டாகும் தொற்றாகும். அதிக வயிற்றோட்டத்துடன் சீதபேதியும் உண்டாகும். மலத்துடன் இரத்தம், சீதம் என்பனவும் வெளியேறும். இது மோசமான சுகாதாரப் பழக்கவழக்கங்கள் மூலம் பரவுகிறது. இது பக்ரீரியா, அமீபா, பரசைட் என்பவற்றின் தொற்றாக இருக்க முடியும்.

அறிகுறிகள் - வயிற்றுவலி, வயிற்றோட்டம், காய்ச்சல், வயிற்றுபிரட்டல்
நீர் இழப்பு என்பன உண்டாகும்.

### 4. ஹெப்படைடிஸ் - Hepatitis A

இது ஈரலில் (Liver) ஏற்படும் கிருமித் தொற்றாகும். இது தொற்றாகிய நீர் மூலம் அல்லது உணவு மூலம் அல்லது தொற்றானவர்களுடனான நேரடித் தொடர்பு மூலம் பரவுகிறது.

அறிகுறிகள் - உடற்சோர்வு, வாந்திபேதி, வயிற்றுப்பிரட்டல், வயிற்றுவலி, திடீர் காய்ச்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. சொறி சிரங்கை - Scabies**

இது தோலில் உண்டாகும் தொற்று நோயாகும். அதிக நெரிசல் உள்ள இடங்களில் இது பரவுகிறது. தனிமனித சுகாதாரம் (Self hygiene) மிகவும் முக்கியம்.

**அறிகுறிகள் :-**

கைகளில் விரல்களிற்கு இடையில் பருக்கள் (Pimples) உண்டாகும். மணிக்கட்டுகள், முழங்கை, ஆண்குறி, மார்பகம், தோள்மூட்டுகள் போன்ற இடங்களில் அதிக அரிப்பும் சொறியும் தன்மையும் உண்டாகும். இரவில் கடி அதிகமாக இருக்கும்.

**6. குடற்புழுத் தொற்று - worm Infestations**

இது parasites மூலமும், உணவு, குடிநீர் மூலமும் பரவும். இதில் பலவகை உண்டு. அவை நாடாப்புழு, கொக்கிப்புழு, சாட்டைப்புழு, நூல்புழு, உருண்டைப்புழு என்பனவாகும்.

அறிகுறிகள் - வயிற்றுப்பிரட்டல்
பசியின்மை
வயிற்று வலி
நிறை குறைதல்

சமைத்த உணவுகளை உண்ணல், நன்றாக அவித்த இறைச்சியை உண்ணல், வெறுங்காலுடன் நடப்பதைத் தவிர்த்தல், மலசல கூடங்களில் மலம் கழித்தல், கைகளை உணவு சமைக்க முன், உண்ண முன், மலங்கழித்த பின் சவர்க்காரமிட்டு நன்றாகக் கழுவுதல் என்பவற்றினைக் கடைப்பிடிப்பதன் மூலம் குடற்புழுத் தொற்றினைக் குறைக்க முடியும்.

## நீரால் பரவும் நோய்களைத் தடுக்கும் முறைகள்

உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளின் படி நீரால் பரவும் நோய்கள் மூலம் ஒரு வருடத்தில் 1.8 மில்லியன் மக்கள் உலகளாவிய ரீதியில் இறக்கின்றனர். இதில் பெரும்பாலானோர் சிறுவர்கள் ஆவர் எனவே பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீரால் பரவும் நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

1. கொதிக்க வைத்து வடிகட்டிய நீரை அருந்துதல்.

2. நீரை சுத்தமான பாத்திரத்தில் சேகரித்தல்.

3. உணவை சமைக்க முன்னரும், சாப்பிட முன்னரும் கைகளை நன்றாகக் கழுவுதல்.

4. மரக்கறிகள், பழங்கள் என்பவற்றையும் நன்றாகக் கழுவுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மலம் கழித்த பின்னர் கைகளை சவர்க்காரம் அல்லது கை சுத்திகரிப்பானைப் பாவித்து நன்றாகக் கழுவுதல்.

6. சிறுவர்களது டயப்பர்கள் (Diappers) அல்லது நப்கின்கள் (Napkins) மாற்றிய பின்னரும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.

7. வீட்டில் சமைத்த உணவுகளை உண்பது சிறந்தது. கடைகள் தெருக்களில் விற்கும் உணவுகளைத் தவிர்ப்பது நன்று.

8. உணவுகளை மூடிப் பாதுகாத்தல்.

9. நீரை விநியோகிக்கும் தாங்கிகள், குழாய்கள், கொள்கலன்கள் என்வற்றினது தூய்மையையும் உறுதிப்படுத்துதல். அவற்றைத் தினமும் சுத்தம் செய்தல்.

10. மலசல கூடங்களை சுத்தமாகப் பேணல். தொற்றுநீக்கிகளை ஊற்றி நன்றாகக் கழுவுதல்.

11. மலசல கூடத்திற்கும் கிணற்றிற்கும் குறைந்தது 100 அடி இடைவெளி இருக்கக் கூடியவாறு மலசல குழிகளை அமைத்தல்.

12. பாதணிகள் இன்றி நடப்பதைத் தவிர்த்தல்.

13. பயணத்தின்போது குடிப்பதற்கு சுட்டாறிய நீர் கொண்டு செல்லல்.

14. நீரால் தொற்றும் நோய் பரவியவர்கள் நோய்குணமாகும் வரை வீட்டில் இருப்பது நன்று. வேலைக்கோ அல்லது பொது இடங்களுக்கோ செல்வதைத் தவிர்ப்பது நன்று.

**புத்தகங்களைத்**
**திறந்துகொண்டே இருங்கள்.**
**அது உங்களுக்கான**
**ஜன்னல்களைத்**
**திறந்துகொண்டே இருக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் - 19 இற்கு மத்தியில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தலும் பசுமை வீட்டுத்தோட்ட கருத்திட்டமும்

சீனாவின் ஊகான் நகரில் உருவாகிய கொவிட் - 19 என அழைக்கப்படும் கொரோனாவானது இன்று உலக நாடுகள் அனைத்தையும் விரல் நுனியில் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் இச்சிக்கல் நிலைமையானது மனித இனத்தைப் பாதிப்பதை விட பொருளாதார ரீதியில் பாதிப்படையச் செய்வதை அவதானிக்க முடிகின்றது. பாரம்பரிய வாழ்க்கைமுறை எப்போது மாற்றம் பெறத் தொடங்கியதோ அன்றிலிருந்து கொரோனா போன்ற பல சவாலான நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டுள்ளான். இவ்வாறான சவால்களை எதிர்கொள்ளுதலில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச பசுமை வீட்டுத்தோட்டத்தின் சாத்தியப்பாடுகள் எனும் தலைப்பில் இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.



திருமதி.சுகன்ஜா பானுமகேந்திரா
மாசார்,
பளை.

பச்சிலைகளால் சூழப்பட்ட பிரதேசம் என்பதனால் பச்சிலைப்பள்ளி என அழைக்கப்படும் இப்பிரதேசம் பதினெட்டுக் கிராமசேவகர் பிரிவுகளையும், நாற்பத்தைந்து கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. இப்பிரதேசமானது வளமான நீரையும், காய்கறிப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நில அமைப்பையும் கொண்டுள்ளமையினால் அன்றிலிருந்து இன்றுவரை பயிர்ச்செய்கையானது சிறப்புற்றிருப்பதைக் காணமுடிகின்றது. பல ஏக்கர்க்கணக்கான தென்னந் தோப்புகளும், வயல்களும் அவற்றைச் செழுமைப்படுத்துவதற்கென ஆங்காங்கே அமையப்பெற்றிருக்கும் குளங்களும் பசுமை வீட்டுத்தோட்டத்திற்கான சாத்தியப்பாட்டினைப் பறைசாற்றுகின்றன.

ஆரம்ப காலங்களில் கால்நடை வளர்ப்பின் மூலம் கிடைக்கும் எருக்களையும், குப்பைக் கழிவுகளையும் கூட்டெருவாக உருவாக்கி விவசாயத்தை மேற்கொண்ட மக்கள், பிற்பட்ட காலப்பகுதிகளில் இரசாயனப் பாவனைகளை அதிகரிக்கத் தொடங்கினர். வேகமான பொருளாதார வளர்ச்சிக்காக, அதிகரித்துவரும் சனத்தொகைப் பிரச்சினையை சமாளித்துக்கொள்ளும் நோக்கில் உருவாக்கிய புதிய இயந்திரப் பாவனைகள், போக்குவரத்து வாகனங்களின் பாவனைகள், இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடுகள் போன்ற வேலையை இலகுவாக்கும் கருவிகளின் மூலம் நமது ஆரோக்கியத்தைக் கேள்விக்குறியாக்கி விட்டிருக்கும் துர்ப்பாக்கியமான நிலைமையினுள் முடங்கிப்போயிருக்கும் மனித இனத்திற்குள் சவால்விடும் வகையில் கொவிட் 19 போன்ற உயிர்களைக் காவுகொள்ளும் கொடிய நோய்களின் தாக்கத்தினால் அன்றாடச் செயற்பாடுகளையே மேற்கொள்ள முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்கிடையிலான, மாகாணங்களுக்கிடையிலான, மாவட்டங்களுக் கிடையிலான, பிரதேசங்களுக்கிடையிலான, கிராமங்களுக்கிடையிலான, வீடுகளுக்கிடையிலான தொடர்புகளைக் குறைத்து எம்மைத் தனிமைப் படுத்துவதனால் எல்லாவற்றிற்கும் தீர்வு கிடைத்துவிடுமா? என்று கேட்டால், இல்லை என்றே கூறலாம். நோய் எதிர்ப்புசக்தியின்றி இருப்பதனால்தான் நோய்கள் அதிகமாகத் தாக்குகின்றன என்றால் நோய் எதிர்ப்புசக்தியை எவ்வாறு அதிகரித்துக்கொள்ளலாம் என்பதில் எமது கவனத்தைத் திருப்ப வேண்டியவர்களா கின்றோம். இரசாயனக் கலப்பற்ற உடனடி மரக்கறிகளைப் பெற்றுத்தரக்கூடிய வீட்டுத்தோட்டங்களை அமைப்பது தான் சிறந்த தீர்வென முடிவு செய்துகொண்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசமானது அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

ஆரம்பகாலம் முதல் இப்பிரதேசத்தில் வாழ்ந்தவர்களின் ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம், கமம் என்பவையே காணப்பட்டமையினால் வியாபாரம், பயிர்ச்செய்கை சார்ந்த அனுபவத்தில் கைதேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். குறிப்பிட்ட இக்காலப்பகுதியில் மாத்திரமல்லாது நீண்டகாலமாகவே ஒவ்வொருவருடைய வீடுகளிலும் வீட்டுத்தோட்டம் என்பது அவர்களின் தேவைகளை மட்டும் நிறைவுசெய்து கொள்வதற்கு மாத்திரமன்றிப் பண்டமாற்றாகவும் செய்து கொள்வதற்காகப் பயிரிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் மாசார் பாடசாலைக்கு அண்மையிலுள்ள அருட்செல்வம் என்பவர் றம்புட்டான் மரக்கன்றின் மூலம் பழங்களைப் பெற்றுக்கொண்டமையும், குளிர்வலயங்களில் மட்டுமே பயிரிடப்பட்டு பயன்பெறக்கூடிய அப்பிள் மரக்கன்றினை லண்டனிலிருந்து கொண்டுவந்து அமரசிங்கம் என்பவர் பச்சிலைப்பள்ளியில் உருவாக்கியமை எமது மண்ணையும், இப்பிரதேச விவசாயியின் திறமையையும் எடுத்துக்கூறும் ஆதாரங்களாக அமைவு பெறுகின்றன. மேலும் அன்னாசி, திராட்சை என்பவற்றையும் பயிரிட்டு அவற்றின் பயன்களையும் பெற்றுக்கொண்டார்.

இங்கு அதிக குளங்கள் காணப்படுகின்றமையினால் நன்னீர் உள்ள பகுதியாக இருப்பதனாலும், ஆழம் குறைந்த கிணறுகளும் காணப்படுவதனாலும் வீட்டுத்தோட்டங்களை அமைப்பதற்கும், அதன் மூலம் அதிக விளைச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்குமான சாத்தியக் கூறுகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் எல்லைகளை எடுத்துக் கொண்டால் கிழக்கே சுண்டிக்குளத்தைக் கடந்து வங்கக்கடலில் தொடுகையுற்றிருப்பதும், தெற்கே ஆனையிறவுக் கடல் நீரேரியும், மேற்கே தென்மராட்சி எல்லைகளும், வடக்கே வீரக்களி ஆறும் என பசுமை நிறைந்த எல்லைகளாக விரிந்து கிடக்கும் பிரதேசங்கள் பசுமை வீட்டுத்தோட்டத்தை மேலும் பெறுமதி சேர்ப்பதாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கச்சிப் பகுதியில் காணப்படும் நன்னீர்க் கிணற்றிலிருந்து ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, உப்பளம், உமையாள்புரம் போன்ற பிரதேசங்களுக்கு இன்றும் கூட நன்னீர் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதனால் உவர் நிலமான அங்கும் கூட வீட்டுத்தோட்டங்களை மேற்கொள்ளும் சாதகமான நிலைமைகள் காணப்படுகின்றன.

விவசாயம் என்பது தொழில் அல்ல. அது எம் மனதோடு ஒன்றிணைந்தது. ஒரு தாய் தன் பிள்ளைக்குப் பாலூட்டுவதைப் போன்றது என்பதனை உணர்ந்து கொண்ட எமது பிரதேசமானது அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் 'செழிப்புமிக்க வீட்டுத்தோட்டம்' எனப்பெயரிடப்பட்ட திட்டத்தை அழகூட்டும் வகையில் கமநலசேவைகள் திணைக்களத்தினூடாக ஒவ்வோர் கிராம சேவகர் பிரிவுகளினூடாகவும் மக்களுக்கு பயன்தருகின்றதும், இங்கு விளைச்சலைத் தரக்கூடியதுமான பயிரினங்களின் விதைகளை வழங்கி ஊக்கமளிப்பதும் குறிப்பிடத்தக்கது.

167.7 சதுரகிலோமீற்றர் பரப்பளவு கொண்ட இப்பிரதேசத்தில் குடியிருப்புக்கள் விசாலமாக அமைந்திருப்பதனால் வீட்டுத்தோட்டம் செய்வதற்கு ஏற்ற இடப்பரப்பையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இடத்தின் விசாலத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டவேண்டிய பயிரினங்களைத் தெரிவு செய்வதும் சுலபமாக அமையும். இங்கு அநேகமான பிரதேசங்கள் சேதனச் சேர்வைகளை உரமாகப் பயன்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி பசுந்தாள் உரம் என்று சொல்லப்படும் ஒரு பயிர்ச்செய்கையின்போது மண்ணிலுள்ள ஊட்டச்சத்துக்கள் பயன்படுத்தப்பட்டு மண்ணின் வளம் குறைகையில் அதனை ஈடுசெய்வதற்காக வேறொரு பயிரை அந்நிலத்திலே பயிரிட்டு பயிர் வளர்ந்த பின்னர் அதே நிலத்தைப் பயன்படுத்தி பயிர்செய்யும் முறைகளையும் மேற்கொள்ளலாம். உதாரணமாக சணல் மற்றும் அவரை இனத் தாவரங்களைப் பயன்படுத்துதல்.

மேலும் ஏக்கர்க்கணக்கான தென்னந்தோட்டங்களிலிருந்து பொச்சுமட்டைகள் பதப்படுத்தப்பட்ட துண்டங்களாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வளத்தை வைத்திருக்கும் நாம் அதனுடைய பயன்பாட்டினை அறிந்துகொள்ளாமல் இருப்பது கவலைக்குரியதாகின்றது. பதப்படுத்திய துண்டங்களை நிலத்திலோ அல்லது சாடியிலோ வைத்து பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும்போது அது நீரை உறிஞ்சி வைத்திருப்பதோடு குறைந்தளவு உரத்தினையுமே பயன்படுத்தி செழிப்பானதும், அதிகமானதுமான விளைச்சல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதுமாக அமைகின்றது.

கோடை காலங்களில் மணல்மண்ணாகக் காணப்படும் பிரதேசங்களில் நிலம் வரட்சியடைந்தாலும் இப்பயன்மிக்க முறைகள் மூலமாகவும், கிணறுகள் மூலமும் நீரைப் பெற்று தோட்டப் பயிர்ச்செய்கையினை திறம்பட மேற்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த காலத்தின் பின்னர் காடுகள் அழிக்கப்பட்டு பெருகிவரும் சனத்தொகை அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு வழங்கப்படும் வீட்டுத்திட்டங்களின் மூலம் இயற்கையாகவே வளமான மண்ணுள்ள நிலப்பிரதேசங்கள் அதிக விளைச்சலைப் பெற்றுத்தரக்கூடியதாகவும் அமைகின்றது.

நகரங்களைப் போலல்லாது மரங்கள் மூலம் உருவாக்கிய வேலிகள் குளிர்ச்சியான சூழலை உருவாக்குவதோடு, கஞ்சல், குப்பைகள் உரமாகவும், வேலிக் குழைகளை உணவாக உட்கொண்டு கழிவகற்றும் கால்நடைக் கழிவுகளை தொழு உரங்களாகவும் பயன்படுத்திக் கொள்ளுதலும் சாத்தியமாகும். வேலிகள் காற்றோட்டமான சூழலை உருவாக்குவதனால் நோய்த்தாக்கங்களிலிருந்தும் பாதுகாப்பினைப் பெறுகின்றது. வேம்பு, கிளிசரீடியா, மாட்டின் சாணம் என்பன செலவின்றிக் கிடைப்பதனால் நோய்த்தாக்கம் ஏற்பட்ட பயிர்களுக்கு இவற்றைப் பயன்படுத்திச் செய்யப்படுகின்ற ஒருவகைப் பதார்த்தத்தினை கிருமிநாசினியாகப் பயன்படுத்தலாம்.

தர்மக்கேணி, ஊர்வணிகன்பற்று போன்ற பிரதேசங்கள் வண்டல் மண்ணாகவும், மாசார், காரயம்பாதி, மட்டிக்கோட்டை போன்ற பிரதேசங்கள் மணல் மண்ணாகவும் இருப்பதனால் இங்கு கச்சான், கத்தரி, கறிமிளகாய், மிளகாய், பாகல், பயிற்றை போன்ற பயிர்கள் பயிரிடுவதற்கு ஏற்ற சூழலைக் கொண்டுள்ளன. அத்தோடு அரசர்கேணி இராசவள்ளிக்கிழங்கிற்கும், சோரன்பற்று பாகற்காய்க்கும் என விசேட தன்மையினைப் பெற்றுக்கொள்வதனால் இப்பிரதேசமானது எல்லா வகையான பயிர்ச்செய்கைகளையும் மேற்கொள்ளக்கூடிய சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மெருகூட்டும் வகையில் அதிமேதகு ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் மிகவும் முக்கியமான எண்ணக்கருவாகக் கருதப்படுகின்ற 'பயனுள்ள பிரஜை மகிழ்ச்சியாக வாழும் குடும்பம்' எனும் எண்ணக்கருவை வலுப்படுத்தும் இருபது இலட்சம் வீட்டுத் தோட்டங்களை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைத்ததன் பின்னணி அமைகின்றது.

தற்போதய துரித உணவுகளினாலும், தவறான உணவுப் பழக்கங்களினாலும், சூழல் மாசுபாட்டினாலும் ஆரோக்கியமற்றவர்களாக வாழும் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி நிலைமையானது கேள்விக்குறியாக மாறிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், விழிப்புடன் செயற்படுபவர்களாக எம்மையும், எமது வாழ்க்கை முறையையும் மாற்றுவதன் மூலம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

கொரோனா போன்ற கொடிய நோய்கள் எம்மை விட்டு விலகிப்போகலாம், அல்லது அதனோடேயே நாம் வாழப்பழகிக்கொள்ள வேண்டும் எனும் நிலையினை அடைந்திருக்கின்ற இவ்வேளை; அது ஒரு பாரிய பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தி விட்டுவிடும் என்பதோடு தற்போது நம் சிந்தனைக்கு வராத சிக்கல்களையும் எதிர்கொள்ள வைக்கும் என்பதனை நாம் மறந்துவிடுதல் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டால் வைத்தியசாலை நாடுவது, திருவிழாக்களில் கலந்து கொள்வது, பொதுவான ஒன்றுகூடல்கள், குடும்ப நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல் போன்ற நிகழ்வுகள் மக்கள் மத்தியில் அச்சத்தை விதைத்து விட்டுள்ளது. மேலும் கொரோனாப் பரிசோதனைக்குப் பயந்து ஒழிந்து கொள்வதும், தனிமைகள் பல கசப்பான உணர்வுகளைத் தரவும், அயலவர்களின் முகக் கோணல்கள், வார்த்தை நெருடல்கள் தற்கொலைகளை அதிகரிக்கவும் எனப் பலவாறான கோணங்களில் விரிந்து செல்லும் எமது வாழ்க்கைப் பயணமானது தவறானதென உணரக்கூடியதாகவுள்ள அதேவேளை, இதற்கான தீர்வாகப் பண்டையகால வாழ்க்கை முறைதான் உகந்ததென கண்ணெதிரில் காட்சிப்படுத்துகின்றது.

தமக்குத் தேவையான உணவைத் தாமே உற்பத்தி செய்தல், தேவைப்படும் உணவினைப் பண்டமாற்றாகப் பெறுதல், உரலில் இடித்தல், அம்மியில் அரைத்தல், பொழுதுபோக்கிற்காக வீட்டுத்தோட்டம் அமைத்தல் இயற்கை உணவினை உட்கொள்ளுதல் போன்ற வாழ்க்கைப் பாடங்களை கொரோனா கற்றுத்தந்ததெனில் மிகையாகாது.

சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிப்பதோடு, எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற மூலிகைகள், இயற்கைக் கீரைவகைகள், மரக்கறிகள் என்பவற்றை வீட்டிலேயே நடுகை செய்வதனூடாக எமது ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.

நீண்டவெளிகளையும் காடுகளையும் கொண்ட இப்பிரதேசம் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதால் வேலிகளைத் தாண்டி பயிர்களை மேய்வதும், குரங்குகளின் ஆதிக்கம் காணப்படுவதனால் அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதும், மேலதிக உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வசதிகள் உள்ளனவா? என்ற சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வீட்டிலேயே தற்போது தங்கிநின்று வாழும் நிலையானது கால்நடைகள் மற்றும் குரங்குகளின் ஆதிக்கத்தைக் குறைத்துக் கொண்டாலும் சந்தைவாய்ப்பிற்கான ஒழுங்குகளை பிரதேசத்தோடு தொடர்புடையவர்கள் ஏற்படுத்தித் தருவதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வீட்டுத்தோட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது நாமே உற்பத்தி செய்த மகிழ்வு, புதிய காய்கறிகள் கிடைத்தல், ஆசையுடன் உண்ணுதல், ஆரோக்கியம், உறவுகள் பலமாதல், உடற்பயிற்சி, பொருளாதாரம் வளமடைதல், மனஅமைதி, மருத்துவச் செலவு குறைதல், சூழல் அழகுபெறல், பயனுள்ள பொழுதுபோக்கு, உளத்திருப்தி, வீணே வழிந்தோடும் நீரைப் பயனுள்ளதாக்குதல், மண்வளத்தைப் பயனாக்குதல், வீட்டுத்தோட்டத்திற்கு ஆதாரமான பண்ணைவளர்ப்பு புரதம் நிறைந்த உணவைப் பெற்றுத் தருவதோடு எருக்களைப் பயன்படுத்த முடிதல், நஞ்சற்ற மரக்கறிகளைப் பெறுதல், பழைய பொருட்களை மீள்சுழற்சி செய்தல், திறமைகளை வெளிக்காட்டுதல் போன்ற பல்வேறுபட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டு இலங்கை மழைநீர் சேகரிப்போரின் ஆயத்தினால் வீட்டுத்தோட்டத்தில் எண்ணிய இலக்கை அடைவதற்கான தேவையான அடிப்படை அறிவை வழங்குகின்றமையை எமது பிரதேசத்தின் கமநலசேவைகள் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

இப்பிரதேசத்தில் கொரோனா தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது அவர்களின் மனஅமைதியைக் கருத்திற்கொண்டு வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான ஊக்குவிப்புக்களைச் செய்து கொடுக்க வேண்டும். தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் காலங்களில் அக்குடும்பங்களுத் தேவையான பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதோடு, சுகாதார சேவையினரின் தொலைபேசி வழியிலான ஆலோசனைகள், ஆறுதல்கள் என்பன மேற்கொள்ளப்படுவதும் சிறப்பான விடயமாகக் கருதுகின்றேன்.

மொழி அழிந்தால் அதைச் சார்ந்த இனம் மட்டுமே அழியும், ஆனால் விவசாயம் என்ற ஒன்று அழிந்தால் இந்த உலகமே அழியும் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இன்றைய சூழ்நிலையில் முழுநாடும் அமைதியாக இருக்கின்றது, சாலைகள் சாந்தமாகியுள்ளன, காதுகள் இரைச்சல்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றுள்ளன, சர்வமத வழிபாட்டுத்தலங்கள் கதவடைக்கப்பட்டுள்ளன, இயற்கையானது நிம்மதியடைந்துள்ளது, வனவிலங்குகளின் உல்லாச ஊர்வலங்கள் ஆரம்பித்துள்ளன, உறவுகளைத் தேடும் மனிதர்கள் உணர்வுகளை மதிக்கத் தொடங்கியுள்ளனர், நேரமில்லை என வேகமாக இயங்கிக் கொண்டிருந்த மக்கள் அதிக நேரங்களைக் கையில் வைத்துக் கொண்டு வீண்பொழுதைக் கழிக்கும் நிலையிலுள்ளோம்.

இவ்வாறான நிலைமைகள் மனவுளைச்சலைத் தருவதால் வீணான பொழுதுகளை விளைச்சல் தரும் வீட்டுத்தோட்டங்களில் விதைப்போமானால் நாளை எதிர்கொள்ளப்போகும் பாரிய சவாலை இன்றே நாம் வெற்றி கொள்ளலாம். பிரதேச வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி ஆரோக்கியமான உணவுற்பத்தியை வழங்கக்கூடிய பசுமை வீட்டுத்தோட்டமானது எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை மிகவும் சாத்தியமானதெனக் கருதும் அதேவேளை, இது வெறும் ஆய்வுகளோடு நின்றுவிடாது நடைமுறையில் செயற்படுத்துவதில் தான் எம் எண்ணமும் நிறைவுபெறும்.

இத்தகைய சாத்திய நிலைமைகள் இனிமேல் கொரோனா அல்ல அதைவிடக்கொடிய நோயையும் எதிர்கொள்ளும் தன்மையை எம்முள் உருவாக்கும் என்பதை சவாலாகவே கூறிக்கொள்ள முடியும்.

பார்வைக் குறிப்புக்கள்

1. தொன்மையின் மூலங்கள் (நூல்)
2. இணையத்தளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியும் உள்ளூர் உற்பத்திகளும்

பச்சிலைப்பள்ளி பிரதேசமானது இயற்கை வளச் சோலைகள் நிறைந்த ஒரு பிரதேசமாகும். இப் பிரதேசத்திலே இயற்கை வளப்பரம்பல் செறிந்து காணப்படுகின்றது. அதாவது தெங்கு, பனை போன்றன முக்கிய மூலப்பொருள் வளங்களாகும். பச்சிலைப்பள்ளியைப் பொறுத்த வரையில் அன்றாட வேலையை நம்பியே பெரும்பாலான மக்கள் வாழ்கின்றனர். தெங்கை நம்பி அநேகமானோர் தமது வாழ்வை நடாத்துகின்றனர். தெங்கிலிருந்து பெறும் அனைத்து வளத்தையும் பணமாக்குகின்றனர்.



ம. லிதியா
தரம் – 13,
கிளி/பளை மத்திய கல்லூரி.

தெங்கிலிருந்து பெறும் தேங்காய், தேங்காய்ச் சிரட்டை, தென்னை ஈர்க்கு, தென்னம் தும்பு, தென்னை மட்டை, தென்னை ஓலை போன்ற பல பொருட்கள் பயன்தருகின்றன. வெயில் காலங்களில் குடிப்பதற்கு இளநீர் இதமான பானமாக பயன்படுத்தப்படுகிறது. தென்னம் தும்பு மூலம் பச்சிலைப்பள்ளி மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுகிறது. தென்னம் தும்பை திரித்து தும்புத்தடி செய்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. பச்சிலைப்பள்ளியில் தும்பு திரிக்கும் சாலைகள் காணப்படுகின்றன. அதாவது புலோப்பளை, வண்ணாங்கேணி, இத்தாவில் போன்ற இடங்களில் தும்புத்தொழிற்சாலை காணப்படுகின்றது.

தும்பின் மூலம் கிடைக்கும் பெறுமதிமிக்க வருமானத்தை பச்சிலைப்பள்ளி மக்கள் பெறுகின்றனர். எமது பிரதேசத்திலிருந்து அனேகமான உற்பத்தி வளங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேங்காயை தங்களது தேவைக்கு பயன்படுத்திய பின்பு தேங்காயிலிருந்து வரும் சிரட்டையினை அகப்பை செய்வதற்காக பயன்படுத்துகின்றனர். பச்சிலைப்பள்ளியை பொறுத்த வரையில் ஏழை எளியவரின் வாழ்வாதாரமாக தென்னை, பனை போன்றனவே காணப்படுகின்றன. இதன் மூலம் பெறும் வருமானத்தையே தங்கள் பிள்ளையின் கல்விக்காக செலவழிக்கின்றனர். தென்னை ஈர்க்கில் இருந்தும் விளக்குமாறு செய்யப்படுகிறது. விளக்கு மாறினை ஏனைய மாவட்ட மக்கள் அதிகம் வாங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். ஏனைய மாவட்டங்களைப் பொறுத்த வரையில் எமது பிரதேசத்தைப் போன்று வளங்கள் காணப்படுவதில்லை.

எமது பிரதேசத்தின் அடுத்த மிக முக்கிய வளமாக பனை காணப்படுகிறது. பனையிலிருந்து பனை ஓலை, பனை மட்டை, பனங்காய், நுங்கு போன்றன பெறப்படுகிறது. பனை ஓலையிலிருந்தே அதிகளவு உற்பத்திகளை பெறுகின்றனர். சுளகு, கடகம், பனம் பெட்டி, பாய், பனை ஓலை அலங்காரப் பொருட்கள் போன்றன பனை ஓலையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. வேறு பிரதேசங்களிலிருந்து எங்களுடைய பிரதேசத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பொருட்கள் அதிகளவில் கவருகின்றன. வடக்கு பிரதேசத்தில் அதிகளவான பனை உற்பத்தி பொருட்களே எதிர்பார்க்கப்படுகின்றன.

அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் தங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் உள்ளூர் உற்பத்திகள் பயன்படுகின்றன. தற்காலத்தில் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்து பனை உற்பத்திப் பொருட்களையே அதிகளவில் பயன்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக்கின் மூலம் வரும் சூழல் பிரச்சினைகளை நாமே குறைத்துக் கொள்ள வேண்டும். நாம் காக்க வேண்டிய சூழலை நாமே அழித்து விடக்கூடாது. பனையின் மூலம் கிடைக்கப்பெறும் பொருட்களுக்கு விலை / பெறுமதி அதிகரித்து காணப்படுகிறது. வெயில் காலங்களில் பிளாஸ்ரிக் பாயில் உறங்குவதற்குப் பதிலாக ஓலைப் பாயே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இது எமது உடலிற்கு குளிர்ச்சியைத் தருவது மட்டுமல்லாமல் உற்பத்தியின் பெறுமானத்தையும் அதிகரிக்கிறது.

பனையிலிருந்து கிடைக்கப்பெறும் பனை மட்டைகளே அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. உள்ளூர் உற்பத்திகளே எமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புகின்றன. பச்சிலைப்பள்ளியின் எதிர்காலம் எம் கைகளிலே தங்கியிருக்கிறது. வளத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் அதை பயன்படுத்தவும் வேண்டும். உற்பத்தியின் பெருக்கத்தையும் அதிகரிக்க வேண்டும். உற்பத்தி வளங்களை உற்பத்தி செய்து விநியோகித்து பணத்தை திரட்டிக்கொள்ள வேண்டும்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பதற்கென பளையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பனை உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையம் இயங்குகின்றது.

தற்காலத்தில் பனை போன்ற இயற்கை உற்பத்திகளுக்கே கேள்வி அதிகரித்துள்ளது. எமது நாட்டில் வெளிநாட்டினைப் போன்று பிளாஸ்ரிக் பாவனையே அதிகரித்துக் காணப்படுகிறது. ஆனால் தற்போது பிளாஸ்ரிக்கால் சூழல் பாதிப்படைகிறது என்று தெரிந்தவுடன் பனை உற்பத்திப் பொருட்களை அதிகளவில் நாடுகின்றனர். எமது பிரதேசத்தில் சிறந்த ஒளிமயமான எதிர்காலம் காணப்படுகிறது. அதைப் பெற்றுக் கொள்வது எம்முடைய கைகளிலேயே தங்கியுள்ளது.

எமது பிரதேசத்தில் காணப்படும் உள்ளூர் உற்பத்திகளை அடுத்த நாட்டினர் பயன்படுத்துவதை விட நாமே சிறப்பான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பலாம். சிறந்த பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்புவது நாளைய சந்ததியினரான எமது கைகளிலேயே தங்கியுள்ளது. உள்ளூர் உற்பத்தி வளங்களை வைத்திருப்பது மட்டுமல்லாமல் அதன் மூலம் பயன் பெற வேண்டும். எமது பிரதேசத்திலுள்ள தும்புத்தொழிற்சாலைகள் மூலம் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றனர். அதன் மூலம் பெறும் வருமானத்திலே தங்களுடைய பிள்ளைகளின் கல்வியை தொடர்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் உற்பத்திகளை நாம் அதிகம் விரும்புவதை விட ஏனைய பிரதேசத்தில் உள்ளவர்களே அதிகம் விரும்புகின்றனர். அதற்கான காரணம் அது எமக்கு தெரியாமலே போய்விட்டது. எமக்கு தெரிந்தாலே அதை நாம் அடுத்த சந்ததியினருக்கு எடுத்துக்கூறலாம். எமக்கு அதன் பெறுமதி தெரியாவிட்டால் அதை நாம் தெரிந்து கொள்ளாமலே விடுவோம். உள்ளூர் உற்பத்தியின் மூலம் பெறப்படும் பொருட்கள் செய்வதற்கென எமது பிரதேசத்தில் பல்வேறுபட்ட கருத்தமர்வுகள் இடம்பெறுகிறது. கொரோனா பிரச்சினையால் வேலைக்கு செல்ல முடியாதிருந்தாலும் எமக்கு தெரிந்த தொழிலை வைத்துக் கொண்டு பணம் திரட்டலாம். பனை, தென்னை மூலம் பெறும் உற்பத்தியை தெரிந்தவர்கள் வீட்டிலிருந்தவாறே பணம் திரட்டலாம்.

எழில் மிக்க நாலா பக்கமும் பச்சைப் பசேலென படர்ந்துள்ள பச்சிலைப் பள்ளியின் அழகே பனை, தென்னை போன்றனவாகும். பச்சைப் பசேலென காட்சி தருகின்ற இச் சோலையிலே உள்ளூர் உற்பத்தியை நாமே அதிகரிக்க வேண்டும். ஆகவே மாணவர்களாகிய எம்மில் இருந்தே உற்பத்தி அழகும் அதன் விருத்தியும் மேம்பட வேண்டும். மேலும் அதிக தும்புத் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும். பச்சிலைப்பள்ளியின் அழகு உற்பத்தியில் தெரிய வேண்டும்.

"நாமே எமது பிரதேச வளங்களை பேணிக் காத்து
வருமானம் பெறுவோம்"

**சிறியவர் என்று யாரையும்**
**அலட்சியமாக நினைக்கக் கூடாது.**
**உயர்ந்த அரிசி,**
**எளிய உமியின் துணைகொண்ட,**
**சாதாரண மண்ணில்**
**முளை விடுகிறது.**
**- வாரியார் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# H.P.Express

WORLD WIDE CARGO SERVICE

உள்ளூர் மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை





Railway Station Road, Pallai. TP: +94212284005/ +94762281759

# துர்க்கா

## நெற் & மல்ரி சொப்




புகையிரத நிலைய வீதி, பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவிற்கான சுதேச வைத்திய சிகிச்சை முறைகளும் அதன் நன்மைகளும்

நீரிழிவு நோயானது (Diabetes mellitus) ஒரு அனுசேபத்தைக் குழப்பும் வியாதியாகும். அனுசேபம் (metabolic) எனும் போது உண்ணும் உணவில் இருந்து சக்தியை (ATP) தொகுக்கும் செயற்பாடாகும். இந்த சக்தியானது எமது உடலை செயற்பட வைக்கத் தேவையானதாகும். இந்த அனுசேப குழப்பம் (metabolic Disorder) ஏற்படுவதனால் உடலானது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேர்கின்றது. களைப்பு, சோர்வு, மயக்கம், கைகால் உளைவு, தலைச்சுற்று அதிகளவான சிறுநீர் கழிப்பு என பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றது.



**Dr.புண்ணியமூர்த்தி ஸ்ரீகணேசன்**
BSMS (SL),
MSC. Hospital Administration
Certificate in Accupuncuture

உடலில் இருக்கின்ற சதையச் சுரப்பியின் தலைப்பகுதியில் காணப்படுகின்ற இலங்ககான் சிறுதீவுகளில் உள்ள பீற்றா கலங்களில் (Beta cells) சுரக்கப்படும் இன்சுலின் எனும் ஓமோனின் வகிபாகத்தில் ஏற்படும் மாற்றங்களால் இந்த நீரிழிவு நோய் ஏற்படுகின்றதெனலாம்.

1. இன்சுலின் சுரப்பு குறைவதனால்
2. இன்சுலினின் செயற்பாட்டைத் தடுப்பதனால்

**1. இன்சுலின் சுரப்பு குறைவதற்கான காரணங்கள் :**

i. பீற்றா கலங்களில் ஏற்படும் அழிவுகள் அல்லது சிதைவுகளால் இன்சுலின் சுரப்பு குறைதல்.

a) ஏதாவது நோய்நிலைகளில்
b) ஏதாவது விபத்துகளால் சதையி சிதைவடைதல்

ii. அளவிற்கதிகமான உடற்பருமன் காரணமாகவும் அளவிற்கதிகமான உணவை உட்கொள்வதனாலும் ஆரம்பத்தில் சதையச் சுரப்பி மிக அதிகமாக இன்சுலினைச் சுரக்கும் நிலைக்கு உள்ளாக்கப்படும். இந்த அளவிற்கதிகமான இன்சுலின் சுரப்பு நாளடைவில் குறையத்தொடங்கும்.

iii. இன்சுலின் சுரப்பிற்குத் தேவையான நுண் புரதச்சத்து குறைபாடுகளினாலும் (micro Protien) இன்சுலின் சுரப்பு குறைவடையும்.

iv. பரம்பரை காரணங்களாலும் இன்சுலின் சுரப்பு குறைவாக இருக்கும்.

**2. இன்சுலின் செயற்பாட்டைத் தடுப்பவை :**

i. தைரொக்சின் சுரப்பு அதிகமாக இருந்தால் (Thyrotoxicosis) தைரொக்சின் இன்சுலின் செயற்பாட்டை தடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. கர்ப்ப காலத்தில் (Gestational diabetes) தொப்புள்கொடி மற்றும் சூல்வித்தகம் (Placenta) என்பவற்றில் சுரக்கும் ஓமோன் இன்சுலினின் செயற்பாட்டைத் தடுக்கும்.

iii. அளவிற்கதிகமான உடற்கொழுப்பு இன்சுலின் செயற்பாட்டைத் தடுக்கும்.

iv. மந்தபோசணை (Poor nutrition), அளவிற்கதிகமான கொழுப்புணவுகள் என்பன இன்சுலின் சுரப்பைக் குறைக்கும்.

v. உடற்பயிற்சி இன்மை.

vi. சோர்டிசோல் (Cortisol), வளர்ச்சி ஓமோன் (growth hormone) போன்றவை அளவிற்கதிகமாக சுரந்தால் இன்சுலின் செயற்பாட்டைத் தடுக்கும்.

**நீரிழிவு நோய்க்குப் பாவிக்கப்படும் மருந்துகளும் அதன் விளைவுகளும்**

பொதுவாக அலோபதி மருத்துவர்கள் நீரிழிவு நோய்க்கு கீழ்வரும் மருந்துகளைப் பரிந்துரைக்கின்றார்கள்.

1. மெட்போமின் (Metformin) (Biguanides)
2. டொல்பியூட்டாமைட் (Tolbutamide) (Sulfonyle)
3. கிளிகிளாசிட் (Gliglazide) (Sulfonyl ureas)
4. டயோனில் (Dionil) (Glibenglomide) (gliburide)
5. கிளம்பிரைட் (Glimbride) (Sulfonyl Ureas)
6. கிளிபிசைட் (Sulfonyl Ureas)
7. பயோகிளிட்டா சோன் (Pioglitazone) - Thiazolidinedione
8. இன்சுலின் - ஊசிமருந்து

இவை பொதுவாக நீரிழிவைக் கட்டுப்படுத்த வல்லவை. ஆனால் நீண்ட காலப் பாவனையில் பல்வேறு பக்கவிளைவை ஏற்படுத்துகின்றன.

1. இரத்தத்தில் சீனியின் அளவை மிகக்குறைக்கும். அதன் விளைவாக தலையிடி, களைப்பு, குமட்டல் என்பன ஏற்படும்.

2. தொடர்ச்சியான மருந்துப் பாவனையால் வயிற்றுக்குழப்பம், வயிற்றுவேதனை, வயிற்றுப்புண் என்பன ஏற்படும்.

3. தோல்களில் அரிப்பு மற்றும் கறுப்புகள் (Rashes) ஏற்படும்.

4. நீண்டகாலப் பாவனையால் ஈரல்சிதைவு மற்றும் சிறுநீரகக் கோளாறு / செயலிழப்பு ஏற்படும்.

5. நிறைக்குறைவு / வறட்சியான தன்மை, சிலருக்கு நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான பக்க விளைவுகளால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அனேகமானோரை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ள சுதேச மருத்துவத்தினை நாடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

### நீரிழிவிற்கான சுதேச மருந்துகள்

1) குடிநீர் வகைகள் :-
   1. ஆவிரைக் குடிநீர் - 30ml காலை / மாலை வெறுவயிற்றில்
   2. திரிபலாக் குடிநீர் - 30ml காலை / மாலை வெறுவயிற்றில்
   3. வெந்தயக் குடிநீர் - வெந்தயத்தை இரவு ஊற வைத்து காலையில் 30ml குடித்தல்.
   4. கடல்ராஞ்சிப் பட்டைக் குடிநீர் - 30ml காலை மாலை சாப்பாட்டுக்கு முன் குடித்தல்.

2) சூரண வகைகள் :-
   1. மதுமேகச் சூரணம் - 15g காலை/இரவு சாப்பாட்டிற்கு முன்
   2. அமுதுசர்க்கரை சூரணம் - 15g காலை/இரவு சாப்பாட்டிற்கு முன்
   3. திரிபலா சூரணம் - 15g காலை/இரவு சாப்பாட்டிற்கு முன்

3) பான வகைகள் :-
   1. மதுமேக கரணி - 15ml காலை/இரவு சாப்பாட்டிற்கு முன்
   2. மது சமணி - 15ml காலை/இரவு சாப்பாட்டிற்கு முன்

4) மாத்திரைகள் :-
   மதுமேக வட்டி<br>சோமநாத ரச } வைத்தியரின் பரிந்துரைப்படி


இவற்றை அலோபதி மருந்துகளைப் பாவிக்கும் ஒருவர் உடனடியாக அதை நிறுத்தாது ஆயுள்வேத வைத்தியரொருவரின் பரிந்துரைப்படி அதனோடு சேர்த்துப் பாவித்துவர வேண்டும். நாளடைவில் சீனியின் அளவு படிப்படியாகக் குறைந்து வர அலோபத் மருந்தைக் குறைத்து ஆயுள்வேத மருந்தை தொடர்ச்சியாகப் பாவித்து வரலாம். இதனால் பக்கவிளைவுகளின் உக்கிரத்தை குறைத்துக்கொள்ள முடியும்.


மேலும் நீரிழிவு நோயினால் ஏற்படும் கைகால் விறைப்பு (Numbness), அரிவு (Burnning sensation) என்பவற்றைக் குறைப்பதற்கும் மற்றும் ஆண்மைக் குறைவு, பாலியல் நாட்டமின்மை என்பவற்றைக் குறைப்பதற்கும் அமுக்கரா / அஸ்வகந்த சூரணம், அஸ்வகந்த தைலம் என்பனவற்றையும் சேர்த்துப் பாவித்து சுகம் பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் - 2020

| பிரதேச சபைகளை வலுவூட்டல் வேலைத்திட்டங்கள் | |
|---|---|
| வேலை விபரம் | ஒதுக்கீடு MN |
| பளை பஸ்தரிப்பிடத்தின் கடைகளின் அபிவிருத்தி. | 0.182 |






| UNDP வேலைத்திட்டம் | |
|---|---|
| வேலை விபரம் | ஒதுக்கீடு MN |
| இந்திராபுர உள்ளக வீதிகள் திருத்தம் | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| CSR நிதி வேலைத்திட்டம் | |
|---|---|
| வேலை விபரம் | ஒதுக்கீடு MN |
| இயக்கச்சி விநாயகபுரம் பொதுநோக்கு மண்டப வீதி திருத்தம் | 0.98 |




சபை நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் - 2020

| இல | வேலை விபரம் | ஒதுக்கீடு MN |
|---|---|---|
| 01. | இயக்கச்சி கோழி இறைச்சிக்கடை திருத்த வேலை | 0.029 |
| 02. | பத்தாவளை வீதி நிர்மாணம் | 0.420 |
| 03. | இயக்கச்சி உபஅலுவலக வீதி மீளமைத்தல் (சல்லியடி பிள்ளையார் வீதி, சாவித்திரி மயான வீதி) | 1.5 |
| 04. | புலோப்பளை உபஅலுவலக வீதி மீளமைத்தல் (புலோப்பளை கிழக்கு உள்ளக வீதி, வைரவர் கோவில் முல்லையடி வீதி) | 1 |
| 05. | முகமாலை உபஅலுவலக வீதி மீளமைத்தல் (அரசர்கேணி உள்ளக வீதி, கிளாலி பழம் பிள்ளையார் வீதி, இத்தாவில் உள்ளக வீதி) | 2.250 |
| 06. | புலோப்பளை உபஅலுவலக குழிமூடி புனரமைத்தல் | 0.068 |
| 07. | ஆயுள்வேத கட்டிட மிகுதி வேலை (முன்பள்ளி) | 1.812 |
| 08. | கிணறு புனரமைத்தல் வேலை - முகமாலை | 0.05 |
| 09. | இயக்கச்சி பொதுக் கிணறு புனரமைத்தல் வேலை | 0.027 |
| 10. | பேராலை பிரதான வீதி மீள அமைத்தல் | 0.245 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| 11. | மாசார் சந்தை கம்பிக் கூடு புனரமைத்தல் வேலை. | 0.082 |
| 12. | முகாவில் பிரதான வீதி மீள அமைத்தல். | 0.351 |
| 13. | முல்லையடி வண்ணாங்கேணி வடக்கு இணைப்பு வீதி பாலம் அமைத்தல். | 0.672 |
| 14. | ஊர்வணிகன்பற்று உள்ளக வீதி மீள அமைத்தல். | 0.520 |
| 15. | வசந்தநிலா முன்பள்ளி பொதுக்கிணறு புனரமைத்தல் வேலை. | 0.033 |
| 16. | விளையாட்டு மைதான முதலாம் குறுக்கு வீதி அமைத்தல். | 0.590 |
| 17. | நரசிம்ம வைரவர் கோவில் கிளைவீதி அமைத்தல். | 0.190 |
| 18. | வண்ணாங்கேணி குடியிருப்பு இரண்டாம், மூன்றாம் ஒழுங்கை அவசர வேலை. | 0.134 |
| 19. | பளை சந்தைத் தொகுதியை புனரமைத்தலும், மேம்படுத்தலும் | 0.352 |
| 20. | இயக்கச்சி சந்தைக் கட்டிடம் புனரமைத்தல். | 0.095 |
| 21. | மனோ வீதி மீள அமைத்தல். | 0.5 |
| 22. | புலோப்பளை குப்பை கொட்டும் இடத்திற்கு பிரிகொட்டகை அமைத்தல். | 2.250 |
| 23. | வீதிகளுக்கான பெயர்ப் பலகை அமைத்தல். | 1.050 |
| 24. | குருக்கள் வீதி முதலாம் ஒழுங்கை மீள அமைத்தல். | 0.640 |
| 25. | சந்தைத் தொகுதியை சுற்றியுள்ள கட்டிடத்திற்கான அவசர வேலை. | 0.480 |
| 26. | பளை கடைத் தொகுதியை சுற்றியுள்ள கட்டிட அவசரவேலை | 0.128 |
| 27. | பேரூந்துதரிப்பிட கடைத் தொகுதியை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல். | 0.420 |
| 28. | புலோப்பளை முன்பள்ளியை மேம்படுத்தல். | 0.750 |
| 29. | வீட்டுத்திட்டம் குறுக்கு வீதி மீளமைத்தல். | 0.320 |
| 30. | புலோப்பளை உப அலுவலக மேம்படுத்தல் வேலை | 0.670 |
| 31. | கிளாலி மயான வீதி அமைத்தல். | 0.875 |
| 32. | இத்தாவில் நூலக கட்டிடம் (கட்டம் II) அமைத்தல் வேலை | 5 |

## சபைநிதி வேலைத்திட்டங்கள் - 2020



பத்தாவளை வீதி நிர்மாணம் - இயக்கச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புலோப்பளை உப அலுவலக கழிவு நீர்த்தொட்டி நிர்மாணம்

31 MAY 2022
யாழ்ப்பாணம்




இத்தாவில் உள்ளக வீதி திருத்தம்



கிளாலி பழம் பிள்ளையார் கோவில் வீதி திருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரசர்கேணி உள்ளக வீதி திருத்தம்



புலோப்பளை கிழக்கு உள்ளக வீதி திருத்தம்



வண்ணாங்கேணி குடியிருப்பு 2ம், 3ம் ஒழுங்கைகள் திருத்தம்




இத்தாவில் நூலகக்கட்டிடம் அமைத்தல் (கட்டம் 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாசார் சந்தைக்கான வேலி அமைத்தல்



வைரவர் கோவில் முல்லையடி இணைப்பு வீதி திருத்தம்



சாவித்தி மயான வீதி திருத்தம்



ஆயுள் வேத (முன்பள்ளி) கட்டிட திருத்தம் (கட்டம் 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிள்ளையார் அழகுமாடம்

A9 வீதி,
பளை.

TP: 077 0762 869




S.J.R Construction



தவசிகுளம், கொடிகாமம்.
உரிமையாளர் : ச.ஆனந்தராசா

TP: 077 9753 989
077 2454 025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செந்தமிழ் அழகுமாடம்

A9 வீதி, பளை .




அனைத்துவிதமான அன்பளிப்பு பொருட்களையும்
நியாயமான விலையில் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.



# லக்ஷ்மி மெடிக்கல் சென்டர்

## Luxshmi Medical Centre

021 – 4340055
077 – 2325881

பஸ் நிலையம் அருகாமை, பளை.





வைத்தியர் பார்வை நேரம் :-

காலை 9.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







31 MAY 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ISSN 2806-5298
9 772806 529009

சக்தி பதிப்பகம், மீசாலை – 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org